பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2030 வைகாசி 15 சனிக்கிழமை(29~05~1999) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 53

படையினர் - சிவில் அதிகாரிகள் பலாலிப் பேச்சில் முடிவில்லை!

மீண்டும் செவ்வாயன்று சந்திப்பு

யாழ்ப்பாணம்,மே29

விடுதலைப் புலிகளின் அறிவுறுத்தல்களை அடுத்து குடாநாட்டில் குழம்பிப்போயுள்ள சிவில் நிர்வாக நடவடிக்கைகளைச் சீர்செய்வது தொடர்பாக வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனா நேற்று பலாலியில் அரச சிவில் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்கள் பயன் ஏதும் எட்டாத நிலையில் முடிவடைந்தன.

யாழ். அரச அதிபர் மற்றும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் உயர் அதிகாரிகள் சுமார் 50பேர் அடங்கிய குழு இந்தப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றியது. முன்னதாக இந்த அதிகாரிகள் நேற்றுக் காலை 512ஆவது படையணியின் தலைமையகம் அமைந்துள்ள யாழ். ஞானம்ஸ் ஹொட்டேலுக்கு அழைக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து பலாலி இராணுவ முகாமுக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

தளபதி ஜெனரல் லொஹான் குணவர்த்தனவுக்கும் இந்த சிவில் அதிகாரிகளுக்கும் இடையே சுமார் மூன்று மணி நேரம் பேச்சு நடந்தது. சிவில் நிர்வாக அதிகாரிகளும், மற்றும் அரச ஊழியர்களும் புலிகளின் அச்சுறுத்தலை, அறிவுறுத்தலை உதாசீனம் செய்துவிட்டு இடையூறின்றி தமது கடமைகளைச் செய்ய வேண்டிய கடப்பாடுடையவர்கள் என்று தளபதி லொஹான் குணவர்த்தனா கோரினார்.

"அரச ஊழியர்கள் மனச்சாட்சிப்படி பணிபுரிய வேண்டும். புலிகள் முன்னைய பலமான நிலையில் இல்லை. எனவே அவர்களது அச்சுறுத்தலை ஒரு பொருட்டாகக் கருதத் தேவையில்லை. உங்களுக்குரிய பாதுகாப்பை நாங்கள் தருவோம். எனவே வழமையான பணிக்குத் திரும்புங்கள்" என்று கோரினார் ஜெனரல் குணவர்த்தனா.

ஆனால் சந்திப்பில் கலந்து கொண்ட யாழ் அரச அதிபர் க.சண்முகநாதனும் ஏனைய சுமார் ஐம்பது மூத்த சிவில் அதிகாரிகளும் அக்கோரிக்கையை தாங்கள் ஏற்கத் தயாராக இல்லை என்று அங்கு தெரிவித்தனர்.

புலிகளின் அறிவுறுத்தலை மீறி செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வேலைக்குத் திரும்புவதில் தங்களுக்குள்ள சிக்கலை அவர்கள் எடுத்துரைத்தனர்.

மூன்றுமணி நேரத்தின் பின்னர் இணக்கம் ஏதும் ஏற்படாமலே பேச்சுக்கள் ஒத்திவைக்கப்பட்டன.

அடுத்த செவ்வாய்க்கிழமை மீண்டும் சந்திப்புக்கு வரும்படி சிவில் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்த ஜெனரல் குணவர்த்தனா, அன்றைய தினம் வழமையான பணிக்குத் திரும்புவது குறித்து ஒரு தீர்க்கமான முடிவுடன் வருமாறு அவர்களைக் கோரியதாகவும் தெரிகின்றது.

ஆனால் "இன்று நாம் தெரிவித்த அதே நிலைப்பாட்டையே செவ்வாயன்

(8ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.அரச அலுவலகங்கள் நேற்றும் முற்றாக செயலிழப்பு

குடாநாட்டில் உள்ள அரச செயலகங்கள், திணைக்களப் பணிமனைகள் ஆகியவற்றை செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மூடுமாறு விடுதலைப்புலிகள் விடுத்த அறிவுறுத்தல் காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை மூன்றாவது நாளாக அரச செயலகங்கள், திணைக்களப் பணிமனைகள் என்பன முற்றாகச் செயல் இழந்தன.

கடந்த செய்வாய்க்கிழமை செயலிழந்திருந்த திணைக்களப் பணிமனைகளுடன் வடமராட்சியில் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்களும் நேற்று செயல் இழந்தன.

சுகாதாரசேவை, கல்வி, உயர்கல்விச்சேவை, போக்குவரத்துச்சேவை, வங்கிச்சேவை, தபால்சேவை ஆகியவற்றுடன் தொடர்புடைய பணிமனைகள் வழமைபோல் இயங்கின. பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இயங்கியது.

வேலைக்கு வராத ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை இல்லையாம்!

"யாழ். குடாநாட்டில் உள்ள அரச அலுவலகங்கள் மற்றும் திணைக்களப் பணிமனைகளுக்கு வாரத்தில் இரு தினங்கள் சமுகமளிக்காத ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடம் உண்டு. ஆனால் சிவில் நிர்வாகத்தைப் படையினர் மேற்கொள்வதால் உடனடியாக எந்த நடவடிக்கையையும் நாம் எடுக்க முடியாதுள்ளது."

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.சேனரத்தின மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்புச் செய்தி வட்டாரங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

"யாழ்.திணைக்களங்களை செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மூட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கடிதம் மூலம் அனுப்பிய தகவலை யாழ். அரச அதிபர் எமது அமைச்சுக்கு அனுப்பியிருந்தார்.

"எமது சட்டங்களின்படி வேலைக்குச் சமுகமளிக்காதவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் உள்ளோம்.

"யாழ். குடாநாட்டில் சிவில் நிர்வாகம் பாதுகாப்பு அமைச்சுடன் சம்பந்தப்பட்டது.

"வேலைக்குச் சமுகமளிக்காதவர்களை வேலைக்கு அழைக்க அவர்கள் முயற்சி எடுத்தள்ளனர்." - என்றார் அவர். (ஐ-3)

கொலன்னாவை பிரதேசத்தில் நேற்று தீவிர சோதனை!

கொழும்பு,மே29

கொலன்னாவையில் உள்ள எண்ணெய்க் குதங்களை விடுதலைப்புலிகள் தாக்கவிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்த அந்த இடத்தைச் சூழவுள்ள பகுதிகள் படையினரால் நேற்றுக் காலை சுற்றி வளைக்கப்பட்டன.

பொரளை, வெல்லம்பிட்டி, மருதானை, கொலன்னாவை ஆகிய பகுதிகளே இராணுவத்தினராலும் கடற்படையினராலும் நேற்றுக்காலை சுற்றிவளைக்கப்பட்டன.

அந்தப் பகுதியில் வசிக்கும் தமிழர்களின் வீடுகளில் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் எவரும் கைது செய்யப்படடதாகத் தகவல் வெளியாகவில்லை.

அத்துடன் கொலன்னாவை எண்ணெய்க்குதங்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

கொலன்னாவை மற்றும் ஊறுகொடவத்த எண்ணெய்க் குதங்கள் மீது முன்பு ஒரு தடவை விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் நடத்தி [illegible]

'ஸ்ரிங்கர்' ஏவுகணை மூலம் இந்திய ஹெலி வீழ்த்தப்பட்டது!

காஷ்மீர் தீவிரவாதிகள் கைவரிசை

ஸ்ரீநகர்,மே29

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் - காட்கில் பிரதேசத்தில் - ஊடுருவியுள்ள பாகிஸ்தான் ஆதரவு பெற்ற தீவிரவாதிகளை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய விமானப் படையின் 'எம்.ஐ.- 17' ரக ஹெலிக்கொப்டர் ஊடுருவல்காரர்களால் நேற்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்த ஹெலிக்கொப்டரில் இருந்த இரு விமானிகளுக்கும் இரு படையினருக்கும்என்ன நடந்தது என்பது குறித்து தகவல் இல்லை என இந்திய விமானப்படை தெரிவித்தது.

தரையில் இருந்து தாக்கும் 'ஸ்ரிங்கர்' விமான எதிர்ப்பு ஏவுகணை மூலமே தீவிரவாதிகள் இந்திய ஹெலியைச் சுட்டு வீழ்த்தியுள்ளதாக விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஊடுருவல்காரர்களை வெளியேற்றும் வான் தாக்குதல்களின் போது நேற்று முன்தினம் இந்திய விமானப்படை தனது இரண்டு 'மிக்' ரக போர் விமானங்களை இழந்தமை குறிப்பிடத்தக்கது. தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்ட மூன்றாவது நாளான நேற்று ஹெலிக்கொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறது.

இந்த ஹெலிகொப்டர் இந்தியாவின் நிர்வாகத்திலுள்ள காஷ்மீர் பிரதேசத்துக்குள் வைத்தே சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறது. புது டில்லியும் இஸ்லாமாபாத்தும் இதனை ஊர்ஜிதம் செய்துள்ளன.

ஹெலியைத் தாங்களே சுட்டு

(8ஆம் பக்கம் பார்க்க)



இந்திய விமானப்படையின் தாக்குதல்கள் இடம்பெறும் காட்கில் பிரதேசம் இது. பாகிஸ்தான் ஆதரவுடன் ஆப்கானிஸ்தானில் பயிற்சி பெற்ற முஸ்லிம் தீவிரவாதிகள் சுமார் 680 பேர் இப்பகுதிக்குள் 6 கிலோ மீற்றர் தூரம் ஊடுருவி வந்துள்ளதாக இந்தியா குற்றஞ்சாட்டி உள்ளது.

'லங்கா முடித்த' கப்பலுக்கு 200 பயணிகள் மட்டுமே!

யாழ்ப்பாணம்,மே29

காங்கேசன்துறையிலிருந்து இன்று திருகோணமலைக்கு புறப்படும் 'லங்கா முடித்த'கப்பலில பயணம் செய்வதற்கு 200 பயணிகள் மட்டுமே நேற்று காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கப்பலில் பயணம் மேற்கொள்ளப் போதியளவு பயணிகள் சமூகம் தரவில்லை என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் முதலாம் திகதி திருமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகள் இக்கப்பலில் காங்கேசன்துறைக்கு அழைத்து வரப்படுவர்.

அதன் பின்னர் கப்பல் கொழும்பு நோக்கிச் செல்லும். (ஐ-3-15-139)

பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரி மறுக்கிறார்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறைக் களஞ்சியத்தில் பெற்றோல், மண்எண்ணெய், டீசல் என்பன போதியளவு கையிருப்பில் உள்ளதாக யாழ்.பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்ததாகக் குறிப்பிட்டு கடந்த 25ஆம் திகதி உதயன் பத்திரிகையில் முதலாம் பக்கத்தில் வெளியான தகவல் தன்னால் வழங்கப்படவில்லை என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பதில் பிராந்திய முகாமையாளர் யோ.அ.அந்தனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

"காங்கேசன்துறையில் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் சேமிப்புக் களஞ்சியம் உள்ளது.

"வெளியே மக்களுக்கான விநியோகப் பணியை மேற்பார்வை செய்வது மட்டுமே இங்கு எமது அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுகின்றது - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

சிறுவர், பெண்களுக்கான ஆடைகள் தைப்பவர் தேவை.

தொடர்பு. துரைரத்தினம்,
55/1, சீனியர் ஒழுங்கை,
கலட்டி, வண்ணார்பண்ணை.

207, பலாலி வீதி,
கோண்டாவில். (66139)

மரண அறிவித்தல்கள்

திருமதி இராசலட்சுமி சிவராமலிங்கம்

தட்டாதெரு சங்கத்தானையைச் சேர்ந்த திருமதி இராசலட்சுமி சிவராமலிங்கம் அவர்கள் காலமானார்.

அன்னார் கொக்குவில் கிழக்கு, புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகசபை சிவராமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யோகரத்தினத்தின் அருமைச் சகோதரியும் வசந்தகோகிலம், ஜெயவதனி, விமலாதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும் சண்முகசுந்தரம் (பொறியியலாளர், நீர்ப்பாசனத்துறை), கரிகரன், மச்சேந்திரகுமார் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருச்செல்வி (ஆசிரியர்), திருமலர், திருக்குமரன், திருவேணி, பிரியங்கா, தனுக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30-5-99) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகள்: விமலாதேவி
மருமகன்: மச்சேந்திரகுமார்
(யாழ். பல்கலைக் கழகம்)

தட்டாதெரு, சங்கத்தானை,
சாவகச்சேரி. (66200)

முருகேசு சிவசுப்பிரமணியம் (பாலசிங்கம்)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிவசுப்பிரமணியம் (பாலசிங்கம்) 28—05—99 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கண்மணி தம்பதிகளின் இரண்டாவது மகனும் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சரசாதேவி (கனடா), மனோகரன் (சுவிஸ்), ஜெயக்குமார், ஜெயந்தி (சுவிஸ்), சபேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புண்ணியமூர்த்தி, பிரேமா, பவான், லோஜி ஆகியோரின் அன்பு மாமாவும் சோனியா, பிரணவன், யதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் கனகசிங்கம் (மண்கும்பான்), சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், குணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னபூரணம், தவம், சிவபாக்கியம் (கனடா), துரைராசா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஞானவைரவர்கோயில் வீதி, உரும்பிராய் கிழக்கிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (29-05-99) சனிக்கிழமை காலை 11-00 மணிக்கு இறுதிக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சிவகாமி
(மனைவி)

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (66183)

சௌந்தரராஜா கிறிஸ்ரி வசந்தகுமார்

இலங்கை வங்கி, வெள்ளவத்தைக் கிளையைச் சேர்ந்த ரஞ்சன் எனப்படும் சௌந்தரராஜா கிறிஸ்ரி வசந்தகுமார் காலமானார். அன்னார் சுகந்தினியின் அருமைக் கணவரும், நிரோஷனின் அன்புத் தந்தையும், பரிமளம் காலஞ்சென்ற ஜே. ஈ. சௌந்தரராஜா ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற திரு., திருமதி வின்ஸ்லோ சுகிர்தரட்ணத்தின் மருமகனும், டாக்டர் பிரேமினி அரியரட்ணம் (மார்புச் சிகிச்சை நிலையம் — கொழும்பு), காலஞ்சென்ற றதினி அருமைநாயகம், திருக்குமாரன் (முன்னாள் சாமுவேல் அன்ட் சன்ஸ் — கொழும்பு), சாந்தினி டானியல், ரவீந்திரகுமாரன் (கனடா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ள அன்னாரின் பூதவுடல் இன்று (29-5-1999) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும் நல்லடக்க ஆராதனையின் பின்னர் ஜாவத்தை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

கொழும்பில் அன்னாரின் நல்லடக்க ஆராதனை நடைபெறும் தினமான இன்று மாலை 4.00 மணிக்கு உடுவில் டச் வீதியில் உள்ள அன்னாரின் 'ரட்ண கிறீன்' வாசஸ்தலத்திலும் ஆராதனை ஒன்று நடைபெறவுள்ளது.

தகவல்:
சுகந்தினி

G — 2/5, அன்டர்சன் தொடர் மாடி,
கொழும்பு — 5.
தொலைபேசி 596903 (சி/7710)

தேடுதல்

அரியாலை, மே 29

கொழும்புத்துறை மேற்கு, பாஷையூர், சச்சமோட்டை, அரியாலை ஆகிய பகுதிகள் நேற்றுக் காலை ஒரே நேரத்தில் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

வீடு வீடாகச் சென்ற படையினர் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்களை பாஷையூர் பகுதிக்கு அழைத்து விசாரணை செய்த பின்னர் விடுவித்தனர். (உ-5-17-86)

உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 29

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்திவந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும், பரிசளிப்பு வைபவமும் இன்று பிற்பகல் 3: 30 மணி முதல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஏ. கே. ரி. கிருஸ்ணராசா தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணியும் குருநகர் பாடும்மீன் அணியும் மோதவிருக்கின்றன.

யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் எஸ். ரி. சணநாதன் பிரதம விருந்தினராகவும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்ரன் டி. ஏ. எம். குணசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றுவர். (உ-3)

BARATHY

சித்தங்கேணி.

O/L Day Class

புதிய பிரிவு ஆரம்பம்
31 - 05 - 99
திங்கள் காலை 8 மணி

இதுவரையிலும் அனுமதி பெறாத மாணவர்கள் இப்பிரிவிற்கு அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(69202)

பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

A/L 2000
வணிகக்கல்வி
பகுதி II
ஆரம்பம்: 30 - 05 - 99
12-00 மணி
ஆசிரியர்: வே. முரளி
(66201)

லிபேட்டி

தியேட்டர்
அச்சுவேலி
பிரபு - தேவயானி
நடித்த
கும்மிப்பாட்டு
காட்சிகள்; 10.30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(66140)

ராஜா 'B' திரையில்

ரஜனி - சௌந்தர்யா
மற்றும் பலர் நடித்த
படையப்பா
10.30, 2.30
(சி/7713)

வருடாந்த மகா சபைக் கூட்டம்

அல்வாய் வேவிலந்தை
ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

மேற்படி பொதுச் சபை எதிர்வரும் 06 - 06 - 99 ஞாயிறு காலை 10-30 மணியளவில் ஆலய மண்டபத்தில் கூட்டப்படும். பொதுச்சபை உறுப்பினர் அனைவரையும் தவறாது சமுகம் அளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

செயலாளர்
வே. பரராஜசிங்கம்

(சி/7716)

அரசாங்க அறிவித்தல்

சுகாதாரத் திணைக்களம்
யாழ்ப்பாணம்

வைத்தியசாலைத் துணிகள், சீருடைத்துணிகள் வழங்கல்.

சுகாதாரத்திணைக்களத்திற்கு வைத்தியசாலைத் துணிகள், சீருடைத் துணிகள் வழங்குவதற்கான கேளிவிப்பத்திரங்கள் என்னால் 11 - 06 - 1999 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் 31-5-1999 ஆம் திகதி முதல் 11 - 6 - 99 ஆம் திகதி காலை 10.00 மணி வரை எமது பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம். விரிவான விவரங்கள் தேவைப்படுவோர் பணிமனை நேரத்தில் எனது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பிப்போர் மாதிரிகளுடன் (SAMPLE) விண்ணப்பிக்க வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி குறிப்பிட்ட பொருள்களை ஒரு மாத காலத்திற்குள் எனது பணிமனையில் ஒப்படைக்க வேண்டும்.

வைத்திமகலாநிதி,
செல்வி உ. சிவபாதசுந்தரம்
பிராந்திய பல்வைத்திய நிபுணர்,
மாகாணப் பிரதிப் பணிப்பாளருக்காக,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

இல. 46, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம். (சி/7695)

வண்ணை
ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

கடை கட்ட கூலிக்கு மட்டும் விண்ணப்பம் கோரல்

எமது தேவஸ்தானத்துக்குச் சொந்தமான இல. 145, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

என்ற விலாசத்தில் அமைந்துள்ள காணியில் கீழ் காட்டப்பட்ட படி எட்டுக் கடைகள் கட்ட கூலிக்கு மட்டும் ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பம் கோரப்படுகின்றது.



மேற்படி எட்டுக் கடைகளுக்கும் சுருக்குக் கதவு செய்ய ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

குறிப்பு: ஒருகடை வெற்றிடம் உள்ளது. தேவைப்படுவோர் பதிவுசெய்து கொள்ளவும். மேலதிக விவரங்களுக்கு செயலாளருடன் தொடர்புகொள்ளவும்.

தங்கள் விண்ணப்பங்களை 05-06-99க்கு முன்னர் தேவஸ்தான காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

செயலாளர்,
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் ஆதீன மகாசபை.

(சி/7712)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னாலைக்கட்டுவன் வடக்கு,

நரசிங்க வைரவர் ஆலயம்

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

பிற்போடப்பட்டுள்ளது

இன்று 29-05-99 நடைபெறவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 29-06-99 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

(66134) மா இரத்தினசிங்கம்.

நியூ ஜெயா

தொலைத்தொடர்பு சேவை

மங்களகரமான திறப்புவிழா

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களை குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம் என்பதனை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தொலைபேசி இல:

- உள்நாடு: 021 – 2922
- வெளிநாடு: 0094 – 021 – 2922
- பக்ஸ் இல: 021 – 2922

173, அரசடி வீதி,
நல்லூர்.

[66178]

அறிவித்தல்

பண்டத்தரிப்பு

பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

நிதியாண்டு 01 . 03 . 1998 — 28 . 02 . 1999

காலத்துக்கான கணக்காய்வு

எமது சங்கத்தின் மேற்படி காலத்துக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் 01 . 03 . 1998 — 28 : 02 . 1999 வரை சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் தொடர்புடையவர்கள், கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருப்போர்கள், சங்கப் பணியாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் கணக்கு விவரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

இன்றில் இருந்து (14) பதினான்கு நாள்களுக்குள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

தவறும் பட்சத்தில் சங்கப் புத்தகங்களின்படி சரியென ஏற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்வு முடிவுறுத்தப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய இடம் :—
பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
பண்டத்தரிப்பு.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

[C/7700]

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 — 06 — 1905

மறைவு 10 — 06 — 1998

அமரர்

குமாரசாமி கந்தவனம்

(முன்னாள் பிரபல வர்த்தகர்-நெல்லியடி)

திதி: 29—05 - 1999

நெஞ்சமதில் நீங்காத நினைவு அலையாய்
வஞ்சற்ற உனது அன்பின் படியினை
மஞ்சகமாய் உறங்கி மகிழ்ந்த நாள்கள்
கெஞ்சினாலும் வராவே யுகங்கள் போயினும்!

விண்மீன் அங்காடி,
பிரதான வீதி,
நல்லூர்.
(66007)

31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

பொன்னுத்துரை மாணிக்கத்தம்பி

தம்பியின் பக்கத்திலே எப்போதும் இருக்க வேண்டும் என்று எண்ணிய எண்ணமெல்லாம் மண்ணாகிப் போனதண்ணா! மக்களோடு இருக்கவென்று மனைவியுடன் நீ சென்று மண்ணுக்குச் சென்றதென்ன மாணிக்கத்தம்பி அண்ணா! உங்கள் ஆருயிர் அன்புக்கு இணையாகுமா அண்ணா! மாணிக்கத்தம்பி என்று அம்மா, அப்பா வைத்த பெயருக்கேற்ப மாணிக்கமாய் வாழ்ந்த அன்பான அண்ணா! நீங்கள் எமைப் பிரிந்து இன்றுடன் முப்பத்தொரு நாளகளாகின்றன; எத்தனை வருடங்கள் சென்றாலும் உங்கள் அன்பு உருவம் எம்மைவிட்டு நீங்காதண்ணா! உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்புத் தம்பி பாலதாஸ்,
திருமதி பாலதாஸ், பிள்ளைகள்,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

[66040]

யூகேஈ டிஷ் அன்டெனா

மொத்த வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவு உண்டு

உலகின் ஒரு மூலையில் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டதாக ஆதங்கப்படுகிறீர்களா? இல்லவே இல்லை!!

உலகோடு உங்களை நொடிப்பொழுதில் இணைக்கும் பணியை ஏற்றுக்கொள்ள யூகேஈ நிறுவனத்தினர் தயாராகிவிட்டனர்!!!

தலைநகரிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தலைசிறந்த நிபுணத்துவம் மிக்க தொழில்நுட்பத்தில் செய்மதி டிஷ் அன்டெனாக்கள் மூலம் சர்வதேச அலைவரிசைகளை வழங்கியதில் முன்னோடிகள்

சில்லறையாகவும் மொத்தமாகவும் டிஷ் அன்டெனாக்களையும் உதிரிப்பாகங்களையும் மிகச்சாதாரண விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

UKAAYE 169, BODHIRAJA MAWATHA, COLOMBO -11.
(Gasworks Street, Pettah)
TEL : 075-370019 FAX : 075-370018

(கி/7693)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சமய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 29 கல்வியங்காடு அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ சண்முகப் பெருமானுக்கு சண்முக அர்ச்சனை நடைபெறும். தொடர்ந்து பிற்பகல் 4.30 மணிக்கு திருஊஞ்சலும் நிகழும். (ஐ)

★ ★ ★

வலி காமம் தெற்கு, மே 29 சுதுமலை புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை பகல் 10.30 மணிக்கும் தீர்த்தத் திருவிழா நாளை காலை 10.00 மணிக்கும் நடைபெறும்.

கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகிய வருடாந்த உற்சவ காலங்களில் தினமும் மாலை வேளைகளில் நடைபெற்று வந்த ஆறு திரு முருகனின் 'ஸ்ரீ தேவி பாகவதம்' பற்றிய தொடர் சொற்பொழிவும் 30 ஆம் திகதியுடன் நிறைவு பெறும். (ஐ 152)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 29 வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இன்று வைகாசி விசாகத் திருவிழாவை முன்னிட்டு பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகமும் 4.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் நடைபெறும்.

அதைத் தொடர்ந்து அம்மன் உள்வீதி வலம் வருதல் இடம்பெறும். (ஐ-ரி)

நெடுந்தீவில் ஆய்வு

நெடுந்தீவு, மே 29 நெடுந்தீவின் சமூக வரலாறு குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளும் நோக்குடன் யாழ் பல்கலைக் கழக சமூக வியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஜி.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் சமூக வியற்றுறை மாணவ மாணவிகள் பன்னிரெண்டு பேர் கொண்ட குழு நேற்று வெள்ளிக்கிழமை நெடுந்தீவுக்கு வருகைதந்தது.

இவர்கள் இரண்டு தினங்கள் நெடுந்தீவில் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொள்வர். (ஐ-111)

செயலமர்வு

யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவுடன் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று நாளை (ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலுள்ள தரம் 3, 4, 5 இல் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ச. நா. தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார். (ஐ-ரி)

கட்டடத் திறப்புவிழா

கட்டப்பிரடிய் சரஸ்வதி சனசமூக நிலைய புதிய பாலா பாடசாலைக் கட்டடம் இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சனசமூக நிலைய தலைவர் க. குணராசா தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்குவார், பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் இ. இராசதுரை கலந்து கொள்வார். [ஐ—180]

மலிவு விற்பனை

பிரதி சனிக்கிழமை தோறும்

ஆடவர்கள், குழந்தைகளுக்கான மற்றும் மகளிருக்கான ஆடை வகைகள்

卐 றெடிமேட் வகைகள் 卐 சூட்டிங் வகைகள்

விசேஷமாக இறக்குமதி செய்யப்பட்ட

卐 சேட் 卐 ரீசேட் மற்றும் 卐 துணி வகைகள்

மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

மோகனாஸ்

இல. 41, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

[66174]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

பொன். கந்தையாபிள்ளை

[ஓய்வு பெற்ற அதிபர்]

பிறப்பு: 08 — 02 — 1923 இறப்பு: 08 — 06 — 1998

திதி: 29 — 05 — 1999

அன்புக் கரங்களால் எம்மையெல்லாம் அரவணைத்துத் தவிக்கவிட்டுச் சென்று ஓராண்டு சென்றாலும் எம் உள்ளங்கள் தங்களை என்றும் மறவாது! இந்நாளில் தங்களின் ஆதிமசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி, மகன்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

சிவபுரம்,
கொடிகாமம்.

[சி/7703]

வடிசாலை இன்று திறப்பு

சாவகச்சேரி, மே. 29

தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் சுமார் 50 லட்சம்ரூபா செலவில் கைதடி அரச வடிசாலையில் நிர்மாணிக்கப்பட்ட பனஞ் சாராய வடிசாலைத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு தென்மராட்சிக் கொத்தணித் தலைவர் கிரு பூபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மு. பாக்கியநாதன், தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், கா. பரநிருபசிங்கம், திருமதி கோ. திருநாவுக்கரசு, வடபிராந்திய மதுவரி உதவி ஆணையாளர் வீ. துரைராசா, வடிசாலை ஆலோசகர் ச. பாலகுமார், யாழ். மாவட்ட கூ. சபைத் தலைவர், பெ. கனகசபாபதி தென்னை, பனை வள. கூட்டுறவுச் சங்க சமாச தலைவர் சி. க. பொன்னுத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ–31)

ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், மே 29

குருநகர் மத்திய மருந்தகம் மற்றும் மகப்பேற்றுமனை என்பவற்றின் 54 ஆவது ஆண்டு விழா நாளை மறு தினம் திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார சேவைகள்பதிக் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர்செல்வி உ. சிவபாதசுந்தரமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ 5)

மாடுகளைக் காணவில்லை

சரசாலை வடக்கைச் சேர்ந்த விவசாயியான தம்பிமுத்து தெய்வேந்திரம் என்பவரது 10 மேய்ச்சல் மாடுகள் கடந்த 4 நாள்களாக வீடு திரும்பவில்லையென தெரிவிக்கப்பட்டது. சரசாலை வெளியில் புல் மேய்ச்சலுக்காக விடப்பட்ட சமயம் இவைகள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகள் பொழுது சாயும் பிற்பகல் வேளை தாமாகவே வீடு திரும்பும் பழக்கம் கொண்டவை எனத் தெரிவிக்கப்பட்டது (ஐ-31)

தென்மராட்சிக் கொத்தணியின்

கைதடி வடிசாலை திறப்புவிழா வாழ்த்துச் செய்தி

✠◀▶✠◀▶✠◀▶✠◀▶✠

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, தனது பெருமுயற்சியால் கட்டியெழுப்பிய

கூட்டுறவு வடிசாலையை

இன்று கோலாகலமாகத் திறந்து வைப்பதில் பூரிப்படைகின்றோம்.

இக் கொத்தணியின் எல்லைப் பரப்பிலே பரந்து வாழும் துறை சார்ந்த உழைக்கும் மக்களின் எழுச்சிக்கு திறவு கோலாக இவ் வடிசாலை திகழ்ந்திட மனம் நிறைந்து ஆசிக்கின்றோம்.

கூட்டு வாழ்வையே, உயிர்த்துடிப்பாகச் கொண்டு அர்ப்பணிப்போடு ஆற்றப்படும் பணிகள், நிறைவான பயனளித்திட ஆண்டவன் அருள்வேண்டி, அனைவரும் வாழ, வளம்பெற வாழ்த்துகின்றோம்.

தலைவர்

வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
யாழ்ப்பாணம்.

[சி/7696]

நிப்ரூ லக்சுமி

தொலைத் தொடர்பு சேவை

கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தி.

இன்று 29 — 05 — 1999 சனிக்கிழமை
காலை 7.00 மணிமுதல் 8 30 மணி வரையுள்ள
சுப வேளையில்

றோட்டேரியன் அ. பஞ்சலிங்கம்

(முன்னாள் அதிபர் கொக்குவில், யாழ். இந்துக்கல்லூரி)
அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட இருக்கின்றது;

உள்நாட்டு வெளிநாட்டு தொடர்புகளை

உடனுக்குடன் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: 29 - 05 - 99 — 30 - 05 - 99 (Incoming) வரும் அழைப்புகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

தொலைபேசி இல. உள்நாடு 021 — 2928
I. D. D. வெளிநாடு 0094 — 21 — 2928

[66168] லயன் இ. செல்வநாதன்

முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 — 02 — 1924



உதிர்வு 09 — 06 — 1998

அமரர்

வினாசித்தம்பி ஆறுமுகம்

(இளைப்பாறிய கனிஷ்ட பரிசோதகர்,
தபால் அலுவலகம், யாழ்ப்பாணம்)

திதி: 29 — 05 — 1999

ஆண்டொன்று சென்றதோ எம்மைப் பிரிந்து
உறையாத நினைவுகளை எம் மனத்தில் விதைத்து
நிறைவோடு நீவிர் விண்ணகத்தைச் சென்றடைந்தீர்!
உங்கள் நினைவாக நாள்தோறும் துல்லலுறும்
எங்களுக்கு
என்றென்றும் உங்கள் ஆசி கிடைப்பதற்கு
அருள்புரிவீர்!

தங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

51, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(சி/7704)

ஸ்ரீ சக்தி தொலைத் தொடர்பு சேவை

SRI SAKTHI COMMUNICATION

CHURCH LANE, KOKUVIL.
வேதக் கோயில் அருகில் கொக்குவில்.

இன்று 29 - 05 - 99
சனிக்கிழமை

காலை 7-00 மணி முதல் 8-00 மணி
வரையுள்ள சுபவேளையில்
ஆரம்பிக்கப்படவுள்ளது.

உள்நாடு: 021 - 2947
வெளிநாடு: 0094 - 21 - 2947

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்,
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகி,
மு. மகேந்திரராசா (சிறி)

சேச் லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

((66177)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரடி ராங்கு

யாழ். மருத்துவக் கல்லூரியில் சித்தியடையும் நமது டாக்டர்கள் யாழ்ப்பாணத்தில் சேவையாற்ற முன்வராமல்— பின்னடித்து— தென்பகுதிக்குப் பணிபுரியச் செல்வது குறித்து இப்பத்தியில் குறை கூறியிருந்தோம் அல்லவா?

இது குறித்து மற்றைய பக்கத்தில் உள்ள சில நியாயங்களை மருத்துவ மாணவர்கள் சிலர் எழுப்புகின்றார்கள்.

சித்தியடையும் யாழ். மருத்துவபீட மாணவர்கள் யாழ்ப்பாணத்திலேயே பணியாற்ற முன்வந்தால் அவர்களுக்கு உரிய கௌரவமும் வசதியும் கொடுத்து அவர்களது சேவையைப் பெற்றுக்கொள்ள யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் தயாரா என்பதுதான் மாணவர் தரப்பினரின் இப்போதுள்ள கேள்வி.

சித்தியடைந்த பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் தமது உள்ளகப் பயிற்சியைப் பெற வரும் டாக்டர்களுக்கு உரிய வசதிகளை ஏழங்காமல் அவர்களை வேண்டாப் பிள்ளைகளாக ஆஸ்பத்திரி நிர்வாகம் நடத்துவதாக அந்த இளம் டாக்டர்கள் மட்டத்தில் ஓர் அதிருப்தி நிலவுகின்றது.

இதே தரத்தில் தெற்கிலிருந்து உள்ளகப் பயிற்சிக்கு இங்கு வரும் டாக்டர்களுக்கு மட்டும் யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் விழுந்தடித்து உபசரித்து தலையில் தூக்கி வைத்துக் கூத்தாடுவதாகவும் அவர்கள் பொருமுகின்றார்கள்.

உதாரணத்துக்கு ஒன்று. இவ்வார முற்பகுதியில் 21 டாக்டர்கள் உள்ளகப் பயிற்சிக்கான எதிர்பார்ப்புடன் தெற்கிலிருந்து வந்தார்கள். இவர்கள் இங்கு வரவிருப்பது பற்றிய தகவல் நேர காலத்துடனேயே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் இங்கு வந்திறங்கும் வரை அவர்கள் தங்குவதற்கான ஒழுங்குகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை அவர்கள் வந்திறங்கியதுதான் தாமதம். யாழ். மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறி உள்ளகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த டாக்டர் ஒருவரின் ஆஸ்பத்திரி தங்கும் அறை ஆஸ்பத்திரி நிர்வாகத்தால் பலவந்தமாகத் திறக்கப்பட்டது. இத்தனைக்கும் அந்த டாக்டர் அப்போது வார்ட்டில் தான் பணியில் இருந்தார்.

பணியை முடித்து ஆஸ்பத்திரிக்குள் இருக்கும் தனது தங்குமிட அறைக்குத் திரும்பிய டாக்டருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அவரது அறை உடைத்துத் திறக்கப்பட்டு அதற்குள் தெற்கிலிருந்து வந்த டாக்டர்கள் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர். வேறு வழியின்றி வாயை மூடிக் கொண்டு அறையிலிருந்த தமது பொருள்களை, உடைமைகளை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு நடையைக் கட்டினார் அந்த டாக்டர்.

இது போல நம்மூர் டாக்டர்களைக் கேவலப்படுத்துவதும் —

தெற்கிலிருந்து வரும் டாக்டர்களை விழுந்தடித்து உபசரிப்பதும்—

யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் தொடரும் போக்காக உள்ளதே என்று கூறி சம்பவங்களைப் பட்டியலிடுகிறார்கள் மாணவர்கள். இந்நிலையில் நம்மூர் மருத்துவ மாணவர்கள் டாக்டர்களாகச் சித்தியடைந்த பின்னர் எப்படி இங்கு பணியாற்ற முன்வருவார்கள் என்று அந்த மருத்துவ மாணவர்கள் தரப்பில் கேள்வி எழுப்பப்படுகிறது.

★ ★ ★ ★ ★

'ஊசி போகும் வழி பார்ப்பார்; உலக்கை போகும் வழி பார்க்க மாட்டார்கள்' — என்று ஒரு பழமொழி உண்டு. அத்தகைய விடயம் சம்பந்தமான தகவல் இது.

பாடசாலை, கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், பின்னர் தேசிய மட்டம் என்று பல்வேறு நிலைகளில் தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெறுகின்றன

இந்தப் போட்டிகளை நடத்துவதற்கு வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என்று நிதி ஒதுக்கியுள்ளது

உதாரணமாக யாழ்ப்பாண வலயத்துக்கு ஆறாயிரம் ரூபா வரை ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த சொற்ப தொகையை வைத்துக் கொண்டு தான் யாழ் கல்வி வலயம் முதலில் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் கோட்டங்களின் மட்டத்திலும் பின்னர் வலயமட்டத்திலும் போட்டிகளை நடத்தி முடிக்க வேண்டும்.

அடுத்த மாதத்தில் ஐந்து வலயங்களுக்குமிடையில் மாவட்ட மட்டப் போட்டிகளை நடத்த 15 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது,

இது தவிர, சிறுகதை, கவிதை, குறுநாடக ஆக்கம் போன்ற எழுத்தாக்கல் போட்டிகள் மாகாண மற்றும் மாவட்ட நிலையில் நடத்தப்பட வேண்டும்.

இந்த எழுத்தாக்கல் போட்டிகளை, போட்டியாளர்களை ஒன்றுகூடத்தில் சமுகமளிக்க வைத்துவிடு, ஒரு பக்க அளவுடைய வினாத்தாளை Fax மூலம் மாகாணசபையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினால் இங்குள்ள அதிகாரிகள் அந்தக் கணமே இந்த போட்டிகளை [பரீட்சைகளை] நடத்தலாம்; விடைத்தாள்களை தேவையானால் புள்ளியிடு முடிவுகளைத் தீர்மானிப்பதற்காகத் திருகோணமலைக்குத் திருப்பி அனுப்பி வைக்க முடியும்.

ஆனால் —

தமிழ்த்தினப் போட்டிகளுக்கு என வலய அலுவலகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் கஞ்சத்தனம் காட்டும் மாகாணக் கல்வி அமைச்சு, இந்த எழுத்தாக்கல் போட்டியை நடத்துவதற்கு மட்டும் பல்லாயிரக் கணக்கான ரூபாக்களை வீணாகச் செலவு செய்யமுன் வந்திருக்கின்றது.

எழுத்தாக்கல் போட்டியை நடத்துகிறேன் என்ற பெயரில் திருகோணமலையிலிருந்து ஓர் அதிகாரி கொழும்புக்குப் போய் அங்கிருந்து ஆறாயிரம் ரூபாவுக்கு விமானக் கட்டணம் கொடுத்து யாழ்ப்பாணம் வந்து தங்கி நின்று போட்டி நடத்துகிறேன் என்று பெயர் பண்ணிவிட்டுத்திரும்பப் போகின்றார். விமான டிக்கெட், அந்த அதிகாரிக்கான கொடுப்பனவு, ஏனைய படிகள் என்று செலவு இன்னொரு பதினையாயிரத்தைத் தாண்டப் போகின்றது.

கீழ் மட்டத்தில்— அதிக போட்டியாளர்கள் பங்கு பற்றும் நிலையில்— நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு நிதி ஒதுக்கப் பின்னடிக்கும் மாகாண கல்வி அமைச்சு மேல் மட்டத்தில் அதிகாரிகளின் உலாத்துகளுக்காக வீணே நிதி செலவழிப்பது ஏற்கக் கூடியதா?

★ ★ ★ ★ ★

மல்லாகம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்குப் புதிய அதிபராக நியமிக்கப்பட்ட ஒருவர் இவ்வார முற்பகுதியில் பதவியேற்கச் சென்ற சமயம் வழியில் ஒழுங்கை ஒன்றில் வைத்து உள்ளூர்க்காரர்கள் இருவரால் தாக்கப்பட்டு, மிரட்டித் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட கட்டடக் கட்டுமான வேலைகள் பற்றிய விவரங்கள் அம்பலமாகாமல் தடுக்கும் நோக்கத்துடனேயே புதிய அதிபர் மிரட்டித் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தகவல்.

வலயக் கல்வி அலுவலகம் உரிய நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் தெரிகின்றது.

— மின்னல்

பரிசளிப்பு

கைதடி, மே 29

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை வருடாந்தப் பரிசளிப்பு வைபவம் ஆலய மண்டபத்தில் அறநெறிப் பாடசாலை அதிபர் சி. மனோகரராஜக் குருக்கள் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-74)

மெய்வல்லுநர் போட்டி

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இடம்பெறும் நிலைய அங்கத்தவர்களுக்கிடையிலான இல்ல மெய்வல்லுநர் போட்டிநிலையத் தலைவர் பொன். கிருஷ்ணன் தலைமையில் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மைதானத்திலே இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கலந்து சிறப்பிக்கவுள்ளார். [ஐ]

களஞ்சியம் திறப்பு

வலி கிழக்கு, மே 29

புத்தூர் கமநலசேவை நிலையத்திற்கென பல லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய களஞ்சிய கட்டடம் கடந்த வியாழக்கிழமை வடமராகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் என். கே. ஒட்டகேயினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் என். வாமதேவா யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன்; யாழ் மாவட்ட கமநல சேவைத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் எஸ் சுந்தரேசன், கோப்பாய் பிரதேச செயலர் கே கேதீஸ்வரன் உட்பட பல திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (ஐ—180)

வீடு விற்பனைக்கு

யாழ் மாநகரசபை எல்லைக்குள்
சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்பு கொள்ளவும்:

திருமதி பொலின் தம்பிப்பிள்ளை
இல. 19, மக்லியோட் வீதி,
பம்பலப்பிட்டி, கொழும்பு - 4
ரெலிபோன் நம்பர்: 01-584948

திருமதி பேனாட்,
இல. 135, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(66167)

மேலும் 28 ஆயிரம் குடும்பங்களுக்கு 5,000 ரூபா வழங்க நிதி கிடைத்தது

யாழ். மாவட்டத்தில் மேலும் 28 ஆயிரம் குடும்பங்களுக்கு மீள்குடியமர்ந்தோருக்கான நிவாரணம் (5 ஆயிரம் ரூபா) வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதி யாழ். செயலகத்துக்கு கிடைத்துள்ளதையடுத்து பிரதேச செயலர்பிரிவு ரீதியாக இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே 78 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை —

வீடுகள் சேதமடைந்தவர்களுக்கான நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் முதல் கட்டமாக 5 ஆயிரம் ரூபா வீதம் 3 ஆயிரத்து 600 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டம்வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக தொழில் நுட்ப உத்தியோகத்தர்களின் சிபார்சில் பின்னர் இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்கப்படும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வீடுகள் சேதமடைந்ததற்கானநிவாரணமாக25 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிதி கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

கடன் உதவி

1999 ஆம் ஆண்டுக்கான அகதிகளுக்கான ஐ. நா தூதரக நுண்கருத்திட்ட வருமான ஊக்குவிப்புக் கடன் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் (35பேருக்கு) விவசாய மேட்டு நில பயிர்ச் செய்கைக்கு 16 பேருக்கும் நலிவுற்ற பெண்களு ஆறு பேருக்கு கால் நடை வளர்ப்புக்கும், இளம் விதவைப் பெண்மணி ஒருவருக்கு வியாபாரத்துக்கும், மேசன், தச்சு வேலை செய்கின்ற 12 பேருக்கு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் கடன் வழங்கப்பட்டுள்ளது [illegible] 20 மாதங்களுக்கு மாதாந்தம் பணம்செலுத்த வேண்டும்.

குருநகர்

சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம்

எடுக்கும்

கௌரவிப்பு விழாவும்
★ கலை நிகழ்ச்சிகளும் ★

நாள்: 29 - 05 - 99 சனிக்கிழமை
நேரம்: மாலை 6.00 மணி
இடம்: குருநகர் கலையரங்கு

சிறப்பு நிகழ்ச்சியாக
"புதியதொரு வீடு சிறியதொரு கோலம்"
[நாடகம்]

நெறியாள்கை: J. இக்னேசியஸ் பிரபா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[66169] — நிர்வாகத்தினர்

யாழ். நகரில்...

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட
வண்ண மீன் வளர்ப்பு தொட்டிகளுக்கான

- அழகு தாவர வகைகள்
- அழகு சாதனப் பொருள்கள்
- ஒக்சிசன் மோட்டர்கள்

[ஒரு வழி இரு வழி]

மற்றும் ஒக்சிசன் இணைப்புக் கருவிகள்
மீன் உணவு வகைகள் (IMPORT)

அனைத்தும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

S Ramiah Chettiar & Son's
172, Hospital Road,
Jaffna.

(66172)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

இறைச்சிக் கோழி

புறோயிலர், கல்பேட்ஸ், சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும். தொடர்பு: 31, மான்பாட சாலை வீதி, உடுவில் சுன்னாகம், [விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய்: (66103)

Broiler கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1 Kg 160/- தினமும் வேண்டிய அளவுகளில் சுத்தம்செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (66105)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் (அரைக் கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து காலை 7.00 தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் அடை முட்டையும் வாழைக்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. [நல்லூர் வீடியோ சென்றர் வளவு] 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (66047)

இறைச்சிக்கோழி புறொயிலர் விற்பனைக்கு உண்டு: தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15,6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம், [சின்னக் கடை அருகில்]: (66170]

இறைச்சிக்கோழி புறொயிலர் விற்பனைக்குண்டு: மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் கிடைக்கும். ஒவ்வொரு நாளும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும், தொடர்பு: லக்கிமதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (66065)

இறைச்சிக்கோழி (Broiler) அத்துடன் இறைச்சிக்குகந்த கோழியும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும். (1 Kg 160/-) சுத்தம் செய்தும் கொடுக்கப்படும்; தொடர்பு: இல. 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்: (66171)

தவறிவிட்டது

கந்தன் சின்னத்தம்பி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல: 542593695V) விசேட அடையாள அட்டை என்பன நெல்லியடியில் 8-5-99 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கலைமதி சனசமூக நிலையம், புத்தூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (66142)

கோவிலாக்கண்டி கைதடியைச் சேர்ந்த தேவராசா தாட்சாயணி ஆகிய எனது விசேட அடையாள அட்டை (091001013) நீர்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 01-05-99 இல் தவறிவிட்டது; கண்டெடுத்தவர்கள் சின்னத்தம்பி தேவராசா தேராலிவத்தைவீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி அல்லது பொது நூலகம் தச்சன்தோப்பு கைதடி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (66161)

சிவசுப்பிரமணியம் கௌசல்யா என்பவருடைய விசேட அடையாள அட்டை நாவற்குழிக்கும் கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கும் இடையில் 27-5-99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் 18/10, வைமன் வீதி, யாழ்ப்பாணம் அல்லது கைதடி வயோதிபர் இல்லத்தில் (களஞ்சியக் காப்பாளரிடம்) ஒப்படைக்கவும். (66153)

கைவசைப் பலன்

அறிவியல் அடிப்படையில் நன்கு ஆய்ந்து பலன் கூறப்படும். தினமும் காலை 9 30 மணி முதல் 11.30 வரை பிற்பகல் 2.30 மணி முதல் 5.30 மணி வரை தொடர்பு: கைவசைவல்லுநர், சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (கி/7689)

விற்பனைக்கு

இரண்டு கிழமைக் குஞ்சுகளும், ஏழு நாள் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு; தொடர்பு: இல. 06 செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (66157)

அழகிய வெள்ளை நிற பொமேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. குமார். 115, அத்தியடி றோட், யாழ்ப்பாணம்: ((66137)

இலகு திருமண சேவை

1966 பூராடம் சிறுவர் பாடசாலை ஆசிரியை கௌரவ குடும்பம் [சீதனம் இல்லை; பொருத்தமான மணமகனை எதிர்பார்க்கிறார். தாரமற்றவரும் விண்ணப்பிக்கலாம்; மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா, K. K. S வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்: (66164)

பொருளியல்

பேரினப் பொருளாதாரம், வெளிவாரி விளைவுகள், வர்த்தக மாற்று விகிதம் ஆகிய நூல்கள் யாழ்ப்பாண பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன: ஆசிரியர்: வே. கருணாகரன். (66097)

வீடு விற்பனைக்கு

ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கில் 7 பரப்புக்காணியில் ஐந்து அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எம். பாலசுப்பிரமணியம், 5, Colombo Street, Kandy, 08 – 233560. (கி/7641)

வியாழமாற்றம்

[27 - 05 - 99] வியாழமாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. கணிப்பாசிரியர் Prof; சத்தியதாசன் [சத்யா] ஜோதிடக் கணிப்புகளுக்கு நேரில் சந்திக்கலாம். 3 ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (66146)

வாலிபர் ஐக்கிய சங்க ஜன சமூக நிலையம்,

தெல்லிப்பழை.

ஸ்தாபிதம்: 1943 - 06 - 06

நிலையப் பதிவு இல: J/VN/34

காங்கேசன்துறைவீதி, தபாற்கந்தோர் அருகில் தெல்லிப்பழையில் இயங்கி வந்த வாலிபர் ஐக்கியசங்க ஜனசமூக நிலையம் கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் ஒன்பது வருடங்களாக இயங்க முடியாது இருந்தமை சகலரும் அறிந்ததே. கடந்த 16 - 05 - 99 இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின்படி இந்நிலையம் சங்கானை ஓடக்கரையில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாமில் தொடர்ந்து இயங்க நடவடிக்கை எடுத்திருப்பதை இந் நிலையத்தில் தொடர்பு வைத்துள்ள சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

போஷகர்: திரு நா. ஆறுமுகம்
தலைவர்: திரு பூ. ஐயாத்துரை
உபதலைவர்; திரு ச. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்: திரு கி. கதிரமலை
பொருளாளர்: திரு இ. வரதராஜா

[12 பேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்] (கி/7692)

நெஞ்சை விட்டகலாத இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

செல்வி

சைமினி தர்மலிங்கம்

அன்னையின் அரவணைப்பில் 22 - 12 - 1975 | அநியாய அழிப்பில் 21 - 05 - 1997

சைமினி ..... !
ஆண்டுகள் இரண்டானாலும் ஆறாது எம் துயரம்மா!
ஆலயம் போன்ற வீட்டில் ஆறாத் துயர் கொண்டதேனம்மா?
தந்தையைப் போன்று திகழ்ந்தாயே !
அன்னையை அன்பில் வென்றாயே!
அறிவுக் களஞ்சியமாய்த் திகழ்ந்தாயே !
அறிவுரைகள் பல சொல்வாயே - இன்று மௌனமானது தான் ஏனம்மா?
கல்வியிலும், கலையிலும், விளையாட்டிலும் பெயர் பெற்றவளே!
பல்கலைக்கழகம் செல்லக் காத்திருந்தவளே!
இன்று காத்திருக்கின்றோம் நியாயத்திற்கம்மா!
வஞ்சனை கொண்டார் உனைக் கொன்றழித்தார்!
நெஞ்சினில் கொண்டார் தினம் தவிக்கிறார்.
விதி எனும் பெயரிலே சதி செய்த வேலையம்மா!
குள்ள நரிகள் மத்தியிலே குடியிருந்த கதையம்மா!
இன்று இத்தரையில் நாம் தவிக்க எங்கோ நீ வசிக்க
நாம் என்ன பாவம் செய்தோமம்மா !
மீண்டும் எமக்காக அவதரிப்பாய் எனக் காத்திருக்கின்றோம்;

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

— குடும்பத்தினர்.

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி. (66160)

இறுதியாட்டமும் பரிசளிப்பும்

வலிகாமம் தெற்கு, மே 29 தெல்லிப்பழை நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினர் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் இறுதிப்போட்டிகளும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளன. (ஐ-152)

கேள்விப் பத்திரம்

பதிவு செய்யப்பட்ட நாற்று மேடை பராமரிப்பாளர்களிடமிருந்து நல்ல இன ஒட்டு மா மற்றும் பலாக்கன்று (குறைந்தது $1\frac{1}{2}$ ஆண்டு முதிர்ச்சி) 1000 இள நாற்றுக்கள் வேண்டப்படுகிறது. கூறு விலை ஏனைய விவரங்களுடன் கேள்விப்பத்திரம் ஜூன் மாதம் ம் திகதி [08—06—1999] பிற்பகல் 4.00 மணிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்;

கவரி:

முகாமையாளர்,
பட்டினிக்கெதான நிறுவனம் - A.C.F,
இல: 05, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

[நேரடித் தொடர்புகள் வரவேற்கப்படமாட்டாது] (66119)

மங்களகரமான திறப்புவிழா

அபீஸ் கோப்பி (B)பார் & கூல் ஸ்பொட்

இன்று 29 - 05 - 99 சனிக்கிழமை

காலை 11 மணிமுதல் 12-10 வரையுள்ள சுபவேளையில் எம்மால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ். நகரில் தனிரக சுவையால் மக்களின் உள்ளம் நிறைந்த அபீஸ்கோப்பியை சூடாகவும், குளிராகவும் நீங்கள் அருந்தி மகிழ்ந்திட

அபீஸ் கோப்பி (B) பார் & கூல் ஸ்பொட்

மட்டன் ரோல், பற்றிஸ், வடை, பொம்பே சுவீற்ஸ், மிக்ஸர் போன்ற சிற்றுண்டி வகைகளையும்

தினேஸ் பேக்கரி தயாரிப்புக்களையும் பெற்றுக்கொள்ள

அபீஸ் கோப்பி (B) பார் & கூல் ஸ்பொட்

133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(பாரத் ஸ்ரூடியோ முன்பாக)

(66150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் வெளியீடு

நெடுங்குளம் பகுதியில் ஐந்து பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், மே 29

அரியாலை நெடுங்குளம் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி ஐந்து பேர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் முதல் நாள் இரவு இராணுவக் கப்டன் ஒருவர் சுடுகொல்லப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்ட இவர்கள் தற்பொழுது 512 ஆவது படையணி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

நெடுங்குளம்— கொழும்புத்துறையைச் சேர்ந்த நடராசா ஆனந்தராசா (வயது 23), அருமைத்துரை நாகதீசன் (வயது 28), அப்துல் ஜெபார் கணேசன் (வயது 24), ராவுத்தர் மரிக்கார் (வயது 45), குணரட்ணம் கனிராஜ் (வயது 19) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் கைது செய்யப்பட்டதற்கான ரசீதுகள் படையினரால் அவர்களது உறவினர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. (உ–5)

கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 29

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை 'உதயன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ 4 மணி — பெண்கள் பிரிவு — கிறாஸ் கொப்பர்ஸ் வி. க. அணி எதிர் பல்கலைக் கழக 'ஏ' அணி.

★ 5 மணி — ஆண்கள் பிரிவு — ஒல்ட்கோல்ட்ஸ் வி. க. அணி எதிர் பற்றீஸியன்ஸ் வி. க. அணி. (உ–3)

புலிகளின் நிர்வாகசீர்குலைப்பு நடைமுறைக்கு ஒவ்வாதது

புளொட் மாணிக்கதாசன் தெரிவிப்பு

கொழும்பு, மே 29

குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் நிர்வாகத் தடையானது எந்த விதத்திலும் நடைமுறைக்கு ஒவ்வாதது. ஆகவே விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உடனடியாக இவ் விடயத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

புளொட் அமைப்பின் உப-தலைவர் என். மாணிக்கதாசன் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

யாழ் மாவட்ட சிவில் நிர்வாகத தடை தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிக்கப்பட்டுள்ளதாவது:-

'சூரியப்பிரகாசம் - II இராணுவ நடவடிக்கையின் போது வன்னிக்கு இடம் பெயர்ந்த மக்கள் தத்தம் பகுதிகளுக்குத் திரும்பி வரும் பட்சத்தில் அவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்றும் நஷ்டஈடுகள் வழங்கப்படும் என்றும் தொழில் ஊக்குவிப்புக்காகக் கொழும்புச் சந்தை வசதி செய்து தரப்படும் என்றும் அரசு அளித்த வாக்குறுதிகளை நம்பித் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிய யாழ்.குடாநாட்டு மக்களைத் திறந்தவெளிச் சிறைச்சாலை ஒன்றில் வைத்து ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை இடையிடையே இராணுவத்தினருடாக வழங்கி வருகின்றார்கள்.

ஏற்கனவே அதிகாரிகள் பற்றாக்குறையினால் குடாநாட்டு மக்களின் தேவைகள் காலக்கிரமத்தில் நிறைவு பெறாது காலந்தாழ்த்தியே— பல சிரமங்களினூடாக — தமது அன்றாட, அத்தியாவசிய முக்கிய தேவைகளைப் பெற்று வருகின்றார்கள். குடாநாட்டு மக்கள் இவ்விதம் வஞ்சிக்கப்படுவதை நன்கு அறிந்திருக்கும் புலிகள் தமது சுயநலத்தைக் காரணமாக வைத்து சிவில் நிர்வாகத்தை மட்டுப்படுத்துவது வன்னிப் போர்க்களத்தின் தோல்வியை வெளியுலகுக்கு மறைக்க முயலும் செயலாகவே நாம் கருதுகின்றோம்.

அத்துடன் சர்வதேச நிதி நிறுவனங்களாலும் அரசசார்பற்ற நிறுவனங்களாலும் குடாநாட்டு அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் பணங்கள் இங்கு செலவு செய்யப்படாது மீண்டும் அது திறைசேரிக்குப் போய்விடும் என்பதையும் அவ்விதம் திறைசேரிக்குப் போகும் இப்பணம் பாதுகாப்புத் தேவைக்காகவே நிச்சயம் பயன்படும் என்பதையும் புலிகள் சிந்திக்க வேண்டும்.

1993 ஆம் ஆண்டிலிருந்து வடக்கு — கிழக்கின் ஏனைய பகுதிகளான, அம்பாறை, மட்டுநகர், திருமலை, வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளில் சிவில் நிர்வாகம் உள்ளூராட்சிச் சபைகள் மூலம்அதற்கே உரித்தான நான்கு ஆண்டுகளைப் பூரணமாக செயற்படுத்தியும் அதைவிட ஒரு வருடம் மேலதிகமாகவும் தனது சேவையினை மக்களுக்கு வழங்கியதுடன் பல அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபட்டு அப்பிரதேசங்கள் வளர்ச்சி கண்டுள்ளன.

இந்நிலையில் யாழ். குடாநாட்டு மக்களுக்கு மட்டும் ஏன் இந்த மட்டுப்படுத்தப்பட்ட நிர்வாகம். பல வருடங்களாக புலிகளின் நிர்வாகத்தின்கீழ் இருந்தும் வந்த குடாநாட்டு மக்களுக்காக மீண்டும் ஒரு தடையை இது வரை தெரியவிலிக்க வேண்டுமென தமிழ் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

இன்று புலிகள் வன்னியிலே இராணுவத்துக்கு எதிரான ஓர் ஆயுதப் போராட்டத்தையும், யாழ் குடாநாட்டிலே தமது மக்களுக்கு எதிரான ஒரு சிவில் யுத்தத்தையும் நடத்தி வருதல் எந்த வகையில், எந்த நோக்கம் கொண்டது என்பதையும், எந்த மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றீர்கள் என்பதையும் ஜீரணிக்கமுடியாதுள்ளது.

நீதிமன்றுகள் இயங்கக் கூடாது என்றால் சிறைகளில் இருப்போர் நிலை என்ன? இம்மட்டுப்படுத்தப்பட்ட குடாநாட்டுக்கான சிவில் நிர்வாகத் தடையானது எந்த விதத்திலும் நடைமுறைக்கு ஒவ்வாது என்பதால் தமது முடிவினை புலிகளின் தலைவர் பிரபாகரன் உடனடியாக பரிசீலனை செய்யவேண்டும்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆரம்பத்தில் ஒன்றாக செயற்பட்டு இன்று புளொட்டாக நின்று செயற்படும் உங்கள் பழைய உறுப்பினர்களாகக் கேட்டுக் கொள்கின்றோம் என்பதுடன் யுத்த தந்திரோபாயங்களை வகுக்கும்போது இழைக்கின்ற சிறு தவறு கூட எமது போராட்டத்தைத் திசை திருப்பி எம் இனத்தை நடு வீதிக்குக் கொண்டு வந்து சீரழிக்கும் என்பதையும் நினைவுபடுத்திக் கொள்கின்றோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ–3-7]

ஜொலி ஸ்ரார்ஸ் கிண்ண இறுதியாட்டம் நாளை

யாழ்ப்பாணம், மே 29

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ. எஸ். பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தி வரும்மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் நாளை காலை 8 45 மணிமுதல் யாழ். இந்துகல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்த ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியும், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் மோதவிருக்கின்றன.

இந்த நிகழ்வுக்கு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஈ. எஸ். பேரம்பலம் நிறுவன உரிமையாளர் ஈ. எஸ். பி. நாகரத்தினம் கௌரவ விருந்தினராகப் பங்குபற்றுவார்.

திருமதிஇராஜலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை பரிசில்கள் வழங்குவார். (உ–3)

பாலபண்டித வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பால பண்டித வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவிருக்கின்றன.

ஏற்கனவே பாலபண்டித வகுப்புக்களைக் கற்றுவருவோரும் புதிய வகுப்பில் சேரவிரும்புவோரும் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (உ–3)

ஒத்திவைப்பு

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மத்திய மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இன்று அரங்கேற்றப்படவிருந்த நாடகங்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ–3)

பூப்புனித நீராட்டுவிழா

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் வைகாசி மாதம் 15 ஆம் நாள் (29-05-99) இன்று விசாக நட்சத்திர சித்தயோகம் பகல் 10-25 – 12: 00 மணி வரையான சுப வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி

செல்வி கஜனி

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்

இந்த அழைப்பிதழை நேரில் வழங்கியும் சிலருக்கு நேரில் வழங்கமுடியாமலும் இருப்பதால் இந்தஅறிவித்தலை அழைப்பாக ஏற்று உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவரும் வருகை தருமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

செ. ஸ்ரீசந்தணராசா தம்பதிகள்

இராஜேஸ்வரி இல்லம்,
அம்பிகாவத்தை வீதி,
சங்கானை. (சி/7705)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 19 – 04 – 1914

இறப்பு 29 – 04 – 1999

திருமதி

வள்ளிப்பிள்ளை ஐயங்கர்

ஆளாக்கி—எம்மை
அமுதூட்டித்
தாலாட்டி
தரணியிலே
நாமெல்லாம்
தலை நிமிர
வைத்தவளே!

எம்மை விட்டு
நீ பிரிந்து
திங்களொன்று
கடந்ததுவோ?

ஆண்டு பல கடந்தாலும்
ஆறாது எம் துயரமம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

28, 1 ஆம் ஒங்கை, நீராவியடி,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (66119)

மரண அறிவித்தல்கள்

வல்லிபுரம் பாக்கியம்

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்லப்பா வல்லிபுரம் பாக்கியம் 28-05-99 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் ஆச்சாரியின் அன்பு மனைவியும் கந்தையா (சோமு), செல்லப்பா, மகாலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் – ஆச்சிமுத்து, செல்லபாக்கியம், தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29-05-99) சனிக்கிழமை காலை 10 மணிக்கு மட்டுவிலில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (66197)

சுப்பிரமணியம் கனகரத்தினம்

(முன்னாள் பங்காளர், முருகன் ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு)

அல்லயம்பதி துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிரபல ஓடியல் வியாபாரியுமான சுப்பிரமணியம் கனகரத்தினம் 28-5-99 அன்று வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் வசந்தகுமாரியின் கணவரும், குகநேசம் [யாழ். பல்கலைக்கழகம்], கிரிதரன், ஜெகதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பரமலிங்கத்தின் சகோதரனும் முத்துகுமாருவின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [29-5-99] மாலை 3 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
திருமதி க. வசந்தகுமாரி
[மனைவி]

அல்லயம்பதி,
துன்னாலை வடக்கு. (சி/7715)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் அண்மையில் நெடுந்தீவு நாட்டுக்கூத்து, இசை, நாடக அண்ணாவிமாருடனும் கலைஞர்களுடனும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது.

இக்கலந்துரையாடலின் போது நெடுந்தீவு உதவி அரச அதிபர் நா. இராமச்சந்திரன் உரையாற்றுவதையும், அருகில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் செ. மெற்றாஸ்மயில், பிரதேசசபைத் தலைவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் நடராஜலிங்கம், கிராமிய அபிவிருத்தி உத்தியோத்தர் அருளப்பு, நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத் தலைவர் நா. சங்கரப்பிள்ளை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் மேலே உள்ள படத்தில் காணலாம்.

நெடுந்தீவு நாட்டுக்கூத்து இசை, நாடக அண்ணாவிமார் மற்றும் கலைஞர்கள் முன்னிலையில் செ. மெற்றாஸ்மயில் உரையாற்றுவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

மடு அகதிகள் நேற்றுடன் முற்றாக வெளியேற்றம்

மடுத்தேவாலயப் பகுதியில் உள்ள அகதி முகாமில் தங்கியிருந்த ஏழாயிரம் அகதிகளையும் அப்புறப்படுத்தும் பணி நேற்று மாலை பூர்த்தியானது என்று மன்னார் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மடுத்தேவாலயப் பகுதியில் அமைந்துள்ள அகதிகளை அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த விடுத்த உத்தரவை அடுத்து இந்தப்பணியை மன்னார் செயலகம் ஆரம்பித்திருந்தது.

அந்த முகாமில் தங்கியிருந்தவர்களில் 600பேர் யாழ்ப்பாணத்துக்கும்- மூவாயிரத்து 400பேர் வவுனியாவுக்கும் - அனுப்பப்பட்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 3ஆயிரம் பேர் தமது சொந்த இடங்களுக்குச் செல்லமறுத்ததை அடுத்து, அவர்கள் பேசாலை, கற்கடந்தகுளம் பகுதியில் உள்ள முகாம்களுக்கு அனுப்பப்பட்டு விட்டனர்.

மடுத்தேவாலயம், மடு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் ஆகியவற்றின் பணியாளர்கள் மட்டுமே தற்சமயம் மடுப்பகுதியில் தங்கியிருப்பதாகக் கூறப்பட்டது.

மடுவில் நிலைகொண்டுள்ள சர்வதேச தொண்டு அமைப்புக்களான எம்.எஸ்.எவ்., அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், ஐக்கியராஜ்ஜிய சிறுவர் பாதுகாப்பு நிதியம், ஒக்ஸ்பாம் ஆகியவற்றின் அதிகாரிகள் அங்கிருந்து கொழும்பு திரும்ப இருப்பதாகச் கூறப்பட்டது.

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்தின்
ஆதரவுடன்
ஜொலி ஸ்ரார்ஸ் வி.க.
நடத்தும்
ஜொலி ஸ்ரார்ஸ் கிண்ணத்துக்கான
கிரிக்கெட் சுற்றுப் போட்டியின்
இறுதியாட்டம்

யாழ். பல்கலைக்கழக அணி
எதிர்
கொக்குவில் ம.ச.ச.நிலைய அணி

நாளை காலை 8.45 மணி முதல்
யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில்

பிரதம விருந்தினர்:-
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.)
கௌரவ விருந்தினர்:-
திரு. இ.ச.பே.நாகரட்ணம்
(உரிமையாளர்; இ .ச.பேரம்பலம் சக நிறுவனம்.)
பரிசில் வழங்குவோர்:-
திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஜொலி ஸ்ரார்ஸ் வி.க.
யாழ்ப்பாணம்.
(சி-7711)

விமானசேவை இன்றுஇல்லை

யாழ்ப்பாணம், மே29

வெசாக் தினத்தையொட்டி பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை இன்று இடம்பெறமாட்டாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

அதேவேளை - விமானிகளுக்கான டிக்கெட் வழங்கும் பணி இன்று நண்பகல் ஒரு மணி வரை இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

கிளைமோர் கண்ணி மீட்பு

மட்டக்களப்பு,மே29

மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்று நண்பகல் 3கிலோ எடையுடைய கிளைமோர் கண்ணிவெடி ஒன்று பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

பொலீஸ் நிலையத்துக்குச் சற்றுத் தொலைவில் இது மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும் -

வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த பொலீஸார் இதனைக் கண்டு பிடித்தனர் என்றும் -

பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-21)

மின்மாற்றியில் குண்டு மீட்பு

கொழும்பு,மே19

கொட்டாஞ்சேனை சங்கமித்தையில் அமைந்துள்ள மின்மாற்றியில் பொருத்தப்பட்டிருந்ததாகக் கூறப்படும் இரண்டு கிலோ எடையுடைய குண்டு ஒன்று நேற்று அதிகாலை மீட்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

குண்டு செயலிழக்க வைக்கும் நிபுணர்களால் அந்தக் குண்டு பின்னர் செயலிழக்கச் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து அந்தப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் இடம்பெற்றது. (ஐ-3)

"சமயங்கள் எங்கே சந்திக்கின்றன?"

யாழ்ப்பாணம்,மே29

யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் 'சமயங்கள எங்கே சந்திக்கின்றன?' என்ற தலைப்பில் கரம்பொன் சண்முகநாத வித்தியாசாலையின் முன்னாள் அதிபர் அறிஞர் ஆ.சபாரத்தினம் கருத்துரை வழங்குவார். (ஐ-3)

படையினர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் வெளிப்படுத்துவோம்" என்று நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்ட மூத்த அரச அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-உ-3-5-7-15-139)

'ஸ்ரிங்கர்'.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்த்தியதாகக் காட்கில் பிரதேசத்தின் பெரும் பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் நான்கு காஷ்மீர் தீவிரவாதக் குழுக்கள் கூட்டாக உரிமை கோரியுள்ளன.

இந்த ஹெலிக்கொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டிருப்பதில் பாகிஸ்தான் சம்பந்தப்பட்டிருப்பதாக இந்தியா தெரிவித்த குற்றச்சாட்டை இஸ்லாமாபாத் மறுத்துள்ளது. (ஐ-7)

எமது புதிய
பிரமிட்
வீடியோ CD
வெளியீடு
சரண்ராஜ், சுருதி
நடித்த
அண்ணன் தங்கச்சி
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி-7717)

தேவை
கணனியில் Type setting செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் வரவும்.
பிரதேச பதிப்பகம்,
430, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (c-7718)

சூட்டுக் காயத்துடன்

ஈ.பி.டி.பி. உறுப்பினரின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,மே29

தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரின் சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டது.

நெடுந்தீவைச்சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான அல்பிரட் சோதிராசா (இன்பம்-வயது32) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சித்தசுவாதீனமற்ற நிலையில் இருந்த இவர் நேற்று முன்தினம் நள்ளிரவு ஒருமணியளவில் ஊர்காவற்றுறை ஈ.பி.டி.பி. முகாமில் வைத்து தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது சடலத்தில் துப்பாக்கிக் குண்டு தொண்டை ஊடாக உள்ளே சென்று கழுத்துப்பக்கமாக வெளியேறியதற்கான சூட்டுக்காயம் காணப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரனையின் பின்னர் நேற்றுமாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-5-15-139)

மட்டக்களப்பு மாவட்டத்தில்

புலிகள் வசமுள்ள பகுதிக்கு யூரியா அனுப்ப அனுமதி

எட்டு வருடகாலத் தடை நீக்கம்

மட்டக்களப்பு,மே29

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திற்கு யூரியா உரம் எடுத்துச் செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

கடந்த எட்டு வருடங்களாக இத் தடை அமுலில் இருந்துவந்தது. இத் தடையை நீக்கியுள்ள பாதுகாப்புத் தரப்பு கொழும்பிலிருந்து உரம் எடுத்துவர நான்கு விநியோகஸ்தர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இவ்விநியோகஸ்தர்கள் தமக்குக் கீழே உப முகவர்களை நியமிக்க முடியாது என்றும் -

பாதுகாப்புத் தரப்பிடம் அனுமதி பெற்று தேவைக்கேற்ப உரத்தை விவசாயிகள் எடுத்துச்செல்ல முடியும் என்றும்- அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-21)

கிஷோரை விடுவிக்க கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

வவுனியா,மே29

கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள செஞ்சிலுவைச் சங்க வவுனியாக்கிளைச் செயலாளர் சிவநாதன் கிஷோரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம் ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பியுள்ள அவசர 'பக்ஸ்' செய்தியில் மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"கடந்த காலங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதில் தனது உயிரையே அர்ப்பணித்திருந்தவர் கிஷோர். 24மணிநேரமும் இன்னல்படும் மக்களுக்காக உழைத்தவர் அவர்.

அவர் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தி அவரை விடுதலை செய்ய ஆவன செய்ய வேண்டும்"

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

2 ஆயிரம் ஆசிரியர் நியமனம்

திருகோணமலை,மே29

திருகோணமலை மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய இரண்டாயிரம் ஆசிரியர்களை நியமிக்க மாகாணக்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

திருமலை மாவட்டத்தில் 4ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகவும் -

அதை நிவர்த்திசெய்யவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் -

மாகாணக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ-3)

எரிக் கணேஷ்
தொலைத் தொடர்பு & பக்ஸ் சேவை
உங்களின் பேரபிமானம் பெற்ற எரிக் கணேஷ்
மூக்குக் கண்ணாடியகத்தினரின் மற்றுமோர் இணை
சேவைதான்
தொலைத் தொடர்பு & பக்ஸ் சேவை
எங்களை நாடி வருவோரின் தொலைத்தொடர்பு, பக்ஸ்
வசதிகள் உடனுக்குடன் கவனிக்கப்படும்



எரிக் கணேஷ்
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. & FAX NO. 2486
(சி-7694)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
பிரிவு 3 O/L DAY CLASS
எமது வழமையான "Super Grade" ஆசிரியர் குழு
ஆரம்பம்: 01-06-1999
செவ். 8.00 A.M.
(66131)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-05-1999இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் இணைநூலகம்

சஞ்சீவி சிந்திகை

சஞ்சீவி 29-05-1999

நீங்கள் விரும்பும் புடைவைகளை விதம் விதமாக தெரிவு செய்ய

வினாயகர் புடைவை அகம்

62ஏ, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். (66096)

கருத்துக் கலசம்

சீரும் சிறப்பும்

மனிதனின் வாழ்க்கை பிறருக்கு உதவி செய்வதிலும் பிறர் நலன் பேணுவதிலுமே சிறப்படைகின்றது.

- டால்ஸ்டாய்.

உன்னைப போலவே உன் அயலவனையும் நேசி என்ற போதனையை, புத்திமதியை வாழ்க்கையில் கடைப்பிடிப்போர் மிகவும் குறைவு. அண்ணன் தம்பிக்குள்ளேயே மனக்கசப்பு வந்ததும் பகைமை பாராட்டும் பண்பற்ற தன்மை மலிந்து வரும் காலம் இது.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்று உறவினர்கள், ஊரவர்கள் தமக்குள் ஒற்றுமை பேணி பல நல்ல காரியங்களைச் செய்தனர்; பல பிரச்சினைகள், எதிர்ப்புகளுக்கு முகங் கொடுத்து வெற்றி பெற்றனர். அது அந்தக் காலம்.

இப்போது சமூகப்பணி, சமயப்பணி என்று புறப்பட்டு போட்டி, மனவேற்றுமை காரணமாகத் தமக்குள் பிளவுபட்டு, குளிக்கப் போய் சேறு பூசும் கூட்டத்தினரே அதிகம்.

ஆலயங்கள் முன்னர் ஒற்றுமையின் பிறப்பிடங்களாக விளங்கின. வடம் பிடித்து ஊரே தேர் இழுப்பது என்பது ஒற்றுமையைப் பிரதிபலிப்பதாக மட்டுமன்றி அதனை வலியுறுத்துவதாகவும் அமைகிறது.

ஆனால் இப்போது பிணக்குகள், பிரிவுகள், சண்டை சச்சரவுகளின் பிறப்பிடமாக ஆலயங்கள் மாற்றப்பட்டிருப்பது வேதனைக்குரியதாகும்.

உறவினர்களே ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக வாழ முடியாத போது, பிறர் நலன் பேணும் பழக்கம், பண்பு இலகுவில் வருமா என்ற கேள்வி எழுகிறது.

பிறர் நலன் பேணுவதாயின் சுய நலம் மேலோங்காது இருப்பது அவசியம். 'வாழு;வாழவிடு' என்ற மனப்பக்குவம் அதற்கு மிக இன்றி அமையாததாகும். மற்றவர்களை நேசிக்கும், அடுத்தவர் மீது அன்பும் இரக்கமும கொள்ளும் நல்ல குணவியல்பு வளர்க்கப்பட வேண்டும்.

அடுத்தவன் பசித்திருக்கும் போது எம்மால் அவ்வாறு புசித்திருக்க முடியுமா என்றும், அயலவன் துன்பப்படும் வேளை எனக்கு இத்தகைய துன்பம் வந்தால் எவ்வளவு கஷ்டமும் வேதனையும் அடைவேன் என்றும் சிந்திக்கும் மன உணர்வு தேவை.

அந்த மன உணர்வு மற்றவர்களின் துன்பங்களை தமது துன்பங்களாகவும் கஷ்டங்களாகவும் பார்க்க வழி செய்யும். அது படிப்படியாக பிறரை நேசிக்கவும் பிறருக்கு உதவவும் தூண்டுதலாக அமைந்துவிடும். அடுத்தவனுக்கு நாம் செய்யும் உதவி என்றோ ஒரு நாள், ஏதோ ஒருவழியில் எமக்கு உதவும் என்பதனை மனதில் பதிப்பதன் மூலம் பிறருக்கு உதவும் பண்பை வளர்த்துக் கொள்ளலாம். அதிலே சுய நலம் ஓரளவு ஊறியிருப்பினும் சொந்த வாழ்க்கையை முழுக்க முழுக்க சுய நலத்துக்குள் மூழ்கடிக்காது ஓரளவேனும் பொது நலத்தக்குள் நுழைக்கலாம்.

தமது நலனைப் போன்று பிறர் நலன் பேணினால் ஒருவனுக்குச் சிறப்பும் கீர்த்தியும் உண்டாகும். பிறருக்கு உதவி செய்வதற்கு மனதில் அன்பு வேண்டும். அன்பு இல்லாதவன் பண்பு இல்லாதவனே; அறம் இல்லாதவனே.

அன்பும், பண்பும், அறமும் ஒருசேரக் கொண்டவன் வாழ்க்கையில் சிறப்படைகின்றான். மேற்சொன்ன மூன்றுக்கும் அறிவு அடித்தளமாக அமைய வேண்டும். அறிவுள்ளவன் அன்புடன் அறமும் பண்பும் பேணுவான். அவ்வாறில்லாத அறிவு உண்மையான அறிவுடமை ஆகாது. பிறருக்கு உதவாதோர் அறிவுடையோருமல்லர்.

வெறும் பட்டங்களும் பதவிகளும் ஒருவரை அலங்கரிப்பதால் அவர் அறிவுடையவர் என்பதல்ல, அவரது குண இயல்புகளே சீரும் சிறப்பும் தருவன.

கர்மயோகி கௌதம புத்தர்

இன்று வெசாக் பூரணைதினம். புத்த பகவான் அவதரித்த - ஞானம் பெற்ற - நிர்வாண மடைந்த - புனிதநாள். இந்த வைகாசி விசாகத்தினத்தைத்தான் உலகெங்கும் உள்ள மக்கள் அனைவரும் 'வெசாக்' தினமாகக் கொண்டாடுகின்றார்கள்.

புத்த பகவான் குறித்து நமது வாழும் தெய்வம் சத்ய சாயி பாபாவும் சுவாமி விவேகானந்தரும் அருளிய கருத்துக்களை இன்று நாம் மீட்டுப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்ல்லவா?

புத்தரை நாம் கடவுளின் அவதாரமாக வழி படுகிறோம்.

இணையற்ற கர்மயோகியாகவும், மிகவும் தைரியம் வாய்ந்த - உலகம் இது வரையில் காணாத - மகத்தான - ஒழுக்க விதிகளைப் போதிப்பவராகவும் நாம் அவரைப் பார்க்கின்றோம்.

கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் கூறிய அறிவுரைக்கு நடைமுறை வடிவம் தருவதற்காகவும், அந்த அறிவுரையின் ஒரு பகுதியையாவது அன்றாட வாழ்க்கையில் நடத்திக் காட்டுவதற்காகவும் ஸ்ரீகிருஷ்ணரே மறுவடிவத்தில் புத்தராக அவதரித்தார்.

இரண்டாவது ராமர்!

புத்தர் ஏழைகளுக்கும் துன்பப்படுபவர்களுக்குமே தமது அறிவுரைகளை வழங்கினார். மக்கள் பேசிவந்த மொழியில் மக்களுக்கு உபதேசம் செய்வதற்காக சமஸ்கிருத மொழியையே அவர் ஒதுக்கி வைத்தவர்.

அவர் அவருக்குரிய அரியணையைத் துறந்து பிச்சை ஏற்பவராக, ஏழைகளோடும் தாழ்ந்தவர்களோடும் வாழ்ந்தார். இரண்டாவது ராமரைப் போல் அரிஜன மக்களையும் அவர் தமது மார்போடு அணைத்துக் கொண்டார்.

பிராம்மணத்துவம் காத்தவர்

தற்கால அறிஞர்கள், "புத்தர் பிராமணர்களின் உருவ வழிபாட்டையெல்லாம் அழித்து விட்டார்" என்று எழுதுகிறார்கள்.

இதைப் படிக்கும் போது எனக்கு சிரிப்புத்தான் வருகிறது.

பிராமணத்துவத்தையும், உருவ வழிபாட்டையும் புத்த சமயம் தான் உருவாகியது என்பதை இந்த அறிஞர்கள் சிறிதும் அறியாதவர்களாக இருக்கிறார்கள்.

மரணப்படுக்கையில்.....

புத்தரின் அற்புத மனநிலையை நினைத்துப் பாருங்கள்... அவரது மனவலிமை, மனத்தூய்மை, மனஅமைதி ஆகியவையெல்லாம் என்னை வியப்பில் ஆழ்த்துகின்றன. அவரிடம் உண்மையைத் தவறாகப் புரிந்துகொள்ளும் மயக்கம் ஒரு சிறிதும் இருந்ததில்லை. அவருடைய மூளையின் ஒவ்வொரு 'செல்'லும் பரிபூரணமாகப் பக்குவம் பெற்றிருந்தது.

புத்தர் தமது மரணப்படுக்கையில் தமது சீடர்களிடம் கூறிய பின்வரும் வார்த்தைகள் என்னை மெய்சிலிர்க்க வைக்கின்றன.

"எனக்காக யாரும் அழவேண்டாம். என்னைப் பற்றியும் நினைக்க வேண்டாம். உங்களுடைய ஆன்ம விடுதலைக்காக ஊக்கத்துடன் செயலில் ஈடுபடுங்கள். அப்படி நீங்கள் செய்வீர்களானால் நீங்களும் என்னைப்போல் ஆவீர்கள். நான் உங்களில் ஒருவன்தான். என்னை நான் எப்படி செய்து கொண்டேனோ, அதுதான் என்னுடைய இன்றைய நிலை. நீங்களும் பாடுபடுங்கள். என்னைப்போலவே மாறுவீர்கள்... எல்லாவற்றையும் ஆராய்ந்து சோதித்துப் பாருங்கள். முயற்சி செய்யுங்கள். அதன் பிறகே அதை நம்ப ஆரம்பியுங்கள். அப்படி நம்புவது பலருக்கு நன்மை தருவதாக இருந்தால், அதற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யுங்கள்."

புத்தரும் சங்கரரும்

ஆதிசங்கரரின் கூரிய அறிவாற்றலும்,ஆராய்ச்சி நோக்கும், பகுத்தறியும் மதி நுட்பமும் நமக்கு வேண்டும்.

அத்தோடு புத்தரின் கருணையும் பரோபகார இதயமும் சேர்ந்து நமக்கு இருக்க வேண்டும்.

இந்த இரண்டும் சேர்ந்துதான் - இந்த இணைப்புத்தான் - நமக்கு உயர்ந்த தத்துவத்தைத் தரும்.

புத்தர் காலத்திலிருந்துதான் விவேகம்,வைராக்கியம், தியாகம் போன்ற கருத்துக்கள் இந்தியா முழுவதும் நன்றாகப் பிரசாரம் செய்யப்பட்டன. அவர் காலம் முதல்தான் புலன்இன்பங்களை விடுவது என்பது ஆன்மீக வாழ்க்கையின் மிகவும் உயர்ந்த இலட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. புத்தரைப் போன்ற மகத்தான தியாகி இந்த உலகில் பிறந்ததே இல்லை.

புத்தரின் அறிவுரைகள் அனைத்தும் வேதாந்தத்தில் இருப்பவைதாம். காடுகளிலும் மடங்களிலும் முடங்கிக் கிடந்த, வேதாந்தக் கருத்துக்களை வெளியுலகத்திற்கு கொண்டுவந்த துறவிகளில் புத்தரும் ஒருவர்.

புத்தமதமின்றி இந்துமதம் இல்லை!

சாக்கிய முனி (புத்தர்) எதையும் அழிப்பதற்காக வரவில்லை: மாறாக, அவர் நிறைவு செய்வதற்காகவே வந்தார்.

அவர் இந்துமதத்தின் தர்க்க ரீதியான தத்துவ வளர்ச்சிக்காகவும், முடிவு நிலைக்காகவும் வந்தார்.

இந்துமதம் இல்லாவிட்டால் புத்தமதம் வாழ முடியாது; புத்தமதம் இல்லை என்றால் இந்து மதமும் நிலைக்காது.

புத்தரும் வியாசரும்

இளவரசராகப் பிறந்து பிறகு உலகத்தைத் துறந்த புத்தரின் தியாகம்தான் எவ்வளவு உயர்ந்தது!

புத்தர் ஞானம் அடைந்தபின்னர் ஒரு சமயம் தமது அரண்மனைக்குச் சென்றார். ஏன் சென்றார்?

தம் மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கள் ஆகியவர்கள் அனைவரையும் துறவறம் மேற்கொள்ளச் செய்வதற்காகவே அவர் சென்றார்.ஆகா அவருடையதுதான் என்ன அற்புதமான தியாகம்!

ஆனால் வியாசரைப் பாருங்கள்...அவரது மகனாகிய சுகதேவர் உலக வாழ்க்கையைத் துறந்து துறவறம் ஏற்கச் சென்றார்.

அப்போது அவர் சுகதேவரைத் தடுத்து "மகனே! நீ துறவறம் மேற்கொள்ள வேண்டாம். நீ இல்லறத்தில் இருந்தே ஆன்மீக வாழ்க்கையைப் பின்பற்று!" என்றார்.

புத்தரின் ஒரே கேள்வி

கௌதம புத்தரைப் போன்ற ஒழுக்க சீலர்களை நான் பார்க்க விரும்புகிறேன். அவர் எந்த உருவக் கடவுளையோ தனிப்பட்ட ஆன்மாவையோ நம்பவில்லை. அவர் அதைப்பற்றி கவலைப்படவே இல்லை.

அவர் யாருக்காகவும் தமது உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருந்தார்.

புத்தரின் கருணை இதயம்

இதோ, இங்குள்ள உலகில் துன்பம் நிறைந்திருக்கிறது. புத்தர் பெருமான் செய்ததைப் போல, இந்தத் துன்பத்தைக் குறைப்பதற்கு முயற்சி செய். அல்லது அந்த முயற்சியிலேயே உயிரை விட்டுவிடு.

"நன்மையைச் செய்யுங்கள்: அதோடு நல்லவராகவும் இருங்கள். இது உங்களை முத்திக்கு அழைத்துச் செல்லும்" என்று தீர்க்கதரிசிகளிலேயே புத்தர் ஒருவர் மட்டும்தான் கூறினார்.

எந்தவிதமான சுயநலநோக்கமும் இல்லாமல்

(XV ஆம் பக்கம் பார்க்க)

புத்தரின் போதனை

புத்தர் துறவை மேற்கொண்டபின், தேசத்தின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்தார். அவரது பிரகாசத்தையும், தெய்வீக அழகையும் பார்த்து மக்கள் வியந்தனர். அவரது பிரகாசத்தினால் கவரப்பட்டு, 'அம்பாஷாலி' என்ற பெண்ணொருத்தி அவரை அணுகினாள்.

"மிக உயர்ந்தவராகிய தாங்கள், காவி உடை தரித்த இளவரசன் போலக் காட்சியளிக்கிறீர்கள். இந்த இளம் வயதில் தாங்கள் காவி வஸ்திரம் தரித்ததன் காரணம் அறியாமலாமா?" என்று வினாவினாள். புத்தர் பதிலிறுத்தார்.

"மூன்று கேள்விகளுக்கு விடைகாணவே நான் துறவை மேற்கொண்டு காவிஉடை தரித்தேன். இப்போது இளமையாகவும், அழகாகவும் இருக்கும் இந்த உடல், நிச்சயம் ஒருநாள் முதுமையடைந்து, நோயுற்று, கடைசியில் அழியத்தான் போகிறது. எனக்கு இந்த முதுமை, நோய், இறப்பு இவற்றின் காரணத்தை அறிய வேண்டும்." என்றார்.

சத்தியத்தை அறிய விழையும், அவரது உயரிய நோக்கத்தினால் கவரப்பட்டு, அவள் அவரைத் தன் வீட்டுக்கு வந்து உணவை ஏற்குமாறு வேண்டிக் கொண்டாள். சிறிது நேரத்திற்குள்ளேயே கிராமம் முழுவதும் இச்செய்தி பரவிவிட்டது. கிராம மக்கள் ஒவ்வொருவராக வந்து, அவள் ஒழுக்கம் கெட்டவள், ஆகவே அவளது உபசரிப்பை ஏற்க வேண்டாம் என புத்தரிடம் வேண்டிக்கொண்டனர்.

அவர்களின் முறைப்பாடுகளையெல்லாம் புத்தர் பொறுமையாகக் கேட்டார். பின் புன்முறுவலுடன் கிராமத் தலைவரைப் பார்த்துக் கேட்டார்.

"நீயும், அவள் ஒழுக்கம் கெட்டவள் என உறுதியாகக் கூறுகிறாயா?"

அதற்கு அந்தக் கிராமத்தலைவன், "ஒரு முறை அல்ல, ஆயிரம் முறை கூறுவேன். அம்பாஷாலி ஒழுக்கம் கெட்டவள் என என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். ஆகவே தயவுசெய்து அவள் இல்லத்திற்குச் செல்லாதீர்கள்."

புத்தர் அவனது வலதுகரத்தைப் பிடித்துக் கொண்டு, கை தட்டுமாறு கூறினார். கிராமத் தலைவன் முழித்தான். ஒருகரம் புத்தரின் பிடியில் [illegible] கைதட்ட முடியும்?

"[illegible] ஒரு கையால் ஓசை எழுப்ப முடியாதே?" என்று அவன் வினவினான்.

புத்தர் பதில் கூறினார். "தானாகவே அவள் ஒழுக்கம் கெட்டவளாக மாறியிருக்க முடியாது. இக்கிராமத்தில் தீய ஒழுக்கம் நிறைந்த ஆண்களும் இருப்பதால்தான் அவள் ஒழுக்கம் கேள்விக்குரியதாக மாறியிருக்கிறது. இக்கிராமத்து மக்கள் அனைவரும் நல்லவர்களாக இருப்பார்களேயானால் அவள் ஒழுக்கமற்றவளாக மாறியிருக்க முடியாது. ஆகையால், மனிதர்களும் பணமும்தான் அம்பாஷாலியின் ஒழுக்கக் கேட்டிற்கு காரணம்."

இவ்வாறு சொல்லிய புத்தர் அங்கு கூடியிருக்கும் மனிதர்களில், தீமையின் சுவடுகூடப் படாதவர் என எவரேனும் தங்களைக் கருதினால் அவர்களது இல்லத்திற்கு வந்து தாம் உணவு ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார். எந்த ஒரு மனிதனும் முன்வரவில்லை.

பிறகு புத்தர் கூறினார்.

"இக்கிராமத்தில் இத்தனை மக்கள் தீய ஒழுக்கம் கொண்டவராக இருக்கும்போது, ஒரு பெண்மணியை மட்டும் நோக்கி, தவறானவள் எனச் சுட்டிக் காட்டுவது எங்ஙனம் சரியாக இருக்க முடியும்? தீயவர் இணைப்பினால் தான் அவளும் தீயவளாக மாறிப்போயிருக்கிறாள்!"- என்றார்.

அதனால்தான் "Tell me Your Company, I shall tell you what you are." எனச் சொல்கிறார்கள்.

தங்கள் தவறை உணர்ந்த மக்கள், புத்தரின் பாதங்களில் வீழ்ந்து, அவரது மன்னிப்பைக் கோரினர். அன்றிலிருந்து, அவர்கள் அம்பாஷாலியையும் தங்களில் ஒருத்தியாகக் கருதத் தொடங்கினர். அம்பாஷாலியும், துறவுப்பாதையைத் தேர்ந்தெடுத்து, ஆன்மீகப் பாதையில் நடக்கத்தொடங்கினாள்.

ஒரு தனி மனிதனின் நல்லவற்றிற்கும், தீயவற்றிற்கும் எவரும் பொறுப்பாக முடியாது. நன்மையுமும், தீமையும் பிறர் தர வரா. அவனே அவற்றிற்குப் பொறுப்பு. யார் நல்லவர்? யார் தீயவர்? முதலில் உன்னிடம் இருக்கும் தீய குணங்களை விட்டொழி. நல்லவர்கள் சங்கத்தில் சேர்ந்திரு.. உன்னிடமே மலையளவு தீமை இருக்கும் போது, மற்றவர் மேல் குற்றம் கண்டு சுட்டுவிரலை நீட்டுவது பாவச் செயல்.

இதையேதான் இயேசுவும் கூட வெளிப்படுத்தினார்.

-பகவான் சாயி பாபா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற் சண்டைகளில் கடற்படை தீவிரம்!

(முல்லைத்தீவுக் கடற் பகுதியில் மற்றொரு கடற்சண்டை இடம்பெற்றிருக்கிறது. முல்லைத் தீவுக் கடலுக்கும் திருமலைக் கடலுக்கும் இடையே அலம்பில் கடற்பகுதியில் செவ்வாய்க் கிழமை நள்ளிரவுக்குச் சற்று முன்னதாக மூண்ட இச்சமர் மறுநாள் புதன் அதிகாலை வரை சுமார் ஐந்து மணித்தியாலயங்களாக நடைபெற்றிருக் கிறது. செவ்வாய்கிழமை இரவு 10 மணியளவில் அலம்பில் கடலில் புலிகளின் நான்கு படகுகளை கடற்படையினர் அவதானித்து அவற்றைப் பின் தொடர்ந்து சென்று தாக்குதல் நடத்தியதாகவும்-

அந்த நான்கு படகுகளும் மூழ்கடிக்கப்பட டதாகவும் கடற்படையின் கிழக்குப் பிரிவு தலை மையக வட்டாரங்கள் முதலில் தெரிவித்தன.

தொடர்ந்து அப்பகுதிக்கு கடற்புலிகளின் மேலும் இரு படகு அணிகள் விரைந்து வந்து சமரில் இறங்கியதாகவும் -

கடற்புலிகளின் மொத்தம் 12 கடற்கலங்கள் இந்தச் சண்டையில் ஈடுபட்டதாகவும் -

அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சமரில் கடற் புலிகள் சிலர் பலியானதாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

"இது கடற்புலிகளுக்கு ஏற்பட்ட பெரிய இழப்பு" என்று கடற்படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடற்படையினரின் தாக்குதலுக்கு முதலில் இலக்கான நான்கு படகுகளும் வடக்குக் கடலில் இருந்து தெற்கே திருமலைக் கடலை நோக்கிச் சென்று கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நான்கு படகுகளிலும் ஆயுதங்கள் அல்லது புலிகளின் உயர் நிலை தளபதிகள் இருந்திருக்கலாம் எனக் கடற்படையினர் நம்பு வாதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தப் படகுகளைப் பாதுகாப்பதற்காக கடற்புலிகளின் படகு அணிகள் விரைந்து அப்பகுதிக்கு அனுப் பப்பட்டிருப்பது அதனை உறுதிப்படுத்துவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தக கடற்சண்டையில் கடற்படையினருக்கு இழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும்–

கடற்படைப் படகு ஒன்றுக்கு சிறுசேதமே ஏற் பட்டது என்றும் கொழும்பில் பாதுகாப்பு அமைச் சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இச்சமர் தொடர்பான முழுமையான இரு தரப்புத் தகவல்களை இப்பத்தி எழுதும் வரை பெறமுடியவில்லை.



கடற்புலிகள்

இந்தக் கடற்சமரில் தமது தரப்பில் லெப். கேணல் தரத்திலான ஓர் உறுப்பினர், மூன்று மேஜர்கள், ஒரு கப்டன் உட்பட ஏழு கடற்புலிகள் வீரச்சாவடைந்ததாக புலிகள் அறிவித்துள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன. அவர்களின் பெயர் விவரங்கள் உடனடியாகக் கிடைக்க வில்லை.

கடந்த மே தினத்தன்று முல்லைத்தீவுக் கடலில் கடற்படையினர் மேற்கொண்ட தாக்கு தலுக்குப் பின்னர் கடற்படையினர் நடத்திய பெரிய கடற்சண்டை இது என்று பாதுகாப்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. மே முதலாம் திகதி நடந்த சமரிலும் கடற்புலிகளுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. அன்றையதினம் திருகோண மலையில் இருந்து வந்த புலிகளின் படகு அணி கடற்படையினரின் வழிமறிப்புத் தாக்குதலில் சிக் கியது. அந்தப் படகு அணிக்கு உதவுவதற்காக முல்லைத்தீவில் இருந்து கடற் புலிகளின் படகு கள் விரைந்து சென்று சமரில் ஈடுபட்டன. சுமார் நான்கு மணி நேரம் நீடித்த இச்சமரில் புலிகள் பதினொருபேரை இழக்க வேண்டி ஏற்பட்டது. இவர்களில் லெப்டினன்ட் கேணல் தர்ஷனும் (முத்துக்குமார் கலைஞானதேவன்) ஒருவர். தாக் குதலில் சிக்கிய படகு அணிக்கு உதவுவதற் காக முல்லைத்தீவில் இருந்து சென்ற கடற்புலிக ளின் அணிக்குத் தலைமை வகித்துச் சென்றவர் இவர்.

இந்தச் சமர் நடந்து 24 தினங்களுக்குப்பிறகு கிழக்குக் கடலில் மீண்டும் கடற் புலிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது கடற்படை.

அண்மைக்காலமாக கடற்சண்டைகளில கடற்படையினர் காட்டிவரும் தீவிரம் குறித்து இப்பத்திகளில் முன்னரும் குறிப்பிட்டிருந்தோம். ஈழ யுத்தத்தில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப் பதில் முக்கியபங்கு பணியாற்றும் பலமான படை யாக கடற்படையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதில் தற்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திசேரா தீவிர ஆர்வம் கொண்டுள்ளார்.

கடற்படைக்கு நவீன வடிவம்

கடற்படையை நவீனமயப்படுத்தவும் புதிய நூற்றாண்டுக்குத் தக்கதாக மாற்றி அமைக்கவும். புதிய கடற்கலங்களை இணைத்து பலத்தைப் பெருக்கவும் திட்டமிட்டிருப்பதாக 'ஜேன்ஸ் டிபென்ஸ் வீக்லி' (Jane's Defence Weekly) என்ற பாதுகாப்புச் சஞ்சிகைக்கு அளித்த பேட்டி யில் அட்மிரல் திசேரா கூறியிருக்கிறார்.

தற்போதைய யுத்தத்தில் கடற்படையினரின் பங்கு மற்றும் புதிய நூற்றாண்டுக்கு ஏற்றவாறு அதை எவ்வாறு பலப்படுத்த வேண்டும் என்பவை குறித்து அப்பேட்டியில் அவர் விவரித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கடல்வழித் தொடர் புகளைத் துண்டித்தல் மற்றும் கடற்சமர்களில் கடற்படையினர் அண்மைக்காலத்தில் காட்டி வரும் தீவிரம் மற்றும் குறிப்பிடக்கூடிய வெற்றி கள் என்பன கடற்படைக்கு ஒரு நவீன வடிவம் கொடுக்கப்படவேண்டியதன் அவசியத்தை அரசு உணரும்படி செய்துள்ளன.

இரண்டாம் ஈழப்போர்க்காலத்தின் இறுதியிலும் 3ஆம் ஈழப்போரின் தொடக்கக்காலத்திலும் விடு தலைப் புலிகளிடம் - கடற்புலிகளிடம் - நன்கு வாங்கிக்கட்டி மிகவும் ஆட்டங்கண்ட படைப்பிரி வாக விளங்கிய கடற்படை தற்போது புதுவேகம் பெற்று வளர்ச்சி கண்டிருப்பதாக பாதுகாப்பு விமர்சகர்கள் கருதுகின்றனர்.

வடக்கில் யுத்தத்தை விரிவுபடுத்தி விடுத லைப்புலிகளை வன்னிக்காட்டுக்குள் முடக்கு வதில் இராணுவம் வெற்றிபெற்ற போதிலும் புலி கள் தங்கள் கடல்வழித் தொடர்புகளைத் தொடர்ந்தும் சுதந்திரமாகப் பேணி வரமுடிவதால் தான் இன்னமும் அவர்கள் பலம்பெற்று விளங்கு கின்றனர் என்பதை பாதுகாப்பு ஆலோசகர்கள் அரசுக்கு அடிக்கடி சுட்டிகாட்டி வருகின்றனர்.

புலிகளின் ஆயுதக்கடத்தல் மற்றும் கடல் வழித் தொடர்புகளை முற்றாகத் துண்டிப்பதன் மூலம்தான் தரையில் இராணுவம் ஈட்டும் வெற் றிகளைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பது அவர்களின் கருத்தாகும். அரசும் இது விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. புலிகளின் கடல் போக்கு வரத்தைக் கட்டுப்படுத்த இரு திட்டங்களை அரசு தீவிரமாக்கியுள்ளது.

ஒன்று கடற்படைப்பலத்தைப் பெருக்குவது. அடுத்தது புலிகளின் ஆயுதக்கடத்தல் மற்றும் கப்பல் போக்குவரத்து நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நாடுகளுக்கு ராஜதந்திர ரீதியில் அழுத்தம் கொடுப்பது.

இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுக்கான பொதுவான பிரச்சினையாக புலிகளின் ஆயுதக் கடத்தல் விடயத்தை முக்கியத்துவப்படுத்துவதற் கும் –

தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் ராஜீக வழிகளில் நெருக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் இது விடயத்தில் அந்நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் -

அரசு - குறிப்பாக வெளிவிவகார அமைச்சு- தீவிரமாக முயன்று வருகின்றது.

கடற்படைத் தளபதி சிசில் திசேராவின் தக வலின்படி கடற்படையில் மூன்று அதிவேக தாக் குதல் படகுகள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இரண்டு மேலதிக நடுத்தர ரோந்துப் படகுகளும் கிடைத்துள்ளன. இஸ்ரேலிடம இருந்து ஹெலிக்கொப்டர் வசதியுடன் கூடிய பலநோக்குக் கடற்படைக் கப்பல் உட்பட கடற்கலங்களை வாங்குவதற்கான கேள்விகள் பெறப்பட்டுள்ளன. இவை கிடைத்ததும் கடலில் புலிகளுக்கு எதி ரான ரோந்து நடவடிக்கைகளை மேலும் தீவிர மாக்க முடியும் என கடற்படை நம்புகின்றது.

தளபதியின் தாய்லாந்து விஜயம்

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியா பாங்கொக் சென்றுள்ளார். அவர் நாடு திரும்பும் வரை பதில் தளபதியாக இராணுவத்தின் பிரதம அதிகாரியும் வன்னிப் படைகளின் தளபதியுமான மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல [illegible]

அமெரிக்க மற்றும் தாய்லாந்துப் படைகளின் 18 ஆவது வருடாந்த கூட்டு இராணுவப் பயிற்சி தாய்லாந்தில் நடைபெறுகின்றது. இந்த மாபெ ரும் இராணுவப் பயிற்சியின் பார்வையாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர். இந்த அழைப்பை ஏற்றே இலங்கை இராணுவத் தளபதி வீரசூரியாவும் பாங்கொக் சென்றுள்ளார்.

'கோப்ரா கோல்ட்' (Cobra Gold) என அழைக்கப்படும் இந்தக் கூட்டு இராணுவப் பயிற் சியில் சுமார் 10 ஆயிரம் அமெரிக்கப் படையின ரும் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தாய்லாந்துப் படையினரும் நேரடியாகப் பங்குபற்றுகின்றனர்.

இந்தக் கூட்டுப் பயிற்சிக்கான பிரமாண்டமான ஏற்பாடுகள் கடந்த சில வாரங்களாகவே நடை பெற்று வந்தன. இரு நாடுகளின் படையினருடன் யுத்தக் கப்பல்களும், சண்டை விமானங்களும் இப்பயிற்சியில் பங்குபற்ற உள்ளன.

இராணுவத் தளபதியைத் தொடர்ந்து கடற் படை மற்றும் விமானப்படை என்பவற்றின் தள பதிகளும் பாங்கொக் சென்று இப்பயிற்சியைப் பார்வையிட உள்ளனர்.

'கோப்ரா கோல்ட்' இராணுவப் பயிற்சியின் பார்வையாளராக இலங்கைத் தளபதிகள அழைக் கப்பட்டிருப்பது எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள இப்பயிற்சிகளின் போது இலங்கைக்குப் பார் வையாளர் அந்தஸ்து கிடைக்கும் சாத்தியங் களை உறுதிப்படுத்துவதாக அவதானிகள குறிப் பிடுகின்றனர். அத்துடன் இலங்கை இராணுவத் தைச் சேர்ந்த குழுக்கள் எதிர்காலத்தில இந்தப் பயிற்சிகளில் கலந்து கொண்டு அமெரிக்க, தாய்லாந்து அதிகாரிகளிடம் பயிற்சி பெறுவதற் கும் இதன் மூலம் வாய்ப்புக் கிட்டியுள்ளதாக வும் சுட்டிக்காட்டப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கடத்தல் மற்றும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக் கில் பாங்கொக் அரசுடன் புதிய ராஜதந்திர அணுகுமுறைகளைப் பலப்படுத்தும் முயற்சியில் கொழும்பு அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தற்சமயம் விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பாங்கொக் சென்று அங்குள்ள அரச உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்த உள்ளார்.

இந்த விஜயத்தின் முதற்கட்டமாக கம்போடி யாவுக்குச் சென்றிருந்த கதிகாமர் மன்னர் சிஹா னுக் உட்பட அந்நாட்டுத் தலைவர்களைச் சந் தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

முக்கியமாக விடுதலைப் புலிகள் கப்பல்கள் மூலம் இலங்கைக்கு ஆயதங்களைக் கடத்து வதை நிறுத்தவதற்கு உதவுமாறு கம்போடியா அரசை அவர் கேட்டுள்ளார். இது விடயத்தில் இலங்கைக்கு உதவுவதாக கம்போடியா உறுதி அளித்தள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'போர்க்கோஷம் - 4'

நாட்டின் முக்கியமான ஐந்து நகரங்களில் தாக்குதல்களை நடத்துவதற்கு புலிகள் திட்ட மிட்டுள்ளதாக படைவட்டாரங்கள் ஊடாக தக வல் கசியவிடப்பட்டள்ளது.

கொழும்பு, கண்டி, கதிர்காமம், திருகோண மலை, நீர்கொழும்பு ஆகிய நகரங்களிலேயே தாக்குதல்கள் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக அந் தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் 'போர்க் கோஷம் - 4' நடவடிக் கையைப் படையினர் ஆரம்பிப்பதற்கு முன்னர் அதனை எப்படியாவது தடுப்பதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் முடுக்கிவிடுமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உத்தரவிட்டுள்ளதாகவும்-

இதற்கு அவர் ஐந்து தளபதிகளையும் நிய மித்துள்ளதாகவும் – தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்மாகாணசபைத் தேர்தல் காலத்தில் தெற் கில் பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதி செய்ய வேண்டிய அவசியம் படையினருக்கு உள்ளது. [illegible] விரும்பிய இடத்தில் தாக் குதல்களை நடத்தும் ஏற்பாடுகளுடன் புலிஉறுப் பினர்கள் ஏற்கனவே தலைநகருக்குள் ஊடுருவி உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் புலிகளின் தாக்குதல்களைத் தடுப்பதற்கான ஓர் உத்தியாகவே '5 நகரங்களில் தாக்குதல் நடத்த புலிகள் திட்டம்' என்ற செய் தியை புலனாய்வு வட்டாரங்கள் கசிய விட்டுள் ளன. இதன் மூலம் புலிகள் போட்டுள்ள திட்டங் களைக் குழப்ப முடியும் எனப் படைத்தரப்பு எதிர்பார்க்கலாம். வன்னியில் படையினரின் முன் னேற்றங்களை மேலும் அனுமதிப்பது புலிக ளுக்கு சவாலான விடயம்தான். வன்னியில் புலி கள் நடத்திவரும் ஆள்சேர்ப்பு, உடற்பயிற்சித் திட்டம் மற்றும் போர் எழுச்சி நிகழ்வுகள் என்பன புலிகள் பெரியதொரு சமருக்குத் தயாராகின்றனர் என்பதையே வெளிப்படுத்தவதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர். 'போர்க்கோஷம்-III' படை நடவடிக்கை எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்க வில்லை. இதற்குக் காரணம் சிராட்டிக்குளம் பகுதியில் கடந்த 14ஆம் திகதி புலிகள் நடத் திய எதிர்ச்சமர் ஆகும். எனவே அடுத்து 'போர் கோஷம்-IV' நடவடிக்கை விரைவிலேயே - ஜுன் 10ஆம் திகதி தேர்தலுக்கு முன்னா - இடம் பெற லாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிடியை இறுக்கும் புலிகள்

புலிகளின் கடிதங்களை அடுத்து குடாநாட் டில் அரச நிர்வாகச் செயற்பாடுகள் பெருமள வில் பாதிக்கப்பட்டுள்ளன. செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அரச அலுவலகங்கள் யாவும் மூடிக்கிடக்கின்றன.

அரச ஊழியர்கள் இவ்விரு தினங்களிலும் கடமைக்குச் செல்லாமல் வீடுகளில் நிற்பதால் நிர்வாகப் பணிகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக் கிறது. புலிகளின் எச்சரிக்கைக் கடிதங்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் மூன்றாவது நாளாக நேற்று வெள்ளிக்கிழமையும் குடாநாட்டில் அரச செயலகங்கள் முற்றாகச் செயல் இழந்தன.

ஆயுதங்கள் இன்றி வெறும் கடிதங்கள் மூலமாகவே குடாநாட்டில் அரச நிர்வாகச் செயற் பாடுகளைக் குழப்புவதில் புலிகளுக்கு வெற்றி கிட்டி இருப்பதாகஅவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இது விடயத்தை இப்போதைக்கு கடும் போக் குடன் அணுகுவதில்லை எனக் குடாநாட்டு படைத்தலைமை முடிவு செய்திருப்பதாகத் தெரி வதால் இது விடயத்தில் கொழும்பின் நிலைப் பாடு என்ன என்பதை அறிவதற்காக இங்குள்ள அரச அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட தரப்பினரும் காத்திருக்கின்றனர்.

இந்த விவகாரத்தில் தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டிய பொறுப்பு உள்நாட்டு அலுவல் கள் அமைச்சுக்குரியதே. எனினும் அந்தத் தரப்பு இதுவரை மௌனமாகவே இருந்து வருகிறது.

குடாநாட்டு சிவில் நிர்வாகத்தில் புலிகளின் தலையீட்டை அடுத்து எழுந்துள்ள நிலைமையை ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சில் உயர் மட்ட மாநாடு ஒன்று வியாழக்கிழமை நடை பெற்றது. இந்த மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அதிகாரிகள், யாழ்.படை அதிகாரிகள் கலந்து கொண்டதாக இப் பத்தியை எழுதும் போது தகவல் கிடைத்தது. இந்த மாநாட்டில் எடுக் கப்பட்ட முடிவுகள் குறித்து தகவல் எதுவும் உடனடியாகக் கிடைக்கவில்லை. இது விடயத் தில் எத்தகைய முடிவு எடுக்கப்பட்டாலும் ஆயி ரக்கணக்கான அரச ஊழியர்களின் பாதுகாப் புக்கு உத்தரவாதம் தரமுடியாது. எனவே அரச அலுவலகங்கள் மீண்டும் வழமைக்குத் திரும்பு வது இப்போதைக்கு சாத்தியமானதாக இருக் காது. இது விடயத்தில் தலையிடாமல் ஒதுங்கி யதன் மூலம் சாதாரண ஊழியர்களுடன் முரண்பட் டும் நிலையை படையினர் தவிர்த்துக் கொண்டுள் ளனர். இது புலிகள் எதிர்பார்க்காததாகக் கூட இருக்கலாம்.

ஆனால் நிர்வாகச் செயற்பாடுகளைக் குழப் பும் முயற்சிகளைப் புலிகள் மேலும் விஸ்தரிப் பார்களேயானால் இராணுவத்தினர் இப்படியே வாளாவிருக்க முடியாது.

புலிகள் தமது நோக்கத்தில் தீவிரமாக இருப்பது தெரிகிறது.

நிர்வாகச் செயற்பாடுகளைக் குழப்பும் அதே நேரம் படையினரின் செறிவு ஐதாக்கப்பட்ட இடங் களில் தாக்குதல்களையும் புலிகள் தீவிரப் படுத்தத் தொடங்கி இருப்பது போல் தெரிகிறது. அரியாலைப் பகுதியிலும், வல்வெட்டித்துறை யிலும் 24 மணி நேர இடவெளிக்குள் இடம்பெற்ற இரு தாக்குதல் சம்பவங்கள் இதனையே காட்டுகின்றன.

*

மறுபக்கம் வாரவிமர்சனம்

நல்லூர் தாஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வழமை நிலையும் இயல்பு வாழ்க்கையும் திரும்ப

இன்றுள்ள தள நிலைமை உதவாது; மாற வேண்டும்

உள்ளும் புறமும்

குறுமுனி

வெளிமாவட்டங்கள் அல்லது வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு வருவோர் இங்கு வழமைநிலை திரும்பி விட்டதா, மக்கள் இயல்பு வாழ்க்கை நடத்துகிறார்களா, மக்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றனவா என்பவற்றை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவது வழக்கம்.

ஒருபிரதேசத்தின் இன்றைய நிலையை அறிவதற்கு மேற்கூறிய மூன்று தரவுகளும், தகவல்களும் அவசியம் என்பதனாலேயே வெளியிடங்களில் இருந்து வருவோர் அவற்றை அடுத்தடுத்துக் கேட்கிறார்கள். ஒருவகையில் மூன்று விடயங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.

இந்த மூன்று கேள்விகளுக்குமான பதில்களை இங்குள்ளவர்களிடமிருந்து அறிந்து கொள்வதோடு மட்டும் வெளியில் இருந்து வருவோர் நிறுத்திக கொள்வதில்லை. தாமும நேரில் அறிந்து கொள்கிறார்கள். விஷயங்களை விரைவில் கிரகிக்கக் கூடியவர்கள், இங்குள்ளவர்கள் சொல்லாத எத்தனையோ விவரங்களை அக்குவேறு ஆணிவேறாகத் திரட்டி விடுவார்கள்; தம்மோடு - தமது மூளைக்குள் - கொண்டும் செல்கிறார்கள்.

இங்கு எல்லாம் சிறப்பாக நடக்கின்றன; மக்கள் வசதியான வாழ்க்கை நடத்துகிறார்கள்; அதற்கேற்ற வகையில் அரசு எல்லா உதவிகளையும் செய்கிறது - என்று சொல்வதற்கே அரசு விரும்புகிறது. அதனால் இங்குள்ள உண்மை நிலை வெளியாருக்குச் சரியாக, விவரமாகச் சொல்லப்படுவதில்லை. அரசாங்கத்தின் பிரசாரமும் அந்த வகையைச் சார்ந்ததே.

போரினால் சிதைந்துபோன ஒரு பிரதேசத்தை இரண்டொரு வருடங்களில் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது என்பது இயலாத காரியம். நிதிவளமும் ஏனைய வளங்களும் கொட்டிக்கிடந்தால் கூட, புனர்வாழ்வு, புனரமைப்பு ஆகியவற்றைத்தானும் கற்பனையில் திட்டமிடுவது போல நிறைவேற்ற முடியாது. சாதாரண அமைதியான சூழ்நிலையிலேயே அது அசாத்தியம். அவ்வாறிருக்க இராணுவம் நிலை கொண்டுள்ள ஒரு பிரதேசத்தில் இயல்பு வாழ்க்கையை காணுவது, அடைவது என்பது பெருஞ்சிரமமாகும்.

யாழ்ப்பாணம் வழமை நிலைக்குத் திரும்ப வேண்டுமாயின், மக்கள் இயல்பு வாழ்க்கையை நடத்த வேண்டுமாயின், குடாநாடு வளர்ச்சி காண வேண்டுமாயின், போர்க்காலத்தில் உண்டான காயங்கள் - புண்கள் - ஆற வேண்டுமாயின் மக்களின் அன்றாட வாழ்க்கையை நிர்ணயிப்பதில் இராணுவத்துக்கு உள்ள பங்கு முற்றாக நீக்கப்பட வேண்டும்.

அரசியல் நோக்கம் ஒன்றை எய்துவதற்காக இங்கே இராணுவம் நிறுத்தப்பட்டிருப்பதால் அரசாங்கம் அதனை ஒரு போதும் செய்யமாட்டாது. ஆகையால் வழமைநிலை, இயல்பு வாழ்க்கை என்பன இப்போது கிடைக்காது என்பது மட்டும் நிச்சயம்!

இந்த முக்கியமான விடயத்தை குடாநாட்டில் ஒருவாரம் தங்கியிருந்து தீவுப்பகுதி உட்பட பல பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை அறிந்த வெளிநாட்டவர் ஒருவர் கூறிச் சென்றுள்ளார். இங்கு இயங்கும் தொண்டர் நிறுவனங்களில் ஒன்றின் பிரதிநிதியான அவர் இராணுவம் நிலை கொண்டிருப்பதால் இயல்பு நிலை ஏன் தோன்ற முடியாது என்பதற்கான காரணங்களையும் தனிப்பட்ட ரீதியில் விளக்கிச் சொல்லியுள்ளார்.

யாழ்ப்பாணம் வழமை நிலைக்குத் திரும்ப வேண்டுமாயின், குடாநாட்டின் சகல பகுதிகளிலும் சந்திக்குச் சந்தி அமைக்கப்பட்டு உள்ள பாதுகாப்புக் காவல் அரண்கள் அகற்றப்பட வேண்டும். ஊரடங்கு விதி நீக்கப்பட வேண்டும். இராணுவ முகாம்கள் வாபஸ் பெறப்படுவதும் அவசியம். இங்கு வாழும் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு, இயங்குவதற்கு இராணுவத்தினர் உட்பட எந்தத்தரப்பினரதும் தலையீடும் மக்களிடம் இருக்கலாகாது.

இத்தகைய சூழல் ஒன்று இப்போதைக்கு இல்லை. நீண்ட காலத்திற்குப் பின்னரும் உண்டாக்கப்படுவதை அரசாங்கம் அடியோடு விரும்பாது.எனினும் அந்த வெளிநாட்டவர் தமது நிறுவன அதிகாரிகளிடம் உத்தியோகப்பற்றில்லாத முறையில் கூறிய அவதானிப்புக்கள் கவனத்திற்கு உரியனவே. அவர் இங்கு உத்தியோகப்பற்றற்ற முறையில் கூறியதை தலைமை அலுவலகத்திற்குச் சென்றதும் உத்தியோக ரீதியான தமது அறிக்கையாகச் சமர்ப்பித்தாலும் சமர்ப்பிக்கக் கூடும்; யாரறிவார் என்ன நடக்குமென்று.....?

எப்படியோ அவர் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடிய சில அவதானிப்புக்களைப் பார்ப்போம்.

* மேலே குறிப்பிட்ட சூழ்நிலை உருவாக்கப் படுமானல் இப்பொழுது சுமார் ஐந்து லட்சமாக இருக்கும் குடாநாட்டு மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். சுதந்திரமான சூழலில் வாழும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பதனை அறிந்ததும், இங்கிருந்து இடம் பெயர்ந்து சென்றும், பாதுகாப்பு இல்லை என்று கருதி வெளிமாவட்டங்களுக்குச் சென்றும் வாழும் மக்கள் திரும்பிவந்து தமது சொந்த இடங்களில் குடியமரத் துணிவார்கள; வருவார்கள்.

* மேலும் குடாநாட்டில் பல பகுதிகளில் மக்கள் இன்னும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. அந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி மக்கள் விரும்பியவாறு அவர்களைக் குடியமர அனுமதிக்க வேண்டும்.

* மீளக்குடியமர்வு நிவாரணம், வீடமைப்பு நிதி உதவி,வறுமை நிவாரணம் ஆகிய எதனாலும் இப்பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரத்தை அவர்களுக்குத் திருப்பித்தரும் வகையில் மேம்படுத்துவது இயலாத காரியம்.

* பாதுகாப்புக் காரணத்தை முன்னிறுத்தி தொழில்களைச் செய்வதற்குச். நேரடியான, மறைமுகமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றை நீக்கியும் புதிய தொழில் முயற்சிகளை ஊக்குவித்து ஆரம்பிப்பதன் மூலமுமே குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும்.

எட்டுமணி நேரத்தொழிலா?

* விவசாயம் செய்ய அனுமதிக்கப்படாத இடங்களில், நிலங்களில் அத்தொழிலை மேற்கொள்வதற்கு வகை செய்யப்பட வேண்டும்.

* விவசாயத்தை எட்டு மணி நேரத் தொழிலாகக் கருதக் கூடாது. அது 24 மணிநேரத் தொழில். விவசாயி ஒருவர் தனது தோட்டத்தில் உள்ள பயிர்களுக்கு உரிய நேரத்திலும், தனக்கு வசதியான நேரத்திலும் தண்ணீர் இறைக்கவும், பசளையிடவும் வசதி செய்யப்பட வேண்டும். தனக்குப் பட்ட நேரத்தில் தோட்டத்தில் இறங்கி வேலை செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.

* குடாநாட்டின் இரண்டாவது பிரதான தொழி லான கடற்றொழிலுக்கு கண்டகண்ட மாதிரிக் கட்டுப்பாடுகள் போடப்படுகின்றன. இத்துறை மீளவளர வேண்டுமானால் இக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும்.

* கடல் வலயத் தடைச் சட்டத்தை:ும் அமுல் செய்து, குறுகிய தூர எல்லைக்குள்ளேயே மீன் பிடிக்கலாம் என்று கட்டுப்படுத்தினால் கடற்றொழில் எவ்வாறு வளர்ச்சி காண முடியும்?

மீன் கிடைக்கக்கூடிய வேளையில் கடலுக்குச் செல்லவிடாது தடுத்துவிட்டு, அது குறைவாகக் கிடைக்கும் நேரத்தில் மட்டுமே மீன் பிடிக்க முடியுமென்றால் மீனவர்கள் தமக்குரிய ஜீவனோபாயத்தை எப்படிப் பெறுவது? கடற்றொழிலையும் எட்டு மணி நேரத் தொழிலாகக் கருதமுடியாது; கருதக்கூடாது.

* விவசாயம், கடற்றொழில் மட்டுமன்றி ஏனைய தொழில்களையும் எட்டு மணி நேரத்தொழில்களாகக் கருதித் தடைகளைப் போடாமல் அவரவர் விருப்பத்துக்கும் வசதிக்கும் ஏற்ப சுதந்திரமாகச் செய்யக் கூடிய சூழ்நிலை உருவானால் மட்டுமே குடாநாட்டின் பொருளாதாரம் வளரும் இயல்பு நிலை திரும்பும்.

* பொருளாதார ரீதியில் வளர்ச்சி காண்பதற்கான வளங்கள் குடாநாட்டில் உள்ளன. ஆனால் பாதுகாப்புக் காரணங்கள் கருதிய கட்டுப்பாடுகளினால் அவை வீணடிக்கப்படுகின்றன என்றே சொல்லலாம்.

*யாழ்ப்பாண மக்கள் எதிர்க்கொள்ளும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் பாதுகாப்புக் காரணமே மூலவிசையாக இருப்பதனை அவதானிக்க முடிகிறது.

நெடுந்தீவுப் பகுதியில் மீன்வளமும், கால்நடை வளமும் நிறைய உண்டு. ஆனால் மீனையும் கால்நடைகளையும் வெளியே கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டினால் மக்கள் அவற்றைத் தக்கவாறு பயன்படுத்த முடியாதிருப்பதை அவதானிக்க முடிகிறது.

- இதனால் நெடுந்தீவில் ஒரு கிலோ மீன் 50 ரூபாவாகவும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் 150 ரூபா முதல் 200 ரூபா வரையும் விற்பனையாகிறது. அதே போன்று நெடுந்தீவில் ஒரு கிலோ மாட்டிறைச்சி 50 ரூபாவாகவும் ஏனைய இடங்களில் 160 ரூபாவாகவும் விற்பனையாகின்றது. பொருள்கள் நிறையவுள்ள இடங்களில் இருந்து குறைவாக உள்ள - தேவை உள்ள - இடங்களுக்கு எடுத்துச் சென்று இரு சாராரும் லாபம் பெறமுடியாதிருக்கிறது. இதற்குப் பாதுகாப்பு நிலைமைகளும் ஆபத்தை விலைக்கு வாங்காது தப்பிக் கொள்ள நினைக்கும் எண்ணமுமே காரணங்களாகும்.

மக்கள் சுதந்திரமான, அச்சமற்ற, தலையீடு இல்லாத சூழ்நிலையில் வாழ்வதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டால் மட்டுமே இங்கு இயல்பு நிலை தோன்றும் என எதிர்பார்க்கலாம்.

தொண்டர் நிறுவன அதிகாரி ஒருவர் ஒருவாரம் மட்டும் தங்கியிருந்து கண்டறிந்த அம்சங்கள் இவை. இங்குள்ள அதிகாரிகளுக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ தெரியாதவை அல்ல. தெரிந்தும் என்ன செய்வது? என்ன செய்வார்கள்?

அவ்வப்போது, அக்கறையுடைய தரப்பினர் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் மீது அரசியல் நோக்கங்களுக்காகவும், காரணங்களுக்காகவும் குதிரை விடுவது வழக்கமாகி விட்டது. நடப்பதை, நிகழ்வதைப் பார்த்துக் கொண்டிருக்க மக்கள் பழகி விட்டார்கள்; பழக்கப்படுத்தப்பட்டு விட்டார்கள். இதிலிருந்து மீள்வதற்குப் புதிய சிந்தனையும் நோக்கும் தேவை.

பாதுகாப்பு அமைச்சை சீண்டமுடியுமா?

வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் தலைவர் [illegible] அவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார். இரண்டு நாள்கள் - புதன்கிழமையும் வியாழக்கிழமையும் தங்கியிருந்து சில நிகழ்ச்சிகளிலும், மாநாடுகளிலும், சந்திப்புக்களிலும் கலந்துகொண்டுவிட்டு அவசர அவசரமாக வெள்ளிக்கிழமை காலை கொழும்பு திரும்பிவிட்டார்.

வ.மா.பு.பு. அதிகாரசபையின்(RAAN) தலைவர் அடிக்கடி யாழ்ப்பாணம் வருவதில்லை. அனேகமாக இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையே வருவார். அதுவும் வந்தார், நின்றார், சென்றார் என்று கூறுமளவுக்கு அவசர விஜயமாகவே இருக்கும்.

கொழும்பு திரும்புவதற்கு முன்னர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்துவார். ஆனால் பத்திரிகையாளர்களின் பல கேள்விகளுக்குப் பதிலளிக்கும் பொறுப்பை அங்கு பிரசன்னமாகி இருக்கும் வேறு அதிகாரிகளிடம் விட்டுவிடுவார். பெறுமதியான தகவல்களை அவர் வாயிலிருந்தே பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் செல்லும் பத்திரிகையாளர்கள் பல தடவைகள் அதிருப்தி அடைவதுண்டு. அல்லது ஏமாற்றம் கொள்வதுண்டு.

இம்முறையும் கடந்த வியாழக்கிழமை பிற்பகலில் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பல கேள்விகளுக்கு அரசாங்க அதிபர் சண்முகநாதனும் RAAN பொதுமுகாமையாளர் என்.வாமதேவனுமே பதிலளித்தனர்.

குடாநாட்டு மக்களின் பிரதான பிரச்சினையாக கப்பற்போக்குவரத்துக் குறித்து இறுதி முடிவு என்ன, பிந்திய நிலை என்ன என்று செய்தியாளர்கள் துளைத்தனர். அதற்கு ஒபடகேயே பதில் தந்தார்.

வ.மா.பு.பு. அதிகாரசபை சொந்தத்தில் ஒரு கப்பலை வாங்கி நிரந்தரக கப்பல் சேவையை நடத்த முடிவு செய்துவிட்டது. நாளாந்தம் இரு வழிக்கப்பல் சேவை நடைபெறும். காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் நான்கு மணி நேரத்தில் பிரயாணம் செய்யக்கூடிய கப்பலையே கொள்வனவு செய்ய முடிவாகியுள்ளது. இது தொடர்பாக அமைச்சரவையின் அனுமதியைப் பெற்று விரைவில் சேவை ஆரம்பிக்கப்படும். செஞ்சிலுசைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் கப்பற் சேவை நடைபெறும். - என்றார்.

யாழ்ப்பாணத்தில் படையினரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படும் இளைஞர், யுவதிகள் ஏனையோர் காங்கேசன் துறையில் தடுத்து வைக்கப்பட்டு அனுராதபுரம் கொண்டு செல்லப்பட்டு,அங்கு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, தென்னிலங்கைத் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப் படுகின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலும் நீதிவான் நீதிமன்றம் உண்டு. கைது செய்யப்படுவோரை இங்கே ஆஜர் செய்து காங்கேசன் துறையிலேயே தடுத்து வைக்க ஏற்பாடு செய்ய முடியாதா என்று செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

இது விடயம் நீதிமன்றத்துடன் சம்பந்தப்பட்டது. ஆகையால் நீதிச்சேவை ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டுவருவோம். அந்த ஆணைக குழுவே முடிவை எடுக்கும் எனப் பதிலளிக்கப் பட்டது.

அதே போன்று மீனவர்கள் தொழில் செய்வதற்குரிய நேரம் கண்ட கண்டபடி மாற்றப்படுகிறது. அவர்களுக்கு ஒழுங்கு, சீரான நேர ஒதுக்கீடு அவசியம் என பத்திரிகையாளர் தரப்பில் வலியுறுத்தப் பட்டது.

இது பாதுகாப்பு அமைச்சுடன் சம்பந்தப்பட்ட விவகாரம். RAAN எதுவும் செய்யமுடியாது. அவர்களுடனேயே பேசித் தீர்க்கவேண்டும் என்று வந்தது பதில்.

தொழில்வாய்ப்பு புனர்வாழ்வுக்குள் அடங்காதா? வராதா? இப்படி எல்லாவற்றையும் தட்டிக் கழித்தால் RAAN பொறுப்பேற்று நடத்துவதுதான் எவற்றை?

உள்ளூர் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் நேரடியாகப் புனரமைப்புப் பணி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டதால் மக்களுக்குரிய சேவைகள் பல துறைகளாலும் வந்து சேர்வது தடுக்கப்படுகிறது. புனர்வாழ்வு, புனரமைப்புக்குப் பொறுப்பான அதிகாரசபை இதுவிடயத்தில் அவற்றுக்குச் சாதகமாக நடவடிக்கை எடுக்கமுடியாதா என்ற கேள்விக்கும் முன்னரைப் போலவே பதில் வந்தது.

பாதுகாப்பு அமைச்சே அத்தகைய தடையை விதித்துள்ளது; நாமல்ல. ஆகவே சம்பந்தப்பட்ட உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புகொண்டு முயற்சித்துப் பார்க்கலாம் எனக் கூறப்பட்டது.

யாழ்.வணிகர் கழகத்துக்கு 1,000 மெற்றிக் தொன் பொருள்களைக் கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கு கப்பலில் இடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட உள்ளதாகவும் பத்திரிகையாளர் மாநாட்டில் தகவல் வெளியிடப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாணம் நுகர்வோர் சங்கத் தூதுக்குழு ஒன்று வ.மா.பு.அதிகாரசபையின் தலைவர் ஒபடகேயை கடந்த புதன்கிழமை) சந்தித்து நுகர்வோருக்குள்ள கஷ்டங்களை அவரிடம் எடுத்துரைத்தது. சங்கத்தின் தலைவர் ரி.சிவநாதன், செயலாளர் சரோஜா சிவச்சந்திரன், பொருளாளர் சிவலிங்கம் உட்பட மற்றும் பலரும் தூதுக்குழுவில் அங்கம் வகித்தனர்.

இச்சந்திப்பும் யாழ்.செயலகத்திலேயே நடைபெற்றது. அரச அதிபர் உட்பட பல்வேறு திணைக்களத் தலைவர்களும் பிரசன்னமாகி இருந்தனர். படைஅதிகாரிகளும் கூட இருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது அதிர்ச்சிதரும் தகவல் ஒன்று வெளியாகி நுகர்வோர் சங்கத் தூதுக்குழுவினரை திணறடித்தது.

தலையில் விழுந்த பாறாங்கற்கள்!

வர்த்தகத் திணைக்களமோ அதன் பிரிவோ யாழ். செயலகத்தில் இயங்க வில்லை. அதனால் வர்த்தக உதவி ஆணையாளர் என்று எவரும் பதவியில் - பணியில் இல்லை. ஆகையால் பொருள்களின் செயற்கைத் தட்டுப்பாடு, விலை ஏற்றம் குறித்து பொதுமக்கள் - நுகர்வோர் - வர்த்தகர்களுக்கு எதிராக எந்த அதிகாரியிடமும் முறையிட முடியாது என்று பாறாங்கல் கொண்டு தூதுக்குழுவினர் தலையில் அடிக்கப் பட்டது.

அதுமட்டுமல்ல வர்த்தகர்கள பொருள்களின் விலைகளை உயர்த்துவது குறித்தோ, தமக்குத் தமக்கு ஏற்றவாறு அவர்களின் விருப்பத்திற்கு இசைய, விலைகளை வெவ்வேறாக நிர்ணயிப்பது குறித்தோ கட்டுப்பதுத்தவோ தடுக்கவோ முடியாது என்று பொறுப்பு வாய்ந்த மூத்தஅதிகாரி ஒருவர் தெரிவித்தபோது நுகர்வோர் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிகள் மீண்டும் தலையில் கைவைத்ததனர்.

குடாநாட்டில் இயங்கும் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் கொழும்பிலிருந்து தாம் கொண்டு வரும் பொருள்களில் மிகக் கூடியபங்கை தனியார்துறையினருக்கு விற்பது பரம இரகசியம். இது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்ட போது அதனைத் தடுப்பதற்கு எதுவும் செய்ய முடியாது என்ற பதிலும் வந்தது!

நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்தினர் பாவனைப் பொருள்களின் அதிகரித்த விலை, கடைக்குக்கடை ஒரே பொருள்களின் விலை வெவ்வேறாகாக் காணப்படுவது, குறைந்த தரமுள்ள பொருள்கள் விற்பனை செய்யப்படுவது ஆகிய விடயங்களையே முக்கியமாக தமது கலந்துரையாடலின்போது முன்வைத்தார்.

அரிசி ஒருகிலோ 38ரூபா முதல் 40 ரூபா வரை விற்கப்படுவது குறித்தும் தரமான அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுவது குறித்தும் கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டது. போதிய அரிசி கையிருப்பில் இருப்பதாகவும் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் தரமான அரிசி விநியோகிக்கப்படுவதாகவும் அரசஅதிபர் பதிலளித்தாராம்.

வெளி மாவட்டங்களுக்கு மக்கள் பயணம் செய்வதில் உள்ள சிரமங்கள் குறித்தும் வ.மா.பு. அதிகாரபைத் தலைவர் ஒபடகேயிடம் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டது. விண்ணப்பப் படிவம் எடுப்பது தொடக்கம் பிரயாணத்தை தொடங்கும் வரை பிரயாணிகள் படும் கஷ்டங்கள், அலைச்சல்கள் எடுத்துரைக்கப்பட்டன. கலந்துரையாடலின் போது பிரசன்னமாக இருந்த படைத்தரப்பு அதிகாரிகள் இந்த விடயங்களை மிகவும் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

பயணி ஒருவர் முதன்முறை பிரயாணம் செய்யும்போது பாதுகாப்பு அனுமதி வழங்கப்படுகிறது. குறுகிய கால இடைவெளியில் மீண்டும் அவர் பயணம் செய்யும்போது புதிதாக அனுமதியை பெற வேண்டுமென விதிக்கப்பட்டிருப்பது நியாயமற்றது எனவும் தூதுக்குழுவினர் சுட்டிக்காட்டினர். பாதுகாப்பு அனுமதியைப் பெற்ற ஒருவர் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் அதே அனுமதியுடன் மீண்டும் பணயம் செய்யக்கூடியதாக வசதி செய்து கொடுக்கப்படவேண்டும் என்று தூதுக்குழுவினர் வலியுறுத்தினர்.

இதுசம்பந்தமாக படை உயரதிகாரிகளுடன் கலந்தாலோசித்து ஒரு சாதகமான முடிவுக்கு வரமுயற்சிப்பதாக ஒபடகே உறுதியளித்தார்.

கலந்துரையாடலின் ஒரு கட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், அதன் செயற்பாடுகள், அதனால் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி ஒபடகே விரிவாக எடுத்துரைத்தார். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரதி ஒன்றை யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைப்பதாகவும். வர்த்தக திணைக்களப் பிரிவு இங்கு செயற்பட ஏற்பாடு செய்வதாகவும் சொன்னார்.

வர்த்தகர்கள் பொருள்களைக் கொண்டுவருகிறார்கள். பிடித்தமான காரணங்களைக்காட்டித் தாமே தனித்தனியே விலையை நிர்ணயிக்கிறார்கள். தட்டிக்கேட்க அரசாங்க அதிகாரிகள் இல்லை. உயர் அதிகாரிகளுக்கு அதில் நாட்டமும் இல்லை. 'அரசாங்கம் செய்ய வேண்டிய பணியை நாம் செய்கின்றோம். அரிசி,மா,சீனியைக் கொண்டுவருகிறோம். ஏனைய உப உணவுப்பொருள்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தருவிக்கின்றோம். மக்களுக்கு இவை ரொம்பவும் போதுமே' என்று கூறி அவர்கள் நிம்மதியாகி விடுகிறார்கள் போலும். ஆனால் பாவனையாளர்கள்தாம் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை பாவனைப் பொருள்களுக்குக் கொட்டி கொடுக்க வேண்டியுள்ளது. தட்டிக்கேட்க பொறுப்பான அதிகாரி எவரும் இல்லாத நிலை. இவ்வாறே தொடருமாயின் பொருள்கள் தாராளமாக வந்தென்ன வராமல்விட்டென்ன? சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் காரணம காட்டிக் காசு உழைப்பவர்களுக்கு நல்ல காலமாகிவிட்டது, இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் வீரன்?

பல அரசு வென்று பேரரசாக்கி
பல்திசையும் போர்முரசு கொட்டி
உலகை வென்று ஒருவனே தேவனாய்
உலகை ஆண்ட மாவீரன் வீரனா?
கலகம் ஒன்றில் பல்தலை கொய்து
கண்டவர் நடுங்கிட வீமனாய் சூரனாய்
உலகம் வியப்புற உடற்பலம் பெற்ற
உறுமிடும் மனித சிங்கமிங்கு வீரனா?

மதி சென்று மண் கொணர்ந்து
மண்ணில் நீர்காண ஆய்வு செய்து
மதிகொண்டு கண்டம் பாயுமேவு
கணை கண்டு விதி வென்று
நிதி கொண்டு 'செற்றலைற்' செலுத்தியங்கு
நித்தமும் உலகின் நிலை கண்டு
முதிர் அறிவால் விஞ்ஞானி யென
மூக்கில் கைவைத்து உலகுபார்க்க இவர்வீரரா?

பல் கலையில் பரிசு பெற்று
பல்லவர் போற்றிடும் அறிவு பெற்று
வல்லவன் அவன் என உலகுகூற
வலம்வரும் பேரறிஞன் வீரனா?
மல்லுக்கட்டும் மல் யுத்தத்தில்
மண்ணில் அவனே முதன்மை பெற்று
வெல்லும் திறத்தால் உலகை வென்று
வேங்கையாய் நின்றவன் உலகில் வீரனா?

அழகில் கண்ணனாய் அழகியர்க்கு மன்னனாய்
அம்பு விழியர் கனவின் நாயகனாய்
முழமது பூவால் முந்தானை வென்றங்கு
முழுமையாய் காமம் சுவைத்தவன் வீரனா?
கழலடி போற்றி கருணையால் இறையடி
கணத்தினில் அடைந்த அருளவன் வீரனா?
தழமது முதலாய் தனமது ஈட்டி
தரணியில் தனவானாய் தரித்தவன் வீரனா?

தங்கம் பல பெற்று 'ஒலிம்பிக்கில்'
தனக்கு தான்நிகர் தரத்தினன் வீரனா?
மங்கா மகாத்துமா வென்ற விடுதலையால்
மண்ணில் சாதனை படைத்திடினும் வீரரா?
எங்கும் எதிலும் எவர் எவர்
ஏற்றம் பெறினும் அவர் நிலை
மங்கும் மதியே வான மதில்
மண்ணில் இவர்தாம் இருப்பினும் வீரரா?

புலங்கள் ஐந்து பரியாம் ஓட்டி
புவியில் குரங்காம் பூதமாம் பூதலத்தில்
மலங்கள் இவைகள் மனிதன் மரபில்
மனத்தால் வென்று மண்ணில் மான
தலங்கள் சென்று விலங்கிவை போக்கி
தவத்தா லிவை அணுகா நிலையால்
பலங்கொள் மனத்தால் இவைகள் வென்ற
பாலன் எனினும் அவனே வீரன்!

-கந்தவனம் ஸ்ரீரங்கநாதன்.

கனலாய்க் கொதித்தெழும்பும் கவிதை

காட்டாறு பாய்கையிலும்
காற்றோடிக் கூவையிலும்
வேட்டுரும் வேளையிலும் வேதனையில் தோய்கையிலும்
கேட்குதென்னுள் கவிதையென்னும் கீதம் - என்னைக்
கிளரவைத்துச் சொல்லுதது மெய்ப்பொருளின் வேதம்.

சாமத்தில் விழிக்கையிலே
காமத்தில் குளிக்கையிலே
நாமங்கள் அணிகையிலே, நமனென்று பணிகையிலே,
தீயெனவே எழுகுதென்னுள் பாட்டு - அதென்
தேகத்தை உயிர்க்கவைத்து உசுப்புகிற ஊற்று

இரத்தத்தைக் கண்ணீரை
பீரங்கி ஈட்டிகளை
குற்றத்தை, அரசியலின் பித்தத்தை, யுத்தத்தை
முற்றத்தில் கண்டாலே போதும் - உடன்
மூழுகிற 'வேக்காளம்' கவிதையெனப் பாயும்.

தீமைகளைக் கண்டேகை
பிசைந்துடலம் வேர்த்தொழுக
ஈமத்தீயாய் இதயம் எரிந்தேதோ செய்ய, மனப்
பாரத்தைக் கவியிலேற்றிக் கொள்வேன் - அது
பலமான துவக்காகும; பரிகாரம் காண்பேன்.

அமுதத்தை உண்டவனாய்
அரனடியைக் கண்டவனாய்
எமனினையே கொன்றவனாய் இகம் பரத்தை வென்றவனாய்
தமிழருந்தப் பேரின்பம் காண்பேன் - அதன்
தயவிருக்க எப்போநான் தரித்திரனாய்த் தாழ்வேன்?

நிலமகளை நினைந்திடையில்
வளைக்கரத்தை இணைந்திடையில்
கலைமகளைக் கலந்திடையில் கவிதையுடன் கரைந்திடையில்
உலகியலை மறந்தெங்கோ போவேன் - அந்த
உணர்ச்சிகளைப் பொன்னெழுத்தில் பொறித்துவிட்டே சாவேன்.

மனம்தன்னைக் கணம் வடித்து
நிதம் 'சுத்தப்படுத்தி' வென்று
நினைவிலிறை தனைநினைத்து இறப்பினையும் துணிந்தெதிர்த்து
நனவுலகில் கனவு காணும் வீச்சு - தந்தென்
நாடிநரம்பான கவிதைக்கே எந்தன் மூச்சு!

பாடுபட்டு வளர்த்த முடி....!

பாடுபட்டுப் பலநாளாய் பாதுகாத் தேனென்மயிரை
பீடுபெற்று வளர்ந்ததடா பெருமுடியாய் அம்மயிரும்!
நாடெல்லாம் போற்றுகின்ற (?!) நடிகரய்யா ரஜனிபோல
கூடுஒன்று கட்ட நானும் குறித்திருந்தேன் நாளிங்கே!

''சூடுபிடிக்கப் போகுதடா, சோம்பேறியே! செக்குமாடே!!
கேடுபிடித்த தலைமயிரைக் கொண்டுசென்று வெட்டிவாடா,
காடுபோல வளர்ந்துந்தன் காதுகூட மறையுதடா,
நாடிருக்கும் நிலைக்குனக்கு நடிகரவர் நினைப்போடா?''

என்றுரைத்த தந்தையிடம் ''எண்ணையவைக்க எச்சூடும்
நன்று தணியும்'' என்றுரைத்து நகர்ந்திட்டேன் அப்பா(லே/டா)
''கொன்றுபோட்டு விடுவேன்ரா, கொடுவாளை எடுத்துந்தன்
பன்றியொத்த தலையினையே பறிப்பேன்'' என்றார் அண்ணாவும்!

''பாலனிடம் சென்றுதன் பாழாய்ப்போன முடியினையே
வேளைக்கே வெட்டிவிடு, வீண்வம்பு ஏன்தம்பி?''
ஆலம்போல் இருந்ததடா அன்னையவள் இவ்வார்த்தை;
தாளம் போட்டுத் தூண்டிவிட தாத்தாவும் தலையெடுத்தார்!.

வந்ததாடா வெறுப்பெந்தன் வாஞ்சைமிகு முடியாலே
சிந்தையற்ற இவர்பேச்சைச் செவிமடுக்க முடியலியே!
பாய்ந்தேறிச் சைக்கிளிலே... பாலனண்ணர் கதிரையிலே
சோர்ந்திருந்தேன்! ''சொல்தம்பி, சொன்னபடி வெட்ட'' வென்றார்.

''திருப்பதிக்குப் போறவரின் திருமொட்டை போலவொரு
பருப்பு மயிரு மில்லாமல் படைத்துவிடு முழுமொட்டை!
நெருப்பெறிக்கும் வெயிலிங்கே நீயடிக்கும் மொட்டையினால்
தெறிப்பு விதிக் கமைந்திடத்தான் தெறித்திடவே வெட்டெ''ன்றேன்!

பின்னென்ன பாலனண்ணர் பிடித்தாரே ஒருபிடிதான்!
விண்ணென்ற மனதுடனே வீடுவந்து சேர்ந்தேனே,
''கண்ணா! உன் களிமண்டைக் கெடுபுத்தி கரைந்தத(ா)டா,
என்னென்று உன்புத்தி இப்படித்தான் திருந்தியதோ?''

என்றுரைத்த என்வீட்டார் என்வெட்டைப் பார்த்துத்தினம்
''நன்று தம்பி வெயிலிற்கு நல்ல வெட்டு இது''வென்றார்!
பாடமொன்று புகட்டிடவே பாவி நானும் அடித்த மொட்டை
பாராட்டைப் பெற்றதடா! பாரெல்லாம் இருண்டதடா!!

- அனலையூர்ச் சேந்தன் -

"எங்கும் தரகு"

அங்கிங்கென் னாதபடி எங்கும் விரவியே
அனர்த்தம் விளைக்கும் தரகா - நீ
அனைத்துத் துறையிலும் சனத்தைச் சுருட்டியே
ஆட்டிவைத் தழிவு செய்வாய்.

முதலின்றி, உடலுக்கு உலைவின்றி நாவையே
மூலதன மாகக் கொள்வாய் - சொல்
வலைவீச்சில் மதிமிக்க மாந்தரும் வகையாக
மாட்டிடும் வழிய மைப்பாய்.

கல்யாணப் பேச்சு முதல் கச்சேரி வேலைவரை
கால்பதித் தாட்சி செய்வாய் - மிக
வல்லோரும் உன்வார்த்தை சாலம் மயக்கிட
வாய்புதைத் தமைதி கொள்வார்.

காக்கையைக் குயிலாக்க; கழுதையை பரியாக்க;
'கேற்'றடி, 'வாச்சரை' 'கிளாக்' ஆக்க; 'யூக்கே'யில்
'எஞ்சின்' துடைப்போரை 'எஞ்சினியர்' ஆக்கிட
எங்கு நீ கற்று வந்தாய்?

"இருலட்சம் தந்தோர்க்கு 'கிளறிக்கல்' உத்தியோகம்
இருநாளில் தருவன்" என்றாய் - கச்சேரி
வளவுக்குள் கிளறிக் கல் எடுக்கின்ற வேலைதான்
வந்ததுன் கைங்கரி யமே!

விவசாயி அறுவடைப் பொருளிலே பலகிலோ
விழுங்கியே ஏப்பம் விடுவாய் - விலை
மலிவென்று கூறியே வாரிச் சுருட்டுவாய்
மறுகணம் 'டபிள்' ஆக்குவாய்.

தருகின்ற பொதியினுள் தரமான சரக்குண்டு
தவறாது வாங்கி விடுவீர் - எனும்
அரசியல் தரகரும் உன்னிடம் பலவாண்டு
அனுபவம் அடைந்தவர்களோ?

புத்தூர் வே. இளையகுட்டி

பார்புகழும் நிலையுயர்வார் ஓது

(குறும்பாக்கள்)

சமரீதானம் வந்திடும் என்று
சகலரும் நம்பினர்காண் அன்று
சதாவானில் குண்டு மாரி
சரளமாக எறிகணைகள்
சதாதானம் மக்களுயிர் இன்று.

மறைவிடத்தைத் தேடிநாடி ஓட்டம்
அலையலையாய் மக்களின் கூட்டம்
உறைவிடத்தை விட்டகன்று
ஊழ்வினையை நொந்து சென்று
உறையுள்ளுடன் பறிகொடுத்தான் தேட்டம்

மாலையிட்டு மங்கைமாதம் ஒன்று
மணவாளன் குண்டுக்கிரை இன்று
காலைவந்த வானரதம்
கணக்கின்றி விதைத்தமரண
ஓலையினால் தனிமையுற்றாள் இன்று

அன்னையவள் பெற்றாள்பல பிள்ளை
அத்தனையும் குண்டுவீச்சில் கொள்ளை
என்னேயவள் அவலமிங்கு
எவருக்கும் உறுத்தாதாக்கச்
சொன்னவர்தம் உள்ளமதோ வெள்ளை

அகதிகளாகி ஆண்டுபல தொட்டு
அவலநிலை மாறவில்லை விட்டு
இன்று தீரும் நாளை தீரும்
இயல்புநிலை திரும்புமென்று
சகதிவாழ்வில் உழலுகிறார் கெட்டு

தொடக்கி நின்றாருரிமைப் போராட்டம்
தொடர்ந்தது தலைமையில் நாட்டம்
குழுக்குழுவாய் பிரிந்துநின்று
குற்றம்மற் றோரில்கண்டு
மடக்கி விடமுடிவதன் வேராட்டம்

கொள்கையில் பற்றேதும் இல்லை
ஓர்மத்தால் விளைகிறது தொல்லை
மாறிமாறித் தாக்கியதால்
மாளுகிறார் செந்தமிழர்
ஆள்கையில் இல்லையொரு எல்லை

போர்மிகுந்தால் சமரசம் ஏது?
போர்முரசால் மிரளுகிறார் சாது
தீர்வுதரும் செயற்திட்டம்
திடமுடன் இணக்கமுறின்
பார்புகழும் நிலையுயர்வார் ஓது!

-சிங்கை ஆரியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு

அந்த வளவை அடைந்தபோதே இவன் மிகவும் களைத்திருந்தான். மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது. வளவு, வெளிச்சம் எதுவும் ஊடுருவ முடியாத அளவிற்கு மரங்கள் அடர்ந்திருந்தது. மா, பலா, வேம்பு, தென்னை இப்படி. வளவு முழுவதும் சருகுகள் நிறைந்திருந்தன. வளவின் தொங்கலில் விசாலமான வீடு கதவுகள், யன்னல்களெல்லாம் கழற்றப்பட்ட நிலையில் இருந்தது. வீட்டின் முகட்டில் ஓடுகள் இருந்தமை அதிசயமாக இருந்தது.

இவன் மெதுவாக வீட்டை நோக்கி நடந்தான். 'சர்சர்' என்று சருகுகள் மிதிபட்டு அதிர்ந்தன. அடர்ந்து வளர்ந்திருந்த பலாமரம் ஒன்றை நோக்கினான். அதில் ஏறி ஒளிந்திருக்கலாமோ என்று தோன்றியது. என்ன நினைத்தானோ சடுதியாகவே அந்த யோசனையை மாற்றிக் கொண்டான். வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தான். சருகுகள் அதிரும் சத்தத்தில் அணில்களின் கீச்சிடலும், பறவைகளின் ஒலிகளும் அமுங்கிப் போயின.

சருகுகளுள் மறைந்திருந்த



கல்லொன்று காலில் தடுக்கியது. இவன் தடாலென கீழே விழுந்தான். அடுத்த கணமே சுதாகரித்து எழுந்து கொண்டான். வலதுகால் பெருவிரலின் நகக்கணுவில் இருந்து இரத்தம் கசிந்தது. உயிரைத் தொடும் வலி. தொடர்ந்து ஓடினான்.

வீட்டின் உட்பகுதி சருகுகளும் தூசியும் நிறைந்திருந்தது. சருகுகள் காற்றுக்கு அள்ளுண்டு வந்திருக்க வேண்டும். ஆங்காங்கே பறவைகளின் எச்சங்கள். விசாலமான வீடுதான். வீட்டுக் கூடத்தின், மூலைச் சுவரோடு அணைந்திருந்த கம்பொன்றில் சிட்டுக் குருவிக் கூடொன்று. கூட்டில் இருந்து சத்தங்கள் எதுவும் வெளிவரவில்லை. என்றாலும் அதனுள் குஞ்சுகள் இருக்க வேண்டும் என்று தோன்றியது.

வீட்டினுள் ஆறு, ஏழு அறைகள் இருக்கலாம். ஓர் அறையை எட்டிப் பார்த்தான். குசினி, புகடு, அடுப்புகள் எல்லாம் தூர்ந்து போயிருந்தன. எப்போதோ ஆள்கள் இருந்ததன் அடையாளமாக, இரண்டு, மூன்று நுனி கருகிய விறகுகள் அடுப்பொன்றில் செருகப்பட்டிருந்தன.

இவன் குசினித் தட்டுக்களினூடாக ஏறி சுவர் விளிம்பை அடைந்தான். தூசி இழைகளெல்லாம் இவன் உடலைப் போர்த்திக் கொண்டன. சுவரினூடாக நடந்து சென்று ஒவ்வொரு அறையாக நோட்டமிட்டான்.

குசினியில் இருந்து மூன்றாவது அறையில் கட்டப்பட்டிருந்த "பிளாற்" தட்டு இவன் ஒளிந்து கொள்வதற்கு பொருத்தமானது என்று தோன்றியது. நேரடியாக அந்த அறையை அடைபவர்கள் இவன் பிளாற்றில் ஒளிந்திருப்பதைக்கண்டுபிடிக்க முடியாது. கண்டுபிடிக்க வேண்டுமெனின் சுவர் விளிம்பினூடாக இந்தப் பிளாற்றை அடைய வேண்டும். பிளாற்றின் மேல் இருந்த சில பித்தளைப் பாத்திரங்கள் கள்ளர்களிடமிருந்து தப்பிக் கொண்டதற்கும் இதுதான் காரணமாக இருக்கும் என்று தோன்றியது.

சுவரில் இருந்து மெதுவாகப் பிளாற்றில் இறங்கினான். தான் படுத்துக் கொள்வதற்கு ஏதுவாக, பிளாற்றில் இருந்த பித்தளைப் பாத்திரங்களை பிளாற்றின் மூலையில் சுவரோரமாக ஒதுக்கி வைத்தான். அஞ்சாறு கரப்பான் பூச்சிகள் சிதறி ஓடி, கண நேரத்தில் எங்கோ மறைந்து போயின. உட்கார்ந்து கொண்டான். சுவாசிக்கும் போது தூசிகள் மூக்கை அடைப்பதை இப்போதுதான் உணர முடிந்தது. ஏதோ நினைவு வந்தவனாய், கழுத்தில் கட்டியிருந்த நூலின் முனைகளை மார்புகளுக் கிடையே தொட்டும் பார்த்தான். 'அது' பக்குவமாய் இருந்தது. ஒரு பெரு மூச்சு தோன்றி மறைந்தது.

கணேஸ், வரதன், விஜி, பிறீமஸ் ஆகியோரின் நிலைமை இப்போது என்னவாக இருக்கும்? பிடிபட்டிருப்பார்களோ? அல்லது? இவன்தான் சொல்லியிருந்தான்:- "எல்லாரும் ஒரே இடத்திலை இருந்தால் ஒரேயடியா பிடிபட்டிடுவம். ஒவ்வொருத்தரும் வேற்றை வேற்றை இடங்களுக்குப் போவம்"

அஞ்சுபேரும் ஒவ்வொரு திசைகளில் ஓடினார்கள். இவன் இங்கே வந்து ஒளிந்திருக்கிறான்.

இவனுக்கு நித்திரை கொள்ள வேணும் போல இருந்தது. மெதுவாக பிளாற்றில் குப்புறப் படுத்துக்கொண்டு வசதியாக கால்களை நீட்டிக் கொண்டான். பித்தளைச் செம்பொன்று வலது கால் பெருவிரலில் தடுக்கியது. உயிரைத் தொடும் வலி. செம்பை மெதுவாக காலினால் அரக்கி சுவரோரமாக விட்டான். வலிக்கிடையேயும், எப்படியோ சிறிது நேரத்திலேயே கண்ணயர்ந்து விட்டான்.

ஏதோ ஒரு அதிர்வில் இவன் கண் விழித்தபோது, சுவர்விளிம்பில் இருந்த அணில்குஞ்சொன்று,இவனை நோக்கி வாலை இறுக்கியவாறு கத்திக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் சுவர் விளிம்பினூடாக ஓடி எங்கோ மறைந்து போனது. தூரத்தில் சருகுகள் அதிர்வது போல் இருந்தது. காதுகளைத் தீட்டிக் கொண்டான். உண்மைதான். அவர்கள் வந்து விட்டார்கள். இவன் வந்தவழியை அறிந்தோ அல்லது எதேச்சையாகவோ வந்திருக்கலாம். இவன் என்ன நினைத்தானோ பிளாற்றோடு பிளாற்றாகப் படுத்துக் கொண்டான். பல்லியொன்று சப்தித்தது. இவனுக்கு ஏன்னவோ போல இருந்தது.

அவர்களின் இலக்கு இந்த வீடாகத்தான் இருக்க வேண்டும். இப்போது ஒவ்வொரு மரங்களையும் ஆராய்ந்து கொண்டிருக்கலாம். பலா மரத்தில் ஒளிந்திருந்தால் இப்போது பிடிபட்டிருக்கக் கூடும் என்று தோன்றியது. அவர்கள் வீட்டிற்குள் வந்தாலும் ஒவ்வொரு அறையாக எட்டிப் பார்த்து திரும்பிச் சென்று விடுவார்கள் என்றும் இவனை கண்டுவிடமாட்டார்கள் என்றும் திடமான நம்பிக்கை இருந்தது. என்றாலும், ஏனோ வலதுகை மார்புகளுக்கிடையே 'அதை' தொட்டுப் பார்த்துக் கொண்டது.

அவர்கள் வீட்டிற்குள் பிரவேசித்திருக்க வேண்டும். தங்களுக்குள் ஏதோ மெதுவாகக் கதைத்துக் கொள்வது இவனுக்கு கேட்டது. சத்தம் எதையும் ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக அவர்கள் மெதுவாக நடப்பதை இவனால் துல்லியமாக உணர முடிந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு அறையாக சோதனையிடும் முயற்சியாக இருக்க வேண்டும். இவன் அறையை நோக்கியும் ஒருவன் வரும் சத்தம். என்னதான் இருந்தாலும், இப்போது இதயம் வேகமாக அடிப்பதை இவனால் தவிர்க்க முடியவில்லை. கைகளையும், கால்களையும் பிளாற்தரையுடன் அழுத்திக் கொண்டான். வந்தவன் அறைவாசலில் இருந்தே நோட்டம் விட்டு திரும்பிச் சென்று விட்டான்.

அவர்கள் எல்லோரும் 'வீட்டில் ஒருவரும் இல்லை' என்ற தீர்மானத்திற்கு வந்திருக்க வேண்டும். அவர்களின் வேகமான செயற்பாடுகளில் இருந்து இதை உணர முடிந்தது. வீடே அதிரும்படி நடந்தார்கள். புரியாத மொழியில் ஏதேதோ பேசிக் கொண்டார்கள். பாஷை புரியாவிட்டாலும் அடிக்கடி 'கொட்டியா' என்ற வார்த்தையை பிரயோகிப்பதை மட்டும் இவனால் உணரமுடிந்தது. இவனுக்குச் சிரிப்பு வந்தது. மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

அவர்கள் வீட்டில் இருந்து வெளி யேறிக் கொண்டிருக்க வேண்டும். சுவரின் விளிம்பினூடாக அவர்கள் வெளியேறுவதைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. மெதுவாக கால்களைத் தளர்த்திஎழும்ப எத்தனித்த போது, கால்களின் அருகே இருந்த செம்பு தடக்குண்டு, மெதுவாக உருண்டு பிளாற் விளிம்பை அடைந்து பெருஞ் சத்தத்துடன் கீழே தரையில் விழுந்தது. இவன் மீண்டும் பிளாற்றோடு பிளாற்றாக ஒட்டிக் கொண்டான். வலது கையால் மெதுவாக 'அதை' எடுத்து வாயில் வைத்துக் கொண்டான்.

செம்பு உருளும் சத்தம் தவிர, எந்தவொரு சலனமும் இல்லை. சத்தம் ஓய்ந்தபோது அவர்கள் இவனுடைய அறையை நோக்கி 'திடும்திடும்' என ஓடி வரும் சத்தம். அவர்கள் இவனுடைய அறையை அடைந்து விட்டார்கள். 'கொட்டியா கொட்டியா' என்று அவர்களுடைய வாயில இருந்து வந்த வார்த்தைகள் இவனுடைய காதை அறைந்தன.

நீண்ட நேரம் எந்தவொரு பிரதிபலிப்பையும் கண்டு கொள்ள முடியாததால், அவர்கள் ஓய்ந்து போனார்கள். தங்களுக்குள் ஏதோ ரகசியம் கதைத்தார்கள். அதன் பிறகு வீடே சலனமற்றிருந்தது.

அபிநவன்

இவன் முதுகை ஏதோ ஒன்று அழுத்தியது. மெதுவாக திரும்பி அதைப் பலமாகப் பிடித்துக் கொண்டான்.'ஏ.கே. 47' போன்ற அமைப்பில் மரப்பலகையில் செய்யப்பட்டிருந்த துவக்கு. சிவாவின் கையில் இருந்தது. இவன் வாயில் நூல் சுற்றப்பட்டு வரும் வெள்ளைநிற பிளாஸ்றிக் குழாய், முனைகளில் துளையிடப்பட்டு கறுப்பு நூலால் கோர்க்கப்பட்டு கழுத்தில் கட்டப்பட்டு இருந்தது. அதை வாயில் இருந்து எடுத்துக் கொண்டான்.

"எல்லாரையும் பிடிச்சிட்டீங்களோ?" என்றான் இவன்.

"அவங்களை உடனேயே பிடிச்சிட்டம்" என்றான் சிவா. சிவாவின் முகம் களைத்துப் போயிருந்தது. இவனைத் தேடி அலைந்திருக்க வேண்டும்.

இவன் மெதுவாக எழுந்து, பிளாற்றில் இருந்து கீழே அறையைப் பார்த்தான். சஞ்சி, விஜய், மகேந்தி, சங்கர் [illegible] அவர்களின் முகங்களும் மிகவும் களைத்துப் போயிருந்தன.

"எப்படியோ உன்னை பிடிச்சிட்டம்தானே" என்று நாடியை கையால் வழித்து பழிப்பு காட்டினான் விஜய்.

"எண்டாலும் இவ்வளவு நேரம் உங்களை ஏக்காட்டிற்றன்தானே?" என்று இவன் பதிலுக்கு பழித்துக் காட்டினான்.

"கணேஸ் ஆக்கள் எங்கை" இவன்தான் கேட்டான்.

"அவங்கள் வெளியாலை மாங்காய் பிடுங்கிக் கொண்டிருக்கிறாங்கள். நீ கெதியா இறங்கு... இனி நாங்கள் இயக்கம். நீங்கள் ஆமி" என்றான் சஞ்சி.

இவன் முகம் இறுகிப் போயிற்று.

"அப்படியெண்டால் நான் விளையாட்டுக்கு வரேல்லை" என்று மட்டும் உறுதியாகக் கூறினான். பிளாற்றில் இருந்து அறையினுள் குதித்தான். வலது கால் பெருவிரலில் ஏற்பட்ட வலியையும் பொருட்படுத்தாது அறையில் இருந்து வேகமாக வெளியேறிச் சென்றான்....

*

செல்வம் உடைக்கும் படை மூன்று

செல்வம் என்றதும் பொருள் செல்வம், கல்விச்செல்வம் என்பன கண்முன் நிற்கும். திருவள்ளுவர் பொருள், கல்வி முதலியவற்றுடன், அருள், கேள்வி, பிணியின்மை முதலியவற்றையும் செல்வம் என்றே வழங்குகின்றார்.

மக்கள் வாழ்விற்கு அடிப்படைத் தேவைகளாகிய உணவு,உடை,உறையுள் முதலியவற்றிற்கும் பிற தேவைகளை முட்டின்றிப் பெறுவதற்கும், சுற்றத்தாரையும் இரவலரையும் பேணவுமெல்லாம் செல்வம் பெரிதும் வேண்டப்படுகின்றது.

ஒரு நாட்டைப் பொறுத்தவரை – தாழ்வில்லாச் செல்வர், தகுதிவாய்ந்த பெரியோர் மற்றும் நல்ல விளைநிலம் முதலியன சிறந்த உறுப்புக்களாகப் பேணப்படுகின்றன. அருளிலார்க்கு மேலுலகு இல்லது போல் பொருளிலார்க்கு இவ்வுலக வாழ்வு சூனியமாய் விடும். எனவே பொருள் செல்வம் சிதைந்து போகாது பேணக் கடமைப்பட்டுள்ளோம்.

தேன்கூடு

படை என்றதும் தரைப்படை, கடற்படை, வான்படை முதலியன நினைவிற்கு வரும். போர்த்தொழிலுக்கு அணுக்குண்டு முதலாகப் பலப்பல கருவிகள் பயன்படுகின்றன. பழைய தமிழ் நூலாகிய புறநானூற்றில் 'புலவர் பாடும் புகழ் உடையோர், விசும்பின் வலவனேவா வானவூர்தி எய்துப என்ப...' (27) என்று சாரதியால் இயக்கப்படாத – தானே இயங்கும் – வானவூர்தியைப் பற்றிக் கேள்விப்படுகின்றோம். இன்று 'வலவன் ஏவாக் கிபிர் விமானம்' போர்ப்படையால் பயன்படுகிறது.

அரிது முயன்று ஈட்டிய செல்வத்தை உடைப்பதற்கு – சிதைப்பதற்கு – வேறும் பல படைகள் இருக்கின்றன. ஒன்று தன்னை வியந்து தருக்குதல், இன்னொன்று கொன்னே வெகுளி பெருக்குதல், மற்றொன்று பல்பொருள் வெஃகும் சிறுமை. இப்படைக்கலங்கள் உள்ளம் என்னும் தரைப்பரப்பில் இருந்து ஏவப்படுகின்றன.

யாராயினும் ஒருவர் செல்வவளம் பெற்றிருக்கின்றார். அச்செல்வம் அவரை வாளா இருக்க விடமாட்டாது. அவரது உள்ளம் பிறர் தம்மைப் பெரிதும் பாராட்ட வேண்டும் என்று எண்ணும். நற்பெரியவன், செல்வந்தன என்ற தருக்கு – பெருக்கு – ஆங்காரம் மேலோங்கும்; படாத பாடெல்லாம் படுத்தும்.

சிந்திப்போம் செயற்படுவோம்

ஒரு கதை சொல்லுவார்கள். ஒருபோது எலியொன்று தரைமீது நின்று துள்ளியதாம். அயலில் நின்றவர்களுக்குச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. தரையைத் தோண்டிப் பார்த்தார்கள். அடியில் புதையல் இருந்ததாம். எலியைப் பணம் துள்ள வைத்தது. செல்வம் தன்னை உடையவரை வியந்து தருக்கச்செய்தல் கூற வேண்டுமோ? தருக்குற்றவர் செல்வம் உடைந்தே போய் விடும்.

சிலர் தாழ்வின்றி வீணே வெகுளியை – கோபத்தை – பெருக்கியபடியே இருப்பர். வெகுளியைச் சினம் என்றும் கூறுவோம். காமம், வெகுளி, மயக்கம் இவை அற்ற போதுதான் பிறவிப்பிணியும் அறும் என்பார்கள். சினம் தான் அடைந்தாரைச் சுட்டுப் பொசுக்கிவிடும். சினத்தின் வயப்பட்டோர் செல்வத்தை அவமே செலவுசெய்து அழிந்துபடுவர்.

இனி மன்னிய பல்பொருள் வெஃகும் சிறுமையை எடுத்துக் கொள்வோம். சிலர் சிந்தையைக் கண்டகண்ட பொருள்களில் எல்லாம் ஓடவிடுவர்; இச்சிப்பார்கள்; விரும்புவார்கள். திருவள்ளுவர் பெருமான் இதன் கொடுமை நோக்கி வெஃகாமை என ஓர் அதிகாரமே வகுத்துள்ளார். வெஃகுதல் – விரும்புதல் என்னும் பொருளது. பிறர்பொருளைக் கவரக்கருதுதல். நடுநிலை நீங்கிப் பிறர் பொருளைக் கொண்டால் குடியே அழிந்து போகும் என்பார்கள். மேலும் குற்றங்கள் சேரும் என்பார்கள். நல்லோர், பிறர் பொருளைக் கொள்ளக் கருதார்; பிறர் பொருளைக் கொள்ளக் கருதுதல் அறிவுடைமையாகாது. பல்பொருளையும் இச்சிக்கும் சிறுமையை அகற்றவேண்டும்.

திரிகடுகம் என்ன சொல்கிறது?

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும் - முன்னிய
பல்பொருள் வெ.ஃகும் சிறுமையும் இம் மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. (திரி - 38)

என்று கூறுகின்றது.

தற்புகழ்ந்து செருக்குவதும், வீணாகச் சினங் கொள்வதும், பிறர்பொருளை விரும்புவதும் ஆகிய இவை செல்வத்தைத் தேய்க்கும் படைகளாதலினால் அவற்றில் நின்றும் நீங்கி வாழுவோம்.

(தொடரும்)

-சிகண்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை

காலைப்பிரார்த்தனை தொடங்குவதற்கு இன்னமும் அரைமணி நேரம் இருந்தது. நித்தியகல்யாணிப் பூக்கள் சிந்திக்கிடப்பதைப் போல அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பளிச்சிட்ட மாணவர்களைப் பார்த்தபடி தனது அறையின் முன் நின்றிருந்த அதிபர் சிவநாதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பக்கத்திலே நடுங்கியபடி நின்ற உப அதிபர் கந்தசாமியைத் திரும்பி முறைப்பதும், பின்னர் மீண்டும் நுழைவாயிலைப் பார்ப்பதுமாக அந்தரப்பட்டுகொண்டிருந்தார். சற்று முன்னர் ஏழாம் ஆண்டு மாணவன் தவராசா கூறிவிட்டுப்போன வார்த்தைகள் அவரது காதுகளிலே திரும்பத் திரும்ப மோதியபடியிருந்தமையே இந்தப் பதற்றத்துக்குக் காரணம்.

அந்தப் பாடசாலை க.பொ.த. சாதாரண தரம்வரை வகுப்புக்களைக் கொண்டது. அந்த ஊரில் உள்ள ஒரே ஒரு பெரிய கல்விக்கூடம் அது ஒன்றுதான். அதிபர் பதவிக்கான நிர்வாக சேவைத்தரம் இல்லாத போதிலும், சிவநாதன் கடந்த இரண்டாண்டுகளாகப் பதவிவகித்து வருகின்றார். பத்திரங்களில் எழுதிக் கொடுக்கப்படும் தகுதிச்சான்றிதழ் நிர்வாகத்திறமை இருப்பவர்களுக்குத் தேவையில்லை என அடிக்கடி கூறிக் கொள்வதன் மூலம் தனது தகுதியின்மையை மறைத்துக் கொள்ளும் வாய்வல்லமை அவருக்கு இருந்தது. கடந்த வருடம் வரை உப அதிபராகப் பணிபுரிந்த கணபதிப் பிள்ளை ஆசிரியர் இவரது தகுதியின்மையை இடையிடையே சுட்டிக் காட்டியதைப் பொறுக்க முடியாமல் பலவழிகளிலும் அவருக்குத் தொல்லை கொடுத்து ஓய்வுபெற வைத்ததெல்லாம் ஆறிப்போன பழங்கதை. அதன் பின்னர் தனக்கேற்றவரான கந்தசாமி மாஸ்ரரை உப அதிபராக நியமித்துத் திருப்திப்பட்டுக் கொண்டார் அதிபர்.

எந்தவொரு பாடசாலையைப் பொறுத்தவரையும நல்ல விடயங்களில் அதிபருக்குக் கிடைக்கும் ஒத்துழைப்பு அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்பதே உண்மை. எனினும் அதிபர் தனது சுய இலாபங்களுக்கான ஒத்துழைப்பினை ஏனைய ஆசிரியர்களிடம் எதிர்பார்ப்பாராயின், அது பாடசாலையை மிகவும் பின்தங்கிய நிலைக்கே இட்டுச் செல்லும். சில பாடசாலைகள் பெயரளவில் மட்டும் பெருமைகளை தாங்கி நிற்பதற்கு இதுவே முக்கிய காரணமாகும்.

கந்தசாமி மாஸ்ரர் மன்னனுக்கேற்ற மந்திரி போலச் சகல வழிகளிலும் அதிபருக்குக் கைகொடுத்து வந்ததால் ஏற்பட்ட தைரியம், ஏனைய ஆசிரியர்களை ஒரு பொருட்டாக மதிக்காத தன்மையை அவருக்கு வழங்கியிருந்தது. மாணவர்களிடமும் மிகுந்த கண்டிப்புடன நடந்துகொள்வார். அதுவே இன்றைய பிரச்சினைக்குக் காரணமாக அமைந்துவிட்டது.

நேற்றுக்காலை தவராசா ஏதோ குழப்படி செய்துவிட்டான் என்பதற்காக கையிலே கிடந்த சட்டத்தினால் விளாசித்தள்ளிவிட்டார் கந்தசாமி மாஸ்ரர். அதன் பலன் தவராசாவின் தந்தை இராசன் அதிபரைச் சந்திக்க வருவதாக மகனிடம் கூறியனுப்பியிருக்கிறான்.

"சேர், எதுக்கும் உள்ளுக்கபோவம். இதிலை ஏதாவது நடந்தா மரியாதையில்லை." பயந்த குரலில் அதிபரை உள்ளே அழைத்தார் கந்தசாமி மாஸ்ரர். அவருடைய அழைப்பினை ஏற்க மறுக்கும் எண்ணம் அதிபருக்கில்லை. அறையினுள் நுழைந்து தனது இருக்கையில் அமர்ந்தார். கந்தசாமி மாஸ்ரர் எதிராக உட்கார்ந்து கொண்டார்.

"நீர் சொன்னமாதிரி வாறவன் அவ்வளவு பொல்லாதவனோ?" மனக்கலக்கத்தினை வெளிக்காட்டாமல் அதிபர் கேட்டார்.

"ஓம் சேர். எனக்கு ராசனை நல்லாத்தெரியும். ஆள் வெட்டுக்கொத்திலை பேர்போனவன். நாலைஞ்சு களவுகளிலையும் பிடிபட்டு பங்கருக்க



இருந்தவன். எந்த நேரமும் உச்சத்திலைதான் நிப்பான்."

கந்தசாமி மாஸ்ரரின் குரலில் நடுக்கம் தொற்றியது.

"அவசரப்பட்டிட்டீர்....! எண்டாலும் நீர் உந்தமாதிரி மோட்டுத்தனமா அடிச்சிருக்கக்கூடாது காணும்."

"சேர் நீங்களொண்டு! வீணா என்ர வயித்தெரிச்சலைக கிளப்பிறியள். அவன் பாவி என்ன சொன்னான் தெரியுமே?"

கந்தசாமி மாஸ்ர்தனது தலையை ஒருமுறை தடவிக்கொண்டார். பிறகு ஓரிரு கணநேரத் தயக்கத்துக்குப்பின் கூறினார்.

"என்னை மொட்டை எண்டு சொல்லுறான்..."

இதைக்கேட்டதும் அதிபர் சிவநாதனால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. சத்தம்போட்டுச் சிரித்தார்.

"சேர் சிரிக்காதைங்கோ. எனக்கு வாற ஆத்திரத்திற்கு....! நான் இருக்கிற கொஞ்ச மயிரை வைச்சு எப்பிடியெல்லாம் சமாளிச்சு இழுக்கிறன்!"

மனம்தான் எவ்வளவு விசித்திரமானது! ஒன்று இல்லாதபோது அதற்காக ஏங்குவதும், இருக்கும்போது சற்றேனும் சிந்திக்காததும், இழக்கும் போது மட்டும் கவலைப்படுவதும் அதனுடைய வியப்பான பண்புகள். ஆசிரியன் - மாணவன் என்ற பிணைப்புமுறை பின்தள்ளப்பட்டு கந்தசாமி மாஸ்ரரிடம் ஆழமாகப் புதைந்துகிடந்த தாழ்வு மனப்பான்மை வெளிப்பட்டு நின்றமை இதையே உணர்த்துகின்றது.

திடீரென்று வாசலிலே பலத்த ஆரவாரம் கேட்டது. தொடர்ந்து ஒலித்த உரத்த குரலைக் கேட்டதும் கந்தசாமி மாஸ்ரர் ஆடிப்போனார்.

".....ஆரவன் கந்தசாமி எண்டவன்?"

வார்த்தைகளைத் தொடர்ந்து கசிப்பின் வாசம அறைக்குள்ளே குப்பென்று பொங்கிப் பரவியது. நுழைந்தவன் கையிலே வைத்திருந்த கத்தியை இருமுறை அசைத்துக் காட்டினான். கந்தசாமி மாஸ்ரருக்குக் 'குலைப்பன்' அடிக்கத்தொடங்கியது. அதிபரின பின்னே பாய்ந்து பதுங்கினார். வந்தவன் இதை அவதானித்துவிட்டு இரண்டெட்டில் அவரை நெருங்கினான். அதிபர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு எட்டித் தடுத்தார்.

"கொஞ்சம் பொறுங்கோ ஐயா. இப்ப ஏன் கோபிக்கிறியள்? உந்தக் கதிரையிலை நிதானமா இருங்கோ"

அதிபரின் மரியாதை நிறைந்த இந்த வார்த்தைகள் வந்த நபரைக் குளிர வைத்திருக்க வேண்டும். கப்பென்று அடங்கினான்.

"இப்ப...என்ன நடந்ததெண்டு சொல்லுங்கோவன்" அதிபர் இதமாக வினாவினார்.

"ஐயா, நீங்களே கேளுங்கோ. இந்தாள் நேற்று என்ர மேனை ரத்தம் கொட்ட அடிச்சிருக்கிது. இப்பிடி அடிக்கிறதுக்கு அவரே பெத்து வளத்த வராம்? ஆ?"

தன்னுடைய அணுகுமுறை வெற்றியளித்ததையிட்டு உள்ளூரச் சந்தோஷப்பட்ட அதிபர் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல்சொல்லத தொடங்கினார்.

"இஞ்சை பாருங்கோ ஐயா. பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிறது பாடம் படிக்கமட்டுமில்லை. நல்ல பண்பைப் பெறுகிறதுக்கும்தான். நிறையப்படிச்சும் பண்பில்லாமல் நடந்தா அதால ஒரு பிரயோசனமும் இல்லை. உங்கட மகன் நாளைக்கு நல்லவனா வந்தா உங்களுக்கு மட்டுமில்லை, பள்ளிக்கூடத்துக்கும்தான் பெருமை"

இராசன் சற்றுநேரம் மௌனமாக இருந்தான். பிறகு மெதுவாகக் கூறினான். "ஐயா. நான் படிப்பறிவில்லாத மொக்கன். எனக்கு ஒரு மயிர்மட்டையும் விளங்கேல்லை. தேவையில்லாமல் குடிச்சுக் கூத்தாடிப்போட்டன். அப்பிடியிருந்தும் என்னையும் ஒரு மனிசனா மதிச்சு ஐயா எண்டு சொல்லுறீங்கள். என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ ஐயா. உங்களை மாதிரி ஒருத்தர நான் பாக்கேல்லை...."

"அதுதான் பண்பு. நான் படிச்ச படிப்பின்ர வெளிப்பாடு. நீங்கள் போட்டு வாங்கோ" என்று அவனுக்கு விடை கொடுத்தார் அதிபர்.

இராசன் கும்பிட்டுவிட்டுத் திரும்பி நடந்தான். கந்தசாமி மாஸ்ரர் பிரமை பிடித்துப்போய்நின்றார். தனது உடலில் ஒன்றிரண்டு வெட்டுக்காயங்களாவது ஏற்படும் என எதிர்பார்த்தவருக்கு நடந்ததெல்லாம் கனவுபோலிருந்தது. சில நிமிடங்கள் நிலவிய மௌனத்தை அதிபரின் சிரிப்புக் கலைத்தது.

"கந்தசாமியர். என்ன திகைச்சுப் போய் நிக்கிறீர்?"

"இல்லை சேர். நான் என்னவோ எதிர்பார்த்தன். ஆனா நடந்தது...?"

கந்தசாமி மாஸ்ரரின் குரலில் நம்பாத்தன்மை தென்பட்டது.

"அதுதான் என்ர திறமை. இப்பிடியான நேரங்களிலை இப்பிடித்தான் நடக்கவேணும். சரி. இனி அதைப்பற்றி யோசிக்காமல் இப்ப பிரேயருக்குப் போவம்" என்றவாறு எழுந்து நடந்தார் அதிபர்.

இடைவேளைக்குப் பின்னர் மேசையிலே கிடந்த அலுவலகக் கடிதங்களைப் பார்த்துக்கொண்டிருந்த அதிபர், ஒரு கடிதத்தைப் படித்ததும் அதிர்ந்து போனார். தலை கிறுகிறுவென்று சுற்றத் தொடங்கியது. உடனடியாக வருமாறு கந்தசாமி மாஸ்ரரைக் கூப்பிட்டனுப்பினார்.

சற்றுநேரம் கழித்து உள்ளே நுழைந்த கந்தசாமி மாஸ்ரர் அதிபர் சிவநாதனின் நிலைமையைப் பார்த்ததும் பதறினார்.

"என்ன சேர் பேயறைஞ்சமாதிரி இருக்கிறீங்கள்? அந்தக் கணக்கு வழக்கை ஒருமாதிரிச் சரிப்பண்ணிப் போட்டன்தானே!"

குழப்பத்தினைப் போக்கும் உத்தேசத்தில் அவர்கூறிய வார்த்தைகள் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டுவிடவே சீறிப் பாய்ந்தார். அதிபர்.

"நீர் ஒண்டு. இந்தாரும் இதைப்படிச் சுப்பாரும். அப்பவிளங்கும்" அதிபர் நீட்டிய கடிதத்தை ஒன்றும் புரியாமல் வாங்கினார் கந்தசாமி மாஸ்ரர்.

"..... இந்த நிருபத்தின்படி அதிபர் பதவிக்கான கல்வி நிர்வாகசேவைத் தகுதி இல்லாத தாங்கள்.... திகதியிலிருந்து.....பாடசாலைக்கு ஆசிரியராக இடமாற்றப்படுகிறீர்கள் என்பதை அறியத்தருகின்றேன்." என்று கல்விப் பணிப்பாளரின் ஒப்பத்துடன் கடிதம் முடிந்திருந்தது.

"சேர் இதென்ன இப்பிடி அனுப்பியிருக்கிறாங்கள்?"

"எனக்கு ஒரு கோதாரியும் விளங்குதில்லை கந்தசாமி. கிரேட் இல்லாமல் எத்தினை பிரின்சிப்பல்மார் இருக்கினம். இவங்கதான் புதுசா ஒண்டைக் கண்டுபிடிச்சிருக்கிறாங்கள்"

"ஆரும் அண்டிவிட்டிருப்பினமோ? உவர் கணபதிப்பிள்ளை சேர்....."

மெதுவாக இழுத்தார் கந்தசாமி மாஸ்ரர்.

"இருக்கும். அந்த ராஸ்கலின்ர வேலைதான் இது. அவன் டீ.ஈ.இன்ர வால்தானே! அவன்தான் அள்ளி வைச்சிருப்பான்." ஆத்திரத்திலே பல்லைக் கடித்த அதிபர், கதிரையைத் தள்ளிக் கொண்டு எழுந்தார்.

"கந்தசாமியர். வெளிக்கிடும் டீ.ஈ. யிட்ட இண்டைக்கு ரெண்டிலை ஒண்டு பாத்திட்டுத்தான் மற்றவேலை."

"சேர். ரெண்டு பேரும் வெளிக்கிட்டா பள்ளிக்கூடத்தை ஆர் பாக்கிறது?"

"மிஸ் இராசநாயகம் பார்க்கட்டும்" என்றவர், அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டபின் புறப்பட்டார். கந்தசாமி மாஸ்ரர் சிரிப்புடன் பின்தொடர்ந்தார்.

தற்காலிக நியமனத்திலுள்ள அனுபவமில்லாத ஆசிரியையான மிஸ இராசநாயகத்தினால் பாடசாலையை நிர்வகிப்பது சாத்தியமாகுமா என்பதுபற்றி அதிபர் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

புகை கக்கிக் கொண்டு புறப்பட்ட மோட்டார் சைக்கிள் கச்சேரி நல்லூர் வீதியில் ஏறியது. பள்ளங்களில் அடிக்கொருதடவை விழுந்தெழும்பியதால் அவதிப்பட்ட கந்தசாமி மாஸ்ரர் முணுமுணுத்தார்.

உடுவில் அரவிந்தன்

"உவங்கள் குச்சொழுங்கைகளையும் ஒழுங்கான றோட்டுகளையும் தாரைக்கொட்டி நிரப்புவாங்கள். பழுதாப்போன றோட்டுகளைத் திரும்பியும் பாராங்கள். இஞ்சை நாரிசந்தெல்லாம் விட்டுப்போகுது."

"கந்தசாமியார் இப்ப ஏன் புறுபுறுக்கிறீர். கல்லுக்கொட்டி வைச்சிருக்கிறாங்கள்தானே! கெதியிலை றோட்டுப் போடுப்படும் பாருமன்...."

அதிபர் கூறியதைக் கேட்டு முகம் சுழித்தார் கந்தசாமி மாஸ்ரர்.

"ஓமோம். கட்டாயம் செய்வாங்கள். அதுசரி சேர்.... இப்பத்தை டீ.ஈ ஒருமாதிரி ஆள். கட் அன் ரைட் கண்டியளோ. உங்கட கதை எடுபடாது."

"எடுபடாட்டி எடுபடப் பண்ணுவன். பல்லிமுட்டை இனிப்பிலையிருந்து பஜாஜ் வரைக்கும் நீட்டிப் பார்க்க வேண்டியதுதான்." அதிபர் அலட்சியமாகக் கூறினார்.

மனிதமனம் பலவீனமானதுதான். எனினும், எதையும் சரிவரச்செய்ய வேண்டும் என்ற உறுதியை மனதிலே கொண்டு துணிச்சலுடன் செயற்படும் போது பிற அழுத்தங்கள் சிதறிப் போகின்றன. இதையும் அவர் உணரவில்லை.

மோட்டார் சைக்கிள் கிட்டு பூங்காவின் பக்கமாகச் சென்றபோது திடீரென்று காதுக்குள்ளே கிசுகிசுத்தார் கந்தசாமி மாஸ்ரர்.

"சேர்! அங்க பாருங்கோ....."

அவர் காட்டிய திசையிலே பார்த்த அதிபருக்கு அழல் பற்றியது. அங்கே கணபதிப்பிள்ளை மாஸ்ரர் பேரப்பிள்ளையையும் ஏற்றிக்கொண்டு தனது பழைய சைக்கிளில் வந்துகொண்டிருந்தார்.

"டேய் கணபதிப்பிள்ளை! எளிய வடுவா! நில்லடா." என்று கத்தியபடி அவர் பக்கமாக மோட்டா சைக்கிளைத் திருப்பினார் அதிபர். விரைந்து வந்த மோட்டார் சைக்கிள் கணபதிப் பிள்ளை மாஸ்ரரின் சைக்கிளைப் பக்கவாட்டாக மோதியது. சரிந்து விழுந்தார் கணபதிப்பிள்ளை மாஸ்ரர். வீதியோரக்கற்கள் முழந்தாள்களைத் தேய்க்கச் சறுக்கிய அவருடைய பேரப்பிள்ளை வீரிட்டுக் கத்தியது. பின்னே கட்டியிருந்த அரிசிப்பை உடைந்து சிதறியது. இடுப்பிலிருந்து நழுவிய வேட்டியை ஒரு கையால் இறுகப்பிடித்தபடி எழுவதற்கு முயற்சித்தார் கணபதிப்பிள்ளை மாஸ்ரர். பாய்ந்து குதித்த அதிபர் நெஞ்சிலே ஏறி மிதிக்கவே அப்படியே மல்லாந்து சரிந்தார்.

அயலில் நின்றவர்கள் தடுப்பதற்குள் இவ்வளவும் நடந்தேறிவிட்டன. மாணவர்களை நெறிப்படுத்தவேண்டிய அதிபர் மனிதத்தையே தொலைத்துவிட்டு மிருகம் போல நிற்பதை வீதியால் சென்றவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு போனார்கள்.

கல்வித்தகுதியால் விளைகின்ற பண்பு அங்கே க்விழ்ந்து கிடந்தது.

(யாவும் கற்பனை)

20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்



தோ - ஹூ

3

1917 இன் சோவியத் புரட்சியைத் தொடர்ந்து, சீனாவில், 1919இல், ஏகாதிபத்தியம் மற்றும் அடக்குமுறைகளுக்கெதிரான புரட்சிகர இயக்கம் ஆரம்பமானது. அத்துடன் புத்திலக்கிய இயக்கமும் வளர்ச்சியுறத் தொடங்கிற்று. நவீன சீன இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவரான லூ-சுன் இந்தப் புத்திலக்கிய இயக்கத்திற்கு அடிகோலினார். 'போராட்டத்திற்கான ஓர் ஆயுதமாகவே இலக்கியத்தைக் கருதுவதாக'க் குறிப்பிட்டவர், லூ - சுன்.

1921இல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உருவானதைத் தொடர்ந்து, அடுத்த இரண்டாண்டுகளுக்குள்ளேயே புரட்சிகர இலக்கியத்தின் அவசியம் வலியுறுத்தப்படலாயிற்று. நாற்பதுகளின் தொடக்கத்தில், ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கெதிரான சீனாவின் போர் தொடங்கிற்று. மா ஓ சேதுங்கின் 'யெனான் கலை இலக்கியக் கருத்தரங்'கின் உரைகள் வெளியிடப்பட்டன. அந்த உரையில், 'சீன மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்கு ஒரு கலாச்சாரப் படையும் அவசியமாயுள்ளது', என்று மாவோ குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து, தரமிக்க இலக்கியப் படைப்புக்கள் பல வெளியாகலாயின.

ருஷ்யப்புரட்சி, சீனப்புரட்சி - இவற்றிலும் ஒருபடி மேலே நிற்பது என்று கொள்ளத்தக்கது, வீரமிகு வியட்நாமிய மக்களின் விடுதலைப் போராட்டமாகும்.

ஜப்பான், சீனா, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய வல்லரசுகளின் தொடர்ந்த ஆக்கிரமிப்புகளுக்கெதிராக நீண்ட நெடுங்காலம் போராடி வியட்நாம் வெற்றி கண்டது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றினைக் கொண்டிருந்த வியட்நாம் கவிதை, 1945 புரட்சியின் போது புது உத்வேகம் பெற்றது. அதனைத் தொடர்ந்து வந்த மூன்று தசாப்தங்களின் போதுகூட, - வியட்நாம் தனது

சில குறிப்புகள்

சுதந்திரத்திற்காக இடைவிடாது போராட்டம் நடத்திய வேளையிலும் - இந்தக் கவிதை இலக்கியம், அதன் வலுகுன்றாமல், மென்மேலும் வீரியம் கொண்டது.

உலகிலேயே, போரினாற் பெரும் பாதிப்புக்களுக்குட்பட்ட பூமி என்று கொள்ளப்படத்தக்கது வியட்நாம். அந்த மக்கள், ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக மட்டுமன்றி, நாட்டின - பூகோள நிலைமை காரணமாக - இயற்கைச் சக்திகளுக்கெதிராகவும் போராட வேண்டியிருந்தது. இந்த இரட்டைப் பரிமாணங்கொண்ட போராட்டத்தைத் தாக்குப்பிடித்து முன்னேறுவதற்கு, வியட்நாமியருக்குக் கவிதைகளே ஆயுதமாய்க் கை கொடுத்தன.

சாந்தன்

இத்தனைக்கும் மத்தியில், வியட்நாம் கவிஞர்களின் மனிதாபிமானமோ, பல்பரிமாணங் கொண்ட புரிந்து கொள்ளலோ குன்றிவிடவில்லை. தோ ஹூ என்பவர் எழுதிய எமிலி, என் சின்ன மகளே! என்ற கவிதை இதற்கு நல்ல உதாரணமாய் அமைந்தது. அர்த்தமற்று தொடர்ந்து கொண்டிருந்த வியட்நாம் போருக்கு எதிர்ப்பைத் தெரிவித்தும், அப்போரை நிறுத்துமாறு வலியுறுத்தியும், அமெரிக்காவில்-'பென்ரக'னின் முன்னால - தீக்குளித்து, தர்ம வேள்வியில் தம்மை ஆகுதியாக்கிக் கொண்ட, நோமன் மொறிஸன் என்ற அமெரிக்கரின் மகளான சிறுமிக்கு அர்ப்பணிக்கப்பட்டகவிதை அது. அதை எழுதிய ஹூ, சிறந்த கவிஞர் மட்டுமன்றி, போராட்டத்தைத் தீவிரமாக முன்னெடுத்தவர்களில் ஒருவருமாவார்.

போரும் போராட்டமும் நியதியாகிப் போய் விட்டிருந்த அந்த நீண்ட நெடுங்காலத்தின்போது, தினசரி வாழ்க்கைக்கு முகங்கொடுத்த வியட்நாமிய மக்களின் மனப்பாங்கு, எத்தகைய தீரமும் திடமுங் கொண்டதாயிருந்தது என்பதைக் காட்டும் கவிதைகளுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைவது, சே லான் வியன் என்ற கவிஞர் எழுதிய 'தாயாயிருப்பது' என்ற கவிதை:

'தாயாயிருப்பது லேசானதல்ல,
வியட்நாமில்.
உலகத்து வழமை -
தாய்மார் தங்கள் பிள்ளைகளுக்கு
பூக்களைக் காட்டி
நேசிக்கப் பழகுதல்.
இங்கோ -
குழந்தைகளுக்கு
குண்டுகளிலிருந்து
தப்புவதெப்படி?
- என்பதுங் கூட.
உலகத்து வழக்கம்,
தாய்மார்,
தங்கள் பிள்ளைகளுக்கு
பாட்டுக்களையும்
பறவை ஒலியையும்
சொல்லிக் கொடுப்பது,
இங்கேயென்றால் -
B - 52 இரைச்சல் ஏது,
F- 105 உறுமலெது
என்பதுங்கூட.
மனிதராயிருப்பது
எங்ஙனமென்று
தாய்மார்
தங்கள் பிள்ளைகளுக்குச்
சொல்லிக் கொடுக்கும்
தருணங்களுண்டு.
ஆனால், இங்கோ -
அது மட்டுமே
போதாதென்றும்
அவர்கள் சொல்லும்
வேளைகளுண்டு.
வீரராய் விளங்குதல்
எப்படி என்பதைச்
சொல்லிக் கொடுக்கவும்
வேளைகளுண்டு.'

வியட்நாமியக் கவிதைகளின் முக்கிய பண்பு, மனிதநேயமும், நம்பிக்கை நிறைந்த புரட்சிகரப் பார்வையுந்தான். அவை, போரைப் பற்றி மட்டுமன்றி, பொருளாதாரத்தைப் பற்றியும் பாடின.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

;	வி சனி	சூ புத	வெ
	ஜாதகச் சக்கரம்		ராகு
கே			
		சந்	செவ்

அரசியலில் புதிய திசைதிருப்பங்கள் ஏற்படும். மாணவர்கள், தொழிலாளர்கள் புதிய பிரச்சினையைக் கிளப்புவார்கள். இந்திய அரசியலில் காங்கிரஸ்காரர்கள், மக்கள் செல்வாக்கைக் கூட்ட சில அதிரடி நடவடிக்கைகளை எடுத்தபடி இருப்பார்கள்.கலகம் பிறந்துதானே நியாயம் பிறக்கும்? நேட்டோ நாடுகள் நெருப்புக்குள் கைவிட்ட நிலையில் சமாதானம பேசும். புதிய உருவாக்கங்களை ஐ.நா. மூலம் மேற்குலகம் எடுக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். மத்திய கிழக்கிலும் ஆசிய நாடுகளிலும் திட்டமிட்ட பொருளாதாரஅழுத்தங்கள் ஏற்பட்டபடி இருக்கும்.

மாற்றம்: 29-05-1999இல்: துலாம் இராசியில் சந்திரன் நிற்கும். (விசாகம்)

31-05-1999இல் மிதுனம் இராசியில் புதன் மாறும். கடகம் இராசியில் வெள்ளி மாறும்.

இந்த வார இராசி பலன்

29-05-1999 இலிருந்து 04-06-1999 வரை

மேடம்

அழகை ரசிக்க வேண்டும்தான்; பார்த்து அனுபவியுங்கள்; தொட்டு அனுபவிக்கப் போகாதீர்கள். எதற்கும் ஓர் எல்லையுண்டு. எடுத்தெறிந்து பேசுவதும். எல்லை மீறிப்போவதும் எல்லோருக்கும் பிடிக்காது. தொழில ஸ்தானத்தில் எதிர்ப்பாலாருடன் ஏன் வாக்குவாதப்படுகின்றீர்கள்? பொருளில் நிதானமாக இருங்கள். சகோதரங்களுடன் வாக்குவாதப்படாது விலகிநடவுங்கள். பந்தாசங்களுடன் நிதானமாக நடக்க வேண்டாமா? வயிற்றுக் கோளாறு, வாய்வுத் தொல்லை, காய்ச்சல், உஷ்ணபீடைகள், தோல் காயங்கள் ஏற்படலாம். வீடு, காணி பூமி விஷயமாக புதிய நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படலாம். இடாம்பீகச் செலவுகள் திடீரென அதிகரிக்கும். நகைத்துறை, புடைவைத்துறை, கடல்வேலை, சமய சாஸ்திரத்துறை, சட்டத்துறை, மருத்துவத்துறையினருக்கு மாற்றங்கள் ஏற்படும். இதுவரை பட்ட துன்பத்திலிருந்து ஓரளவு பொருளால் விடுபடுவீர்கள். மாற்றங்கள் சகஜமாகும்.

அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன்.

இடபம்

அமைதி கலகநாஸ்தி என்று பேசாமல் இருக்கின்றீர்கள் போல படுகின்றது.மற்றவர்கள் பொருளில் ஆசைப்படலாமா? வீரதீரப் பேச்சால் எதையாவது சாதித்துவிடுகின்றோம் எனச் சிலர் சிந்திக்கின்றார்கள். சகோதர உதவிகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்களால் நன்மைகள் கிடைக்கும். வீடு, நிலம், வாகனம் சம்பந்தப்பட்ட இடங்களில் மாற்றங்கள் நடக்கும். கைகால் பிடிப்பு, படபடப்பு, அதிக உடல் உழைப்பால் அசதி என்பன இருக்கும். ஓய்வு தேவையாகும். சல வருத்தங்கள் சிலரை வருத்தலாம். சகோதரரிடம் இருந்து அல்லது புத்திரரிடம் இருந்து தூரத்தில் இருந்துவரும் செய்திகளால் மனவேதனை வரலாம். செய்தித்துறை, போக்குவரத்துத்துறை, சங்கீதத்துறை, விவசாயம், வியாபாரம், உணவுத்துறை தொடர்பானவர்களுக்குபொருள் வரவு அதிகரிக்கலாம். புதிய உருவாக்கங்களை திட்டமிட்டுச் செயற்படுத்துங்கள்.

அதிர்ஷ்டநாள்: புதன்,வியாழன்.

மிதுனம்

பாசத்துக்காக முழுச்சிந்தனையுடன் செயற்பட வேண்டி இருக்கும். அழகுத் தேவதை வெள்ளி சிரசில் நிற்கும் பொழுது சிந்தனையெல்லாம் கவர்ச்சி மயமாகும். தேவைகள் அதிகரிக்கும். அடிக்கடி தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் செய்ய யோசனைகள் வட்டமிடும். எதிலும் கொஞ்சம் அவசரமாக செயற்பட முனைவீர்கள். அழகுப் பொருள்களுக்கும் ரீ.வி பார்ப்பதற்கும் பொருளையோ நேரத்தையோ அதிகம் செலவிடுவீர்கள். இடமாற்றம் அல்லது பிரயாணம் சிலருக்கு மாற்றங்கள் கொடுக்கும். வியாபாரம், சட்டத்துறை, மரவேலைகள், நிர்வாக வேலைகள், இரும்பு வேலை செய்பவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள். எந்த வேலையும் பின்போடாமல் செய்ய முனையுங்கள். அதனால் நன்மைகள் ஏற்படும்.

அதிர்ஷ்டநாள்: புதன்,வியாழன்.

கடகம்

மனிதர்கள் பாசத்துடன் பழகியவர்கள். பிரிந்து வாழ்வதனால் எவ்வளவு வேதனை அடைகிறார்கள். உயிருடன் இருக்கும் வரையும் கூடிவாழ வேண்டும்; அல்லது சஞ்சலம்தான். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும் காலமாகும். எதிர்ப்பாலாருடன் அனுசரித்துப் போகவும். சிலருக்கு அரச உதவிகள் கிடைக்க இடமுண்டு. பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணி, பூமி, வீட்டுச் செலவுகள் அதிகரிக்கலாம். கைகால் பிடிப்பு, வயிற்று நோ, சல வருத்தம், வாயுத்தொல்லைகள்,தோல் வருத்தங்கள் என்பன சிலரை வருத்தலாம். எதையும் பெரிதாகக் காட்டிக் கொள்ள மாட்டீர்கள். ரீ.வி., சினிமா, சங்கீதத் துறை, நகை, ஆடை, ஹோட்டல், காசு, கமிஷன், ஒப்பந்த வேலை செய்பவர்களுக்கு அதிக நன்மைகள், மாற்றங்கள் கொடுக்கும்.

அதிர்ஷ்டநாள்: சனி,புதன், வியாழன.

சிங்கம்

புதிய திட்டமொன்றால் உற்சாகம் ஏற்படும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பதற்கிணங்க செயற்பாடுகள் இருக்கும். தெய்வ வழிபாடுகளில் புதிய சிந்தனைகள் ஏற்படும். பழையபாக்கிகள் சிலருக்கு வசூலாகும். காணி,வீடு, வாகனம் சம்பந்தமான செலவுகள் சிலருக்கு அதிகரிக்கலாம். நெஞ்சுநோ,வாயு வயிற்றில்தொல்லை, முதுகுவலி, கை,கால் உளைவு என்பன சிலருக்கு வருத்தலாம். மருந்து, குருத்தொழில், சட்டத்துறையினர், மின்சாரத் துறையினர், கணக்குத்துறையினர், வியாபாரத்துறையினருக்கு பலவித மாற்றங்களும் பொருள் வரவுகளும் ஏற்படும். குடும்பத்தில் செலவுகளும், புதிய திட்டங்களால் பலருக்கு மாற்றங்களும் ஏற்படலாம். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். அல்லது இழப்புக்களைச் சந்திப்பீர்கள்.

அதிர்ஷ்டநாள்: சனி, புதன், வியாழன்.

கன்னி

ஆறிய புண்ணில் வேல் பாய்ச்சுவது போலச் சிலர் வேதனைகளைத் தந்திடுவார்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் அனுசரணைகள் ஏற்படும் காலமாகும். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வார்கள். குடும்பத்தவரின் முன்னேற்றத்துக்காக அதிக பிரயாசையுடன் முயற்சிகள் செய்வார்கள். தாயாருடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம். அரச உதவிகள் கிடைக்கும். எதையும் சிரித்துச் சிரித்துப் பேசும் உங்களைச் சிலர் பார்த்தபடி இருப்பார்கள். எனவே எதையும் அளந்து பேசுங்கள். நரம்புத் தளர்ச்சி, நெஞ்சுச்சளி, இடுப்புவலி, வாய்வு, வாத உளைவு, தோல் வருத்தங்கள் வருத்தலாம். வியாபாரம், எண்ணெய், இரும்புத்துறை, நிர்வாகத் துறையினருக்கு தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும்.

அதிர்ஷ்டநாள்: சனி, புதன், வியாழன.

துலாம்

முயற்சியால் முன்னுக்குவரப் பல சந்தர்ப்பங்கள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் பணவரவு அதிகரிக்கும். அங்குமிங்குமாக பல திட்டங்கள் தீட்டி எல்லோருக்கும் வழிகாட்ட முனைவீர்கள். குடும்பத்தில் சகோதரங்களுக்கு நன்மையும், புத்திரர்களுக்குச் சிறப்பும் ஏற்படும். பொருள் நிலையில் புதிய திசை திருப்பம் ஏற்படும். இடமாற்றங்கள் சிலருக்கு புதிய நட்பை ஏற்படுத்தும். வயிற்று வருத்தங்கள், தலைவலி, குடல் வருத்தங்கள், என்பன கொடுக்கும். கால்நடை, பண்ணை, போக்குவரத்து, இரும்பு, சாய்ப்புச் சாமான்கள், சட்டம், மருந்து சம்பந்தப்பட்ட துறைகளைச் செய்கின்றவர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும். மற்றவர்களுடைய குறை, நிறைகளைக் கேட்டு உதவி செய்யும் உங்களின் நம்பிக்கையான ஆலோசனைகள் பலரையும் வாழவைக்கும்.

அதிர்ஷ்டநாள்: சனி, புதன், வியாழன.

விருச்சிகம்

ஆளைப் பார்த்து காற்று வீசுகின்றதா? திக்கற்றவர்களுக்குத் தெய்வம் தான் துணை நிற்கின்றது. மாடி வீட்டில் வாழ்ந்தவனும், மண் குடிசையில் தவழ்ந்தவனும் வீசுகின்ற தென்றல் காற்றின் பிராண சக்தியைத்தானே உட்கொண்டு வாழுகின்றார்கள். உங்கள் உறுதி நிலையைத் தொழில் ஸ்தானத்தில் காட்டுவீர்கள். எல்லோரும் சமநிலையில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் எனப்பாராது உதவி செய்வீர்கள். கிருமித்தாக்கம், நெஞ்சு நோ, காயங்கள், காய்ச்சல், வயிற்றுப் பொருமல், வாய்வுத் தொல்லை என்பன சிலரை அடிக்கடி வருத்தம்.கடல் வேலை, போக்குவரத்து, பத்திரிகைத் துறை, தோட்டம், சங்கீதம், ரீ.வி. ஆகியவைகளில் ஈடுபாடு உடையவர்களுக்கு நற்பலன்கள் நடக்கும்.

அதிர்ஷ்டநாள்: சனி, புதன், வியாழன்.

தனுசு

எந்த அலுவலையும் வெளிப்படையாகவே செய்வீர்கள். அழகுத் தேவதை வெள்ளி பார்த்திருக்கின்றாள். அடிக்கடி பதற்றமும் கோபமும் வந்தபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் பொருள் ரீதியான அலுவல்களில் கவனமாக இருக்கவும். எதிர்ப்பாலார்கள் உங்களைக் கண்டு ஓடுவார்கள். எவரையும் எடுத்தெறிந்து பேசுவதனால் சிலர் வெறுப்பார்கள். இடுப்பு, நாரி நோ, கைகால் பிடிப்பு, வாய்வு, வாத உளைவு என்பன கொடுக்கும். சுயகௌரவம் அடிக்கடி தலை தூக்கியபடி இருக்கும் காலமாகும். பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டுக் குறைகேட்க நேரிடலாம். சமயத்துறை, வியாபாரத்துறைகள், சட்டத்துறை, மருந்துத்துறை என்பனவற்றில் ஈடுபாடு உள்ளவர்கள் அதிக நன்மை அடைவார்கள். வெளிநாட்டுச் செய்தி அல்லது பணவரவு சிலருக்கு மகிழ்ச்சி கொடுக்கும்.

அதிர்ஷ்டநாள்: சனி, புதன்.

மகரம்

நேற்று வந்தவர் தட்டிக்கேட்க ஆளில்லாததால் ஒட்டி உறவாட யோசிப்பது போன்று உங்கள் மனம் பக்கத்தில் இருப்பவர்களிடம் உறவு, தொடர்பு கொள்ளச் சிந்தனை செல்லும். தொழில் ஸ்தானத்தில் ஆயிரம் கனவுகள் காண்பீர்கள். காணி, வீடு, வாகன சுகம், செலவுகள் கொடுக்கும். சகோதரம் அல்லது புத்திரர்களுக்காக அதிகம் அலைந்துதிரிய வேண்டி வரலாம். சிலர் தீய நட்பால் பொருள் இழப்புக்களை அடைவார்கள். பலருக்கு உதவியும் ஆலோசனையும் செய்தபடி இருப்பீர்கள். நரம்புச் சோர்வு, வயிற்று நோ, வாத உளைவு, சிறுகாயங்கள் என்பன சிலரை வருத்தலாம். மருந்துத்துறை, சட்டத்துறை,நிர்வாகத்துறையினருக்கும் மதத்துறை, விவசயாயத்துறை சார்ந்தவர்களுக்கும் அதிக இலாபங்கள் கிடைக்கும்.

அதிர்ஷ்டநாள்:சனி, வியாழன்.

கும்பம்

எதிலும் ஆராய்ந்து செயற்படும் இயல்பு உள்ளவர்கள் தமது காரியங்களை திறம்பட ஒழுங்குமுறையில் செய்து வருவார்கள். தொழில் ஸ்தானத்தில் உதவிகள் கிடைக்கும். மேலதிகாரிகள் ஆதரவு தருவார்கள். சுதந்திரமான போக்கு எப்பொழுதும் நன்மையைத் தரும் எனச் சொல்ல முடியாவிட்டாலும் செயற்பட்டபடி இருப்பீர்கள். எதிர்ப்புக்கள் வந்தாலும் ஒதுங்கிவிடுவீர்கள். நாரிநோ,கை கால் சோர்வு, நெஞ்சுப் படபடப்பு, தலைச் சுற்று என்பன மாறிமாறி இருக்கும். இரும்பு வேலை செய்பவர்கள், குருத்தொழில், மருந்துத்துறை, போக்குவரத்துத்துறை ஆகியவற்றில் ஈடுபாடுள்ளவர்கள் நன்மை அடைவார்கள். மாற்றங்கள் சகஜமாகும். எந்த நிலையிலும் பொறுப்புக்களை ஏற்காதீர்கள். பொறுப்பேற்றால் குறைகேட்டு வேதனை அடைவீர்கள்.

அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

மீனம்

சிலர் பிறர் மீது குறை கூறியபடி இருப்பது தங்களது தவறுகளை மறைப்பதற்காகும். இது உங்களுக்குத் தெரியாதா? வியாழ மாற்றத்தால் ஒரு வெளிச்சம் தெரிகிறது. தொழில் ஸ்தானத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். சந்தர்ப்பத்துக்குத் தகுந்தால் போல் செயற்படுவீர்கள். எதையும் தூக்கி எறிந்து பேசிச் சிலரின் வெறுப்புக்கு ஆளாவீர்கள். சளி, காய்ச்சல், நெஞ்சு நோ, வாத,வாய்வுத் தொல்லை என்பன சிலரை வருத்தலாம். அதிக பானவகைகளைப் பாவித்தபடி இருப்பீர்கள். எதையும் சிரித்துப் பேசி சமாளிக்கும் திறனால் நன்மைகள் ஏற்படும். வியாபாரம், மருந்துத்துறை, நிர்வாகத்துறை, மின்சாரத்துறை, விவசாயத்துறையினருக்கு பலவித மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும். எதிலும் ஓர் உறசாகம் ஏற்படும். புதிய தொழில் வாய்ப்பு சிலருக்கு நன்மையைத் தரும்.

அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

மகாதேவா ஜோதிடம்

குறள் வெள்ளம்

அனுபவத்தின் வழிவந்த ஆன்றோர் வாக்குகள் எக்காலமும் பிழைப்பதில்லை.

கெடுவான் கேடு நினைப்பான் என்பார்கள். கேடு வரும்போது மதிகெட்டுவரும் என்பார்கள். புத்தி பேதலித்து, மனம் மயங்கி, நீதிதவறி, நடுநிலை பிறழ்ந்து(நடுவொரீ) தவறு செய்யத்தூண்டும் மனநிலை கெடு காலத்தில் வந்து அமையும்.

கெடுபிடி சொற்கேளாது; நீதி நியாயம் உணராது; தலை கீழாக நடக்கத் தலைப்படும்; சரியானதெல்லாம் பிழையாகப்படும்; பிழையானதெல்லாம் சரிபோல விளங்கும்.

அடுத்தவரை முட்டாளாக்கித் தனக்குத் தாளம் போடுபவர்களுக்குச் சலுகைகாட்டி ஊரை ஏய்த்து வாழும் வாழ்வில் செல்வம் - செல்வாக்கு எல்லாம் குவிவது போன்ற மாயையே தென்படும்.

ஆனால் தன் நெஞ்சே தன்னை உறுத்தும். பொலிவு போலத் தெரியும் வாழ்க்கையில் கேடுதான் எஞ்சும்.

கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுஓரீஇ அல்ல செயின் -0116

-நடுவுநிலைமை -

அமிர்தகவிராயர்.

கத்தரிக்காய்க்கறி



கோவையூரிலே முதலியார் ஒருவர் இருந்தார். அவர் பெரிய பணக்காரர். அதனால் அவரைப் 'பெரிய முதலியார்' என்றும் அழைத்தனர். அவருக்குப் பனங்காணி, வயற்காணி, பசுமாடுகள் முதலியன பெருமளவிலே இருந்தன. ஊரிலே ஏற்படும் சண்டைகளைத் தீர்த்து சமாதானம் செய்வதும் அவர்தான். முதலியாருக்கு மூத்தப்பர் என்று ஓர் ஆலோசகர் இருந்தார். மூத்தப்பர் கெட்டிக்காரராக இருந்தமையால் அவரைப் "புத்திமான் மூத்தப்பர்" என்றும் அழைத்தனர்.

பெரிய விருந்தொன்றில் ஒருநாள் முதலியாரும் மூத்தப்பரும் கத்தரிக்காய் பொரித்த கறியைச் சுவைத்தார்கள். அது மிகவும் சுவையாக இருந்தது. 'ஆ! என்ன அற்புதமான கறி' என்று பெரிய முதலியார் சொன்னார். அவருக்குப் பக்கத்திலிருந்த மூத்தப்பர் "அதுதானே கடவுள் கத்தரிக்காய்க்கு முடி வைச்சிருக்கிறார்" என்றார்.

யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்

கத்தரிக்காய் பொரித்த கறியை விரும்பிய முதலியார் ஒவ்வொருநாளும் தமது வீட்டில் அந்தக்கறியைச் சமைக்கும்படி சொன்னார். ஒவ்வொருநாளும் அதனைச் சாப்பிட்ட அவருக்கு வெறுப்பு வந்துவிட்டது. பெரிய முதலியார் மூத்தப்பரைப் பார்த்து "கத்தரிக்காய் உதவாது" என்று வெறுப்போடு சொன்னார். அதற்கு மூத்தப்பர் "அதுதானே கடவுள் கத்தரிக்காய்கக்குத் தலையில் முடிச்சுப்போட்டு கட்டித் தூக்கியிருக்கிறார்" என்று சொன்னார், அவர் சொன்னதைப் பெரிய முதலியார் ஏற்றுக்கொண்டார்.

தொகுப்பு:கலாநிதி சபா.ஜெயராசா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எங்களது பிரதேசக் கடற்பரப்பில் மாயாஜாலம் காட்டும் மச்சாவதாரங்கள்

மீனினத்தைக் கண்டதும் பொதுவாக மனிதனுக்கு அடுப்பில் வைக்கும் எண்ணந்தான் தோன்றும். அதைவிடுத்து, அழகை ரசிக்கும் எண்ணத்துடன் - அமைப்பு விநோதங்களைக் கண்டு வியக்கும் எண்ணத்துடன் - நோக்கினால் பல புதுமைகள் புலப்படும்; எத்தனை வியத்தகு படைப்புக்களை இயற்கை அன்னை மறைத்து வைத்திருக்கிறாள் என்பது தெரியவரும். விநோ

சப்பாத்துமீன்

தப் படைப்புக்கள் புலப்படப் புலப்படபட வியப்பும் மிகுந்து கொண்டேபோகும்.

அழகு இராணிகள்

சீப்பு மீன்கள் (Rhabdophora Tri Faciatus and Linophora Vagaunda) எமது கடல்களின் அழகு இராணிகள், இவற்றின் உடல் இருபக்கமும் தட்டையாகவும்,வட்டித்ததாகவும், பளபளப்பாகவும் இருக்கும். இவற்றின் உடலில் குறுக்கும் நெடுக்கும் செல்லுகின்றநிறக்கோடுகள உண்டு. அதன் காரணமாகவே இவை மிகவும் கவர்ச்சி உள்ளவை. இவை மிகவும் சுவையுள்ளவையும் கூட (Table fish). பலநிற முருகையுருப் பிராணிகளும் கடற்றாவரங்களும் பின்னணிதர, இவை ஆயாசமாக உலாவருவது தேவகன்னிகைகளையும் தோற்கடிக்கும். நமது அழகு இராணிகள் எம்மாத்திரம்? ஆனால் அழகை இரசிக்கும் நோக்கத்துடனா இவற்றை மனிதன் நாடுகின்றான்? அடுப்பில் வைக்கும் எண்ணத்துடன் அல்லவா! மீனழகு இரசிப்பதற்கில்லையா?

ஓசிச் சவாரியா? இதோ நான் வருகின்றேன்!

சப்பாத்து மீன் (Sucker Fish)கள் இலவசச் சவாரி செய்வதில் விற்பன்னர்கள். இவற்றின் முற்பக்க முதுகுப்புறச் செட்டை சப்பாத்தின் பாத அமைப்புக் கொண்ட ஓர் உறுஞ்சியாக (ஒட்டுறுப்பாக) அமைக்கப்பட்டிருக்கும். இந்த ஒட்டுறுப்பின் உதவிகொண்டு விரைந்து செல்லக்கூடிய மீனினம், ஆமை போன்ற விலங்குகளின் வயிற்றுப்புறத்தில் ஒட்டிக்கொண்டு ஓசிச்

கொம்புச்சுறா

சவாரி செய்யும். தானாக இடப்பெயர்ச்சி செய்வதற்கு வேண்டிய செட்டைகளும் இதற்கு உண்டு. ஆயினும் காவ ஆளிருக்கும் போது தானாக ஏன் அசைய வேண்டும்? நடந்து செல்லும் போது 'சைக்கிளில்' வருகின்ற ஒரு நண்பன் தென்பட்டால் மனித ஜந்துக்களாகிய நாம் என்ன செய்கின்றோம்? நடந்தா செல்கின்றோம்.? தொத்தி விடுகிறோமல்லவா!

இந்தச் சப்பாத்துமீன் உணவுக்கு உதவாது.

பறக்கும் பைங்கிளி

பறவைமீன் (Flying Fish) மிக அழகானது. அத்தோடு நீரிலிருந்து குதித்தெழுந்து நெடுந்தூரம் காற்றில் வழுக்கிச் செல்லக்கூடியதுமாகும். இதன் மார்புச் செட்டைகள் (முன்சோடிச் செட்டைகள்) மிகப் பெரியவை. தோற்றத்தில் பறவைகளின் செட்டைகளை ஒத்திருக்கும். வாற்செட்டையின் கீழ்ச்சோணை பெரிதாயிருக்கும். வாற்செட்டையால் நீரை அடித்து (உதைத்து), எகிறிக்குதித்து, மார்ப்புச் செட்டைகளை அகல விரித்து மிக ஆயாசமாக 15 - 20 அடி தூரத்தைக் கடக்கும். இதனால் வேகமாக நீந்தவும் முடியும். எதிரிகள் துரத்தும் போது வேகமாக நீந்தியும், அடிக்கடி நீருக்கு மேல் எகிறிக்குதித்தும், தப்பித்துக் கொள்ளும்.

பறவை மீன்களும் மிகச் சுவையான மீன்களில் ஒன்று. அதனால் பறவை மீன்களை வலைபோட்டுப் பிடிப்பது மாத்திரமல்லாமல், பின்வரும் முறைகளிலும் சுலபமாகப் பிடிப்பார்கள்:- ஒருகூட்டம் பறவை மீன்கள் தென்பட்டால் போதும். அவற்றின் பாதைக்குக் குறுக்கே வள்ளத்தைச் செலுத்தினால் அம் மீன்கள் எகிறிக்குதிக்கும். அப்படிக் குதித்தவற்றுள் சில தோணிக்கு அப்பாற் சென்று விழும், சில தோணிக்குள் விழும், சில தோணியில் மோதி கடலில் விழும். தோணிக்குள் விழுந்தவை மீனவனுக்கு கிடைக்கும். வேறும் ஒரு முறையிலும் இவற்றை சுலபமாகப் பிடித்து விடுகின்றனர். இரவு நேரங்களில் தோணியின் பாய்மரத்தில் ஒரு "பெற்றோமாக்ஸ்" விளக்கை (அல்லது வேறு வெளிச்சத்தை) தொங்கவிட்டு, விளக்கின் இரு பக்கமும் அகலமான துணிகளைக் கட்டிவிடுவார்கள். வெளிச்சத்தினால் கவரப்பட்ட இம்மீன்கள் நீரிலிருந்து வெளிச்சத்தை நோக்கிக் குதித்து, துணியில் மோதி தோணிக்குள் விழும். மற்றும் மீன்களும் பொதுவாக ஒளியாற் கவரப்படுகின்றன. அதனால்தான் இராக் காலங்களில் சூழ் கொண்டு மீன்களைச் சுலபமாகப்



தழையன் கற்பாறையின்மேல்

பிடித்து விடுகின்றனர்.

தூர கிழக்கில் வலைகளை அல்லது பொறிகளை அமைத்து விளக்குகளையும் கட்டித் தொங்க விடுவார்களாம். ஒளியால் கவரப்பட்ட மீன்கள் பொறியில் அகப்பட்டுக்கொள்கின்றன.

அவளைத் தொடுவானேன்? கவலைப் படுவானேன்?

திமிலி (Electric Skate) திருக்கையினத்தைச் சேர்ந்தது. இது சில காலங்களில் நமது கடற்கரையோரப் பகுதிகளுக்கும் வரும். மிக ஆறுதலாக நீந்தித்திரியும். ஓடிச்சென்று கைகளினாலேயே பிடிக்கலாம். ஆனால் பிடித்ததும் "ஷொக்" அடிக்கும். காரணம் இம்மீன்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வல்லவை. அதன் விளைவு மின்சார அதிர்ச்சி. மின் அதிர்ச்சியைத் தாக்குப்பிடிக்க வல்லவர்கள் இம்மீனைப் பிடித்து வேடிக்கை பார்க்கலாம்.

மடத்தற்றலையன்

கொம்புச்சுறா (Hammer Headed Shark) மீனினத்திலேயே விநோதமானது: தனியானது. இதன் தலை தட்டையாகவும், இருபக்கமும் மடத்தல் (ஆமார்-Hammer) போல வளர்ச்சியடைந்தும் காணப்படும். இரு கொம்புகளின் முடிவிலும் கண்கள் காணப்படும். இத்தகைய அமைப்பு வேறு எந்த மீனுக்குமில்லை. இவற்றுக்கு கூரிய



வேளா

பற்களும் உண்டு. பெரிய மீன்கள் கடித்துக் காலையோ கையையோ துண்டித்து விடக் கூடியவை. சிறியவையும் கடித்து ரண காயங்களை ஏற்படுத்திவிடும். அதனால் கொம்புச் சுறாக்கள் எல்லாம் ஆபத்தானவை. பொதுவாகச் சுறாக்கள் எல்லாமே ஆபத்தானவை. கொம்புச்சுறா உணவாகப் பயன்படும். பாற்சுறா போன்ற சுவையுள்ளது.

அரிவாட் தலையன்

வேளாச்சுறாவின் (Saw Fish) தலையிலிருந்து இருபக்கமும் கூரிய பற்களுள்ள வாள் போன்ற வளர்ச்சி காணப்படும். நீரில் நீந்தும் பொழுது

சீப்புமீன்

தலையை இருபக்கமும் ஆட்டிக் கொண்டு தான் செல்லும். வாளில் அகப்பட்ட உயிரினத்தின் கதி அதோகதிதான். சுறாவைப் போல வேளாச்சுறாவும உணவாகப் பயன்படும். சில காலங்களுக்கு முன் உள்ளூர்ச் சண்டியர்கள் வேளாச்சுறாவின் வால், திருக்கைவால் போன்றவற்றைக் காட்டி வெருட்டுவதுண்டு: அவை தாக்குதலுக்கும் பயன்படுத்துவதுண்டு.

அழகுண்டு: குணமில்லை!

சேவல் மீன் (Scorpion Fish) அழ்குள்ளது. நல்ல நிறமுள்ளது. சேவற் கோழிக்கு இருப்பது போல நிறமுள்ள இறக்கைகள் போன்ற செட்டைகளை உடையது. ஆனால் ஆபாத்தானது. இதன் முதுகுப்புறத்தில் நச்சுப் பைகளுடன் கூடிய முட்களுமுண்டு. இது கொட்டினால் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம். உயிர் பிழைத்தாலும் கொட்டிய இடத்திலே ஏற்பட்ட புண்கள் ஆற மாதங்கள் செல்லும்.

-குகன்-

தும்பி மீனும் (Stone Fish) இந்த இனத்தைச் சேர்ந்ததுதான். இது அழகற்றது. கருநிறம் அல்லது மண்ணிறம் உடையது(கபிலநிறம்). நீருக்கு அடியில் கற்பாறைகளுக்கு மேல், அல்லது நிலத்திலே, அல்லது மண்ணில் மறைந்து, அசைவற்ற நிலையில் இருக்கும். அதனால் சுலபமாக புலப்படுவதில்லை. இதன் முதுகிலும் விஷமுட்களுண்டு. இதன் மேல் மிதித்தால் அல்லது இது தீண்டினால் முடிவு வேதனையானது. கொட்டிய இடத்தில் ஏற்பட்ட புண்கள் பெருத்துக் கொண்டே போகும். ஆற



சீப்பு மீன்

மாதங்கள் செல்லும்.

மேற்படி மீனினங்கள், கற்பாங்கான - முருகையுருப் பிராணிகள், அல்காக்கள் நிறைந்த - ஆழம் குறைந்த - கடல்களில் வாழும். பெரும்பாலும் கரையோரப்பகுதிகளில்.

தற்காப்புப் போர்வைகள்

பேத்தை மீனின் (Pouffer Fish or Globe Fish) தோலில் சிறிய கூரிய முட்களுண்டு. மற்றும் மீன்களால் அது தாக்கப்படும் பொழுது இது காற்றை உள்ளெடுத்து உடலை "பலூன்" போலப் பெருகச் செய்து வயிற்றுப்புறம்



திமிலி (திருக்கை)

மேலாக இருக்கக்கூடியதாக நீரில் மிதக்கும்.

அப்பொழுது உடல் குத்தி நிற்கும். அற மற்றும் மீன்கள் பொ முடியாது. அதன் ஆபத்தினின்று தப்ப முட்பேத்தை (Por ததுதான். ஆனால் பெரியவை. முட்க பொழுது முட்பேத் ஒத்திருக்கும். அப் தீண்டுவார்கள்?

தட்ட நாக்க

பத்தாம் பட்டி(Flat மீன். நாக்குப் போன் வேடிக்கை என்னவெ போல முதுகுப்புறம் கீழாகவும் இதில் கவாட்டாக சரிந்து இனங்களில் இடப் இனங்களில் வலப்ப படும். இப்படியிருப் திற்குரிய கண் மறு இருக்கும். அதன் க ளும் பக்கம் பக்கம இம் மீன்கள் கட

பத்தாம்பட்டி



காணப்படும். இவ் சயமுண்டு. சு நிறத்தை மாறுக் பகுதிஇருண்டு இரு கருமையாய் இருக் மண்ணிறக் கற்கள் உடலும் வெளிறிய கள் உள்ளதாகவு சூழலுக்கு தக்கதா வதால் இவற்றை

அங்கிகள் ப ஒவ்வெ

முடியாது. அதனா களிடமிருந்து இல கின்றன.

எருமை நாக்கு கூறிய வகையை நாக்குப் போன்றுமி மிகவும் சு யா போடுவதற்கு சிற

நீச்சல் வீர

வௌவாற் திருக் செட்டைகள் மிகப் மிக விரைவாகவும், லும். நீருக்கடியில் கைப் பார்த்துக் செ

சேவல் மீன்

குதித்து மறைந்து வாற்பேத்தைகளைப்

மேற்கூறியவற்றை பிற மீனினங்களும் ஏனைய உயிரினங் கடற்கரையோரத்தி களையே நேரம் போ துக்கொண்டேயிருக் யின் விநோதம்?

தும்பிமீன்

பெத்தைமீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்களெல்லாம் நிலைக்
லையில் இம்மீன்களை
ாக ஒன்றும் செய்துவிட
ரணமாக இம்மீன்கள்
துக் கொள்ளுகின்றன.
ne Fish)யும் இதை ஒத்
ம்மீன்களின் முட்கள்
நிலைக்குத்தி நிற்கும்
முள்ளம் பன்றியை
ழது யார்தான் அதைத்

யனும்
னையனும்

h) மிகவும் தட்டையான
தாற்றமுடையது. இதில்
ால் மற்றும் மீன்களைப்
லாகவும் வயிற்றுப்புறம்
ப்பதில்லை. இது பக்
பாய் இருப்பதால் சில
கம் மேலாகவும் சில
கமீ மேலாகவும் காணப்
ல் கீழேயுள்ள பக்கத்
நோக்கி நகர்த்தப்பட்டு
ணமாக இரண்டு கண்க
மேற்புறம் காணப்படும்.
ல் பலமட்டங்களிலும



ல் வேறும் ஓர் அதி
ஏ வாறு இவை தமது
யவை. கடலின் அடிப்
ால் இவற்றின் நிறமும்
. வெண்ணிறமண்ணில்
ணப்பட்டால், இவற்றின்
வும், கபிலநிறப் புள்ளி
இருக்கும். இப்படியே
இவை நிறத்தை மாற்று
லேசில் கண்டுபிடிக்க

விதம்
ன்றும் ஒருவிதம்

இவை தமது எதிரி
ாக தப்பித்துக் கொள்

ும் (Tongue Fish) மேற்
தே. இது நீட்டாகவும்
க்கும். தட்டை மீன்கள்
வை இவை கருவாடு
னை

பறவைமீன்

ம் கல்லேறியும்

(Eagle Ray) யின் மார்புச்
ியவை. அதனால இவை
முகாகவும் நீந்திச் செல்
வை உலாவிவரும் அழ
ண்டேயிருக்கலாம்.

தழையன்(Skipper) மார்புச் செட்டைகளின் உதவியால் கற்பாறைகளில் ஏறிப்படுத்திருக்கும். (முதன்முதலாக நில வாழ்கையை மேற்கொண்ட முதுகெலும்புள்ள அங்கிகளுக்கு இதுவும் ஒரு முன்னோடி)நாம் அருகில் சென்றால அது உடனே வழுக்கி, நீரிற்
ும். இவை பார்ப்பதற்கு
போலிருக்கும்.
போன்று இன்னோரன்ன
மது கடல்களிலுண்டு.
ளும் பல காணப்படும்.
காணப்படும் உயிரினங்
வது தெரியாமல் பார்த்
லாம். என்னே இயற்கை

கங்கையும் யமுனையும்



ஒரு முறை அக்பர் சக்கரவர்த்தி அரச சபையில் இருக்கும் போது காசியாத்திரை செல்ல விரும்புவதாக ஓர் அமைச்சர் கூறினார்.

இதைக் கேட்ட அக்பர் 'காசியில் என்ன விசேஷம்?' என்று கேட்டார்.

'அங்கு புனிதமான கங்கை நதி ஓடுகிறது. அதில் நீராடவே அங்கு செல்கிறேன்' என்றார் அமைச்சர்.

'கங்கையும் யமுனையும் இமயத்தில்தான் உற்பத்தியாகின்றன.அவ்வாறு இருக்கும போது கங்கை மட்டும் ஏன் புனிதமாகக் கருதப்படுகிறது?' என்றார் அக்பர்.

இதற்கு சரியான பதிலை ஒருவரும் கூறவில்லை.

'பீர்பல், நீயும் ஏன் மௌனமாக இருக்கிறாய்?' என்றார் அக்பர்.

'அரசே, நான் யமுனையைத்தான் புனித நதியாகப் பாவிக்கிறேன். அவ்வாறு இருக்கும் போது நான் எப்படித் தங்கள் கேள்விக்குப் பதில் அளிக்க முடியும்?' என்றார் பீர்பல்.

'அரசே, பீர்பல் எப்பொழுதும் விதண்டாவாதமாகப் பேசுவதில் வல்லவர். இந்திய நாட்டிலுள்ள அனைத்து மக்களாலும் கங்கை ஒரு புண்ணிய நதி என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் போது பீர்மல் மட்டும் யமுனைதான் புனிதமானது என்கிறார். அது எப்படி என்பதை அவரை நிரூபிக்கச் சொல்லுங்கள்' என்றார் அமைச்சர்களில் ஒருவர்.

'அரசே மக்கள் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்ள கங்கையில் நீராடுகிறார்கள். கங்கைநதி மக்களுடைய பாவங்களைச் சுமந்து செல்கிறது. ஆனால் கண்ணன் கோகுலத்தில் இருந்த போது யமுனைநதியில் நாள் தோறும் நீராடியிருக்கிறார். இதிலிருந்து சொல்லுங்கள். மக்களுடைய பாவங்களைச் சுமந்து செல்லும் கங்கைநதி புனிதமானதா? பகவான் கிருஷ்ணன் நாள் தோறும் நீராடிய யமுனை நதி புனிதமானதா?' என்றார் பீர்பல்.

எல்லோரும் அவரது பதிலைக் கேட்டு விக்கித்து நின்றனர்.

கி. ஜமுனாதேவி
(தரம். 10 மானிப்பாய் மகளிர் கல்லூரி.)

சிறுவர் சுடர்

வண்ணத்துப் பூச்சி சோடி எது?



மேலேயுள்ள படத்தில் 17 வண்ணாத்திப் பூச்சிகள் உள்ளன. அவற்றில் இரண்டு ஒரே மாதிரியானவை. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

நாளும் உரைப்பேன் நண்பனே!

அன்புதனைப் பெருக்கிடுவாய்!
ஆசைதனைக் கருக்கிடுவாய்!
இன்பந்தனைப் பெற்றிடுவாய்!
ஈகைதனைக் கற்றிடுவாய்!
உலகமதை அறிந்துகொள்ளு!
ஊழல்களைப் புரிந்துகொள்ளு!
தீமைகளை விலக்கிக்கொள்ளு!
நன்மைகளைப் பெருக்கிக்கொள்ளு!
கல்வியதை வளம்படுத்து!
காலமதைப் பயன்படுத்து!
விடாமுயற்சி வழிநடந்து
வீறுநடை போட்டுவிடு!
நன்மொழியாய் இதை நானும்
நாளும் உரைப்பேன் நண்பனே!

பழமொழிகள் - அர்த்தங்கள்

1. உப்பிட்டவரை உள்ளவும் நினை.
   நன்றி மறத்தல் கூடாது.
2. பேராசை பெரும் தரித்திரம்.
   ஆசை எல்லை கடந்தால் துன்பம் வரும்.
3. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
   மனசாட்சி உறுத்தும்.
4. சிறுதுளி பெருவெள்ளம்
   சேமிப்பின் முக்கியத்துவம்.

நற்சிந்தனை

தோன்றாத் துணையை என்றும் துதிப்போம்.
ஈன்றாளையும் அப்பனையும் மதிப்போம்
எல்லாம் சிவன் செயல் என்றிருப்போம்
ஆன்றோர் விதிப்படி நடப்போம்
அந்திசந்தி மந்திரத்தைப் படிப்போம்
நான், தான் எனும் இரண்டும் தடுப்போம்
நாதன் அடியினைக்கீழ் கிடப்போம்
வஞ்சம் பொறாமை நெஞ்சில் வையோம்
சஞ்சலத்தால் மிஞ்சி நாங்கள் நையோம்
கொஞ்சம் கொஞ்சமாய் மனத்தை
வெல்வோம்.

விடைதெரியுமா?

1) ஒரு தேனீக் கூட்டம் தேன் கூட்டில் உள்ளது. அதிலிருந்து பாதியின் வர்க்க மூலத்திற்குச் சமனான தேனீக்கள் ஒரு மல்லிகைத் தோட்டத்திற்குச் செல்கின்றன.முழுவதின் ஒன்பதில் எட்டுப் பங்கு தேனீக்கள் மாந்தோட்டத்திற்குச் தேன்தேடிப் பறந்தன. இவையெல்லாம் போக கூட்டில் ஓர் இராணித் தேனீயும் ஓர் ஆண் தேனீயும் மட்டுமே எஞ்சியிருந்தன. அந்தக் கூட்டில் மொத்தமாக வசிக்கும் தேனீக்களின் எண்ணிக்கை யாது?

2) இரண்டு இலக்க எண்ணை, மூன்று இலக்கங்கள் கொண்ட எண்ணால் பெருக்கி, நான்கு இலக்க எண்ணை விடையாகப் பெற வேண்டும். ஆனால் அந்தச் சமன் பாட்டில் ஒன்று முதல் ஒன்பது வரையான எல்லாஎண்களும் இடம் பெற்றிருக்க வேண்டும். உங்களால் முடியுமா பாருங்கள்!

3) ஒருவர் ஆறு நாள்கள் தொடர்ந்து நண்பர்களுக்கு விருந்து கொடுத்தார். ஒவ்வொரு நாளும் விருந்துண்ட நண்பர்களின் எண்ணிக்கை மூன்றால் கூடிக்கொண்டு சென்றது. ஆறு நாள்களிலும் மொத்தம் 105 பேருக்கு விருந்து படைக்கப்பட்டிருக்கும் என்றால் முதல்நாள் விருந்தில் கலந்து கொண்டோர் எண்ணிக்கை யாது?

4) ஒரு விஞ்ஞானி சில கிருமிகளை திரவத்துக்குள் வைத்து சோதனைகள் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது அக்கிருமிகள் ஒவ்வொரு இருபது நிமிட நேரத்திலும் இரட்டிப்பாகிக் கொண்டிருப்பதை அவதானித்தார். அந்த திரவத்திற்குள் காலை 8 மணிக்கு முதல்தடவையாக கிருமியை சேர்த்த அவர், மாலை 5 மணிக்கு திரவம் முழுவதும் கிருமிகளால் நிரம்பி விட்டதையும் அவதானித்தார். அப்படியானால் திரவத்தில் பாதியளவிற்கு கிருபி பெருகியிருப்பதை அவர் எப்போது அவதானித்திருப்பார்?

5) ஒரு மில்லியன் என்பது பத்து லட்சம். ஒரு பில்லியன் என்பது ஆயிரம் மில்லியன். அப்படியானால் ஒரு பில்லியனில் எத்தனை ஆயிரங்கள்வரும்?

(விடை XV ஆம் பக்கத்தில்)

பூக்களைத் தெரியுமா?

றை	தா	அ	ல்	லி	செ	ங்	க	ர்	நி
ன்	ம	ரை	டா	வா	ம்	ல	ம	நீ	த்
கொ	தி	ந்	ம	கை	றோ	சா	த	ழு	தி
தை	சா	ம	ல்	லி	ஜா	ரி	ம்	க	ய
த்	வ்	செ	ளி	ர	பி	பா	செ	ங்	க
ர	வ	ந்	தி	அ	ச்	ல்	ப	யா	ல்
செ	வ்	கா	ய	ரி	சி	ஆ	ம்	ணி	ந
லை	வ	ந்	தி	சூ	ட்	வ	யா	தி	ந்
ல்	மு	கை	மா	தே	டை	ப	ர	றி	ஞ்
ம	ல்	லி	க	ன	கா	ம்	ம்	கு	சி

ஆரம்பம் ↑ ↙ முடிவு

மேலே உள்ள கட்டங்களுக்குள் இருக்கும் பூக்களைக் கண்டுபிடிப்பதுதான் இந்த விளையாட்டு. ஆரம்பம் என குறிப்பிடும் இடத்திலிருந்து பக்கவாட்டிலோ அல்லது மேலோ அல்லது கீழோ (குறுக்கு அல்ல) நீங்கள் எழுத்துக் கூட்டிச் சென்றால் வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாகப் பூக்களின் பெயர்கள் வரும். முடிவுநிலை வரையுள்ள அனைத்துப் பூக்களின் பெயர்களையும் உங்களால் கண்டு பிடிக்க முடிகிறதா எனப் பார்ப்போமா?

(விடை XV ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



8 அறுக்கையற்ற வேலி

செங்கை ஆழியான்

கடற்கரையில் இருந்து பார்க்கும் போது வயல்வெளி தொடங்குமிடத்தில் ஓர் ஒதுக்காக அழகம்மாவின் குடிசை தெரியும். அவள் குடிசைக்கு முன் விரியும் கடற்கரையோரத்தில் மாநகரசபை, நகரத்தில் அள்ளுகின்ற குப்பைகூழங்களைக் கொட்டியிருந்தது. குடாக்கடலின் மனத்துடன் இந்தக் குப்பை கூழங்களின் நாற்றமும் சேர்ந்து அப்பிரதேசத்தில் வியாபித்திருக்கும். மாநகரசபை கொட்டி விடுகின்ற குப்பைகளுள் ஏதாவது பிரயோசனமான பொருள்கள் கிடைக்கலாமெனக்கருதிக் கொட்டிய குப்பைகளை மனிதரும் நாய்களும் வேறு கிளறி வைத்திருந்தார்கள்.

காகங்கள் ஏப்பொழுதும் அவ்விடத்தில் நிரம்பியிருக்கும். நகரப் புறமிருந்து சைக்கிள்களில் வருபவர்கள், எவருக்குந் தெரியாமல் உரப்பைகளில் கட்டிவரும் கழிவுகளை இவ்விடத்தில் எறிந்து விடுவதை அழகம்மா பலதடவைகள் கண்டிருக்கிறாள். அப்பைகளுள் செத்துப்போன கோழிகள், வளர்ப்பு விலங்குகள் இருக்கும். மண்ணில் புதைத்து விடப் பஞ்சிடப்பட்டு கடற்கரையில் வீசி விடுகின்ற பொறுப்பற்ற தன்மையை அவள் வெறுத்தாள். யாரிடம் சொல்வது?

சொல்லப்போய் பட்ட அவலம் ஒன்று அவளுக்கு நினைவு வருகிறது.

ஒரு நாள் அதிகாலை அவள் படலையைத் திறந்தபோது தரகியர் செல்லையா செத்தகோழி ஒன்றினைக் காவிவந்து அவள் குடிசைக்கு முன்னுள்ள வீதிக்கானில் வீசுவதைக் கண்டாள்.

"ஏன் அண்ணை இப்படிச் செய்யிறியள்? நாங்க இதில இருக்கிறதில்லையே?"

அவள் தன்னை அறியாமல் அப்படிக் கேட்டுவிட்டாள்.

தரகியர் செல்லையாவிற்குக் கோபம் மூக்கில் பொறிதட்டியது. அந்தப்பிரதேசத்தில் அவன் ஒரு முக்கியமான புள்ளியாகக் கருதப்படுவதாக அவனுக்கு ஓர் எண்ணம். சந்தையில் மீன்குத்தகை அவனுக்கு இருந்தது. மீனவர் பிடித்து வரும் மீன்களைச் சந்தையில் வியாபாரிகளுக்கு கூறி விற்பது அவன்தான். கூறுபிடி, விற்ற பிடியென வரும் வருமானமே சில நூறாகும். சந்தையில் அவனுக்கு ஒரு செல்வாக்கிருந்தது.

அவனைப் பார்த்து 'ஒண்டுக்கும் வக்கத்த' அழகம்மா இப்படிக் கேட்பதா?

"போடி உள்ள..." என்று துசணை வார்த்தைகளை உச்சரித்த தரகியர், "உனக்கெடி என்ர பிடிக்காது. லுசியன்ர பிடிக்கும்..." என்றான்.

அழகம்மா விக்கித்துப் போய் விட்டாள். கோட்டைச் ஷெல் அடிக்கு அவள் கணவன் கார்த்தியன் பலியாகிப் போனபின்னர் அவளுக்கு தெரிந்தும் தெரியாமலும் உதவப் பலர் முன்வந்தமைக்கு அவள் கட்டுக்குலையாத உடலில் இருந்த கவர்ச்சிதான் காரணம் என்பதை அவள் விரைவில் தெரிந்து கொண்டாள். அவளுக்கு உதவியவர்கள் அவளிடம் உதவிக்காக கூலியைக் கேட்டபோது அவளால் விம்மி விம்மி அழத்தான் முடிந்தது. ஆண் துணையில்லாமல் இருப்பதில் உள்ள கடினம் புரிந்தது.

தரகியர் செல்லையா மாலை நேரங்களில் அடிக்கடி அவள் குடிசைக்கு வந்தான். ஆரம்பத்தில் கௌரவமாகப் பேசியவன் வார்த்தைகள் முறைதவறிய போது "அண்ணை... இனிமேல் இங்கை வராதையுங்கோ.."என்று பக்குவமாகக் கத்தரித்து விட்டாள். அந்த ஏமாற்றத்தைத் தரகியரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தளதளவென்ற வறுமையிலும் செழிப்பான அவள் அழகு அவனுக்குத் தூக்கத்தைக் கெடுத்தது. ஏக்கத்தைக் கொடுத்தது.

கார்த்தியன் அவமாக மரணித்த பின்னர் பிரதிபலன் எதிர்பார்க்காது அவளுக்கு உதவ முன் வந்தவர்கள் இருவர். ஒருவர் அக்கிராமத்தின் கிராமசேவையாளர் கணேசநாதன். மற்றவன் லுசியன். லுசியனுக்கு ஒரு விதத்தில் இக்குடும்பத்திற்கு உதவ வேண்டிய கடமையுமிருந்தது. கார்த்தியன் அவன் வள்ளத்தில்தான் வேலை செய்தான்.

தரகியர் செல்லையாவின் ஏமாற்றந்தந்த விளைவால் வெளிப்பட்ட வார்த்தைகளை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உள்ளே படலையைச் சார்த்தியபடி மறைந்து விட்டாள்.

தரகியர் செல்லையா என்ன நினைத்தானோ, வீதிக்கானில் வீசியிருந்த செத்த கோழியைக் கால்களில் பற்றித் தூக்கிக் கடற்கரைப் பக்கமாக வீசிவிட்டுக் கள்ளுத் தவறணை நோக்கி நடந்தான்.

இவை நடந்து சில மாதங்களாகின்றன. அழகம்மாவின் வாழ்க்கையில் பிரச்சினைகள் அதிகரிக்கத் தொடங்கின. விதானையார் கணேசநாதன் உதவியால் கிடைக்கின்ற நிவாரண உதவியும், லுசியன் செய்கின்ற உதவிகளும் பிள்ளைகள் இரண்டையும் பட்டினி போடாமல் காக்க உதவின. பிள்ளைகள் தக்க துணிமணியில்லாமல் திரிகிறார்கள். வீட்டுக்கூரை, மேய்ச்சலை எதிர்பார்த்து வானத்தை உள்ளிருந்து பார்க்க விட்டிருக்கிறது.

படலையிலிருந்து பார்க்கும போது கடற்கரைக்கு அப்பால் அலை எறியாது கடல் அடங்கிக்கிக் கிடக்கின்றது. முன்பென்றால் அக்குடாக் கடலில் வள்ளங்களும் வீச்சு வலையெறிவோரும் நிறைந்திருப்பார்கள். இப்பொழுது எவருமில்லை. கடலில் விளைந்து கிடப்பதை அறுவடை செய்ய எவருக்கும் துணிச்சல் இல்லை.

அவள் தன் கணவனை எண்ணிக் கொண்டாள். என்ன மழையானாலும் காற்றானாலும் துணிந்து வள்ளத்தைக் கடலிற்குள் இறக்கும் ஓர்ம முள்ள மீனவன் அவன். கடைசிவரை தொழிலாளியாகவே வாழ்ந்துசென்று விட்டான். அவன் இலட்சியக் கனவுகளில் ஒரு வள்ளமும் வலைகளும் நிறைந்திருந்தன. 'ஒருநாள் தான் அவற்றை அடைவேன்' என அவன் நம்பியிருந்தான். அதற்காகச் சிறுகச் சிறுக மிச்சம் பிடித்தும் வந்தான்.

காலத்தை யார் தடுப்பது? அதற்குக் காரணம்தான் தேவை. கோட்டைப் பக்கமிருந்து வந்த ஷெல் கணப்பொழுதில் அவனையும் அவர்களின் கனவுகளையும் அள்ளிச் சென்று விட்டது. அவனுடைய சேமிப்புக்கள் அக்குடும்பத்தின் பசிக்குதவிக் கரைந்து போயின.

இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சு வெடிக்கும் துயரம் அழுத்துகின்றது.

அவள் உள்ளே செல்லத் திரும்பிய போது தூரத்தில் லுசியன் வருவது தெரிந்தது. அவன் தன் குடிசையை நோக்கித்தான் வருகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. அவனுடைய உதவிகளை அவளால் தட்டி விட முடியவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக அவன் இப்படிச் சில வேளைகளில் வருவதும் படலையைத் தாண்டாது வெளியில் நின்றபடி "கார்த்தியன்" என அழைத்து அவளிடம் தான் வாங்கி வந்த பொருள்களை வழங்கிவிட்டுச்சென்று விடுவதும் வழக்கம். சில வேளைகளில் அவனுடைய மகன் அன்ரனி அவற்றினைக் கொண்டு வந்து தருவான்.

"அப்பா கொடுக்கச் சொன்னவர்.."

அவளால் அவன் உதவிகளை மறுக்க முடியவில்லை. ஏற்காது விடவும் முடியவில்லை. அவன் குடும்பத்திற்கு உதவாவிடில் அவர்கள் இருந்தவிடத்தில் புல் முளைத்திருக்குமெனச் சிலவேளைகளில் அவள் எண்ணமிடுவாள்.

அவன் அவள் குடிசையை நோக்கி வந்தான். அவன் வலக்கரத்தில் ஒரு மீன் தொங்கியது. இடது கரத்தில் சொப்பிங்பை ஒன்றில் அரிசி, தேங்காய். இன்றைக்கு வடிவாகக் கேட்டு விட வேண்டும். இன்னமும் பொறுக்க முடியாது.

"இந்தா அழகம்மா..." என்று அவன் அவளிடம் தான் கொண்டு வந்தவற்றை நீட்டினான். அவள் கை நீட்டி அவற்றை வாங்கிக் கொள்ளவில்லை. மனம் சங்கடப்பட்டது. தயங்கி நின்றாள்... எச்சிலை மென்று விழுங்கியவாறு, "ஒருக்கா உள்ள வந்திட்டு போங்கோ..." என்றாள். உடல் வியர்த்து விட்டது. உடலில் மெல்லிய நடுக்கம். லுசியனுக்கும் அவள் அழைப்பு கலக்கத்தைக் கொடுத்தது. அதைக் காட்டிக்கொள்ளாமல் உள்ளே வந்தான். குடிசையின் குந்தில் அமர்ந்து கொண்டான். அதற்குள் மண்குந்தில் ஓர் உரப்பையை அவள் விரித்து விட்டாள். உள்ளுக்கு வந்த பின்னர் தான் அவள் வறுமையின் அவலம் அவனுக்குப் புரிந்தது. அவளுடைய இரு பிள்ளைகளும் உடலில் மண்ணேறி மூலையில் நின்றிருந்தன. கிழிசல் காற்சட்டையுடன் மூத்தவனும் ஜங்கியுடன் சிறுமியும் காட்சி தந்தனர்.

அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

"எனக்கு ஓர் உதவி செய்ய வேணும்.." என்றாள் அவள் தலையைக் குனிந்தபடி.

"சொல்லு..."

"உங்கட உதவியாலதான் இரண்டு வரியமாக நாங்க சீவிக்கிறம். அடுப்பில நெருப்பெரிவது உங்கட உதவியாலதான். ஏன் எங்களுக்கு உதவிறியள்? இந்தப் பட்டகடனை நான் எப்படித் தீர்க்கப் போறன்? " என்றபடி அழகம்மா விம்மத் தொடங்கினாள்.

அவன் அவளைப் பார்த்தபடி இருந்தான்.

"கார்த்தியனுக்காகவும் அவன்ர பிள்ளைகளுக்குமாகத்தான் நான் உதவுறன் அழகம்மா. வேறொன்றிற்காகவுமில்லை."

"எங்களுக்கு நீங்க உதவுறதால ஊரில நாலுபேர் எப்படியெல்லாம் நாக்கு வழிக்கினம்.. எங்களால உங்களுக்கு அவமானம்.."

"அந்த நாலுபேரைப்பற்றி எனக்கு அக்கறையில்லை, அழகம்மா. மனிதன் பிறந்தது மற்றவர்களுக்கு உதவுவதற்குத்தான். அப்படித்தான் நான் நினைக்கிறன். என்ர வீட்டில உலை கொதிக்க இங்க கார்த்தியன் குடும்பம் [illegible] எந்த முடியவில்லை. [illegible] தெரியுமா, அழகம்மா... ஆறு வரியத்துக்கு முன்னம் நான் ஒன்பது மாதங்கள் படுத்த படுக்கையாகவிருந்தன். அப்ப கடலுக்குச் சென்று மீன்பிடித்து விற்று எனக்கும் என் குடும்பத்திற்கும் சோறு போட்டவன் கார்த்தியன். என்ர வள்ளம் தான்..என்ர வலையள் தான்..ஆனா.." லுசியன் தன் விழிகளைத் துடைத்துக் கொண்டான்.

"அவன் மிகப் பெரிய மனிதன்.. அவன்ர மனசு எவருக்கும் வராது... அவமாகச் செத்துப் போனான். நான் நினைக்கிறன் நல்லவங்கள் கனகாலம் வாழ்வதில்லைப் போல.."

அவ்விடத்தில் நீண்ட மௌனம் நிலவியது.

"அவற்றை விடு. ஏதோ உதவி வேணுமென்றாயே?"

அவள் தயக்த்துடன் கேட்டாள். "நான் சந்தையில மீன் விக்கப் போறன். அதுக்கு உதவி செய்யுங்கோ."

அவன் சற்று நேரம் எதுவும் பேசாதிருந்தான். அவள் கோரிக்கை நியாயமாக்கப்பட்டது. அவள் குடும்பத்திற்குப் பலதேவைகள் இருக்கின்றன.

"இப்பத்த சூழ்நிலையில சந்தையில மீனா விக்க முடியும், அழகம்மா? உன்னால அது முடியாது... அந்தத் திறமை உனக்கில்லை. உனக்காக வேண்டுமென்றால் மரியாத்தையோட சுடலைச் சந்தைக்குப் போய் வா. முதலில சுழிவு நெளிவுகளை அறியப் பார்.. நான் மரியாத்தையிடம் சொல்லி விடுறன்."

அழகம்மா அவசரமாக குறிக்கிட்டாள்.

"நான் மரியாத்தையுடன் கதைச்சிட்டன். அவதான் உங்களிட்ட கேட்கச் சொன்னவா. விற்கவிற்க ஏமாத்தாமல் தந்திடுவன்.." தலையை ஆட்டி ஆர்வத்துடன் அழகம்மா பேசியது அவனுக்குச் சிறுபிள்ளையொன்றினை நினைவு படுத்தியது. வாய்திறந்து சிரித்தான். அவன் சிரிப்பு அவளுக்கு பயத்தை தந்தது.

"ஏன் சிரிக்கிறியள்?"

"உன்ர பேச்சு.. உன்ன நம்ப மாட்டனா?" அவன் குடிசையை அண்ணார்ந்து பார்த்தான். "முதலில இந்தக் குடிசையை மேயப்பார்...."

"விதானையார் சொன்னவர்.... யாரோ நிறுவனம் ஒன்று ஓலை கொடுக்குதாம்.. என்ர குடிசையையும் பதிஞ்சிருக்கிறாராம். தருவினமாம்..."

"அப்ப சரி தராட்டில் நான் ஓலை பறிச்சு விடுறன்.."

"வேண்டாம்... வேண்டாம்.. உங்களைக் கஷ்டப்படுத்தமாட்டேன்."

இருவரிடையேயும் பேச்சு தடைப்பட்டது.

"அம்மா அடுப்பிலே தண்ணி கொதிக்குது.." என்றான் சிறுவன்.

"தேத்தண்ணி குடிப்பியளா? வெறும் தேத்தண்ணிதான்.. தொட்டுக் கொண்டுதான்.." அவள் பரிதாபமாக அவனைப் பார்த்தாள். வேண்டாம் என்றால் அவள் வாடிவிடுவாள் போலப்பட்டது.

"சரி.." என்றான் அமைதியாக.

அவள் குடிசைக்குள் அவசரமாக நுழையப் படலையைத் திறந்து கொண்டு மரியாத்தை உள்ளே வருவது தெரிந்தது. அவன் குந்தில அமர்ந்திருப்பதைக் கண்டதும் அவள் முகத்தில் வியப்புத் தெரிந்தது.

அவள் பார்வையில் தெறித்த வியப்பில் இருந்து அவனை அவள் அங்கு எதிர்பார்க்கவில்லைப் போலப் பட்டது. அவனை அவள் ஒருபொழுதும் குடிசைக் குந்தில் எதிர்பார்க்கவில்லை. படலையோடு தன்உறவை நிறுத்திக் கொண்டவன். இன்று உள்ளே வந்திருக்கின்றான்.

"லுசியனா?"

"வேறை யார், மரியாத்தை. நான் தான்."

"அதிசயம்தான்.. மழை வரப் போகுது..."

"ஓமோம்.... கெதியாகக் குடிசையை மேயனை.." என்று அவன் சிரித்தான்.

"வேலியையும் அடைக்க வேணுமோ?" மரியாத்தைக் கிழவியின் வக்கனை அவனுக்கு புரியாமலில்லை. அவனுக்கு சிரிப்பு வந்தது.

"பாயிற மாடெண்டால் வேலிய டைச்சுப் புண்ணியமில்லையனை. தோட்டத்திற்குக் காவலா நீ இருக்கும்போது வேலியென்னத்திற்கு..?"

மரியாத்தை திருப்தியுடன் சிரித்தாள். பேணிகளில் தேநீருடன் அழகம்மா வந்தாள். அவனிடமும் மரியாத்தையிடமும் கரங்களிலிருந்த பேணிகளை வழங்கிவிட்டு உள்ளே சென்று சீனிப் போத்தலுடன் வந்தாள். அவர்கள் முன் வைத்தாள். அவர்கள் வலக்கரங்களில் சிறிது சீனிளைக் கொட்டிக் கொண்டனர்.

"உவன் தரிகியர் செல்லன் விசர்க் கதை கதைக்கிறான்.."என்றாள் மரியாத்தை.

"அவன்ர கதையை விடு.. அவனுக்கு குடிச்சால் பேசுறதெது பேசாதது எதுவெண்டு தெரியாது. மூதேசிக்கு ஒரு உதை கொடுத்தால் தாங்கிக் கொள்ளாது. வாய் மட்டும் வலு பெரிசு. எனக்கு வேண்டாம் அவன்ர கதை.." அவன் பேணியைக் குந்தில் வைத்தான். ஏதோ நினைவு வந்தவன் போல மீண்டும் பேணியை எடுத்து எஞ்சிய அடி மண்டியை முற்றத்தில் ஒதுக்காக வீசிவிட்டு வைத்தான்.

"வாறன் ஆச்சி. வாறன் அழகம்மா.."

"இண்டையக் காசை வாங்கிக் கொண்டு போவன்.."

"என்னட்டயே தாறனி.. வீட்டில நோசம்மாட்ட வழக்கம் போலக் கொடு.."

"எவ்வளவுவெண்டு கேக்கவில்லை..."

"முந்நூறு வந்திருக்கும்.."

மரியாத்தையின் விழிகளில் வியப்பு.

"என்னென்டு சரியாகச் சொல்லுகிறாய்? ஆரையும் விட்டுப் பார்த்தனியே?"

லுசியன் சிரித்தான்.

"பிடிக்கிற மீனின் பெறுமதி தெரியாத கரையானே நான் ..? வாறன்."

அவன் படலையைத் திறந்தபடி வெளியில் வந்தான். மனதில் இனந்தெரியாத மகிழ்ச்சி நிறைந்திருப்பதாகப்பட்டது. அழகம்மாவின் பேச்சுக்கள் காதில் நர்த்தனமிட்டன. மரியாத்தைக் கிழவியின் வக்கனைப் பேச்சின் அர்த்தம் புரிந்தது. அழகம்மாவிற்கு புரிந்திருக்குமோ?

இரவு கடற்கரையை விரைவாக மூடிக்கவிந்தது. அவன் சந்தையை நெருங்கியபோது, துரையப்பரின் பேரன் ராகுலன் சண்டையில் காயம்பட்ட செய்தி தெரிந்தது. கடும் காயத்துடன் ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாகவும் அறிந்து கொண்டான்.

மனம் ஒரு கணம் துணுக்கிட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌன மொழி
உங்கள் கவிதைகள்...

வசப்படுத்தியவன்,
தாயமையைத் தந்தவன்;
தாலிகட்ட மறுத்தான்
கருவைச் சிதையென்று
கைவிட்டுச் சென்றானே!
இன்று அப்பாவைக் கேட்கிறது
என் மகவு
என்செய்வேன் இறைவா?

- இராஜகிருபன் -
அல்வாய்

அச்சத்தின் சுவடுகள்
அகந்தன்னில்
மறையும் மட்டில்.....
எச்சத்தம் கேட்டாலும்
வான் நோக்கும்;
முடிவில்லா.....
முச்சந்தி வாழ்க்கை!

-க.நாகேஸ்வரா -
சண்டிலிப்பாய்.

யாரிடம் அம்மா உன்
கையேந்தல்கள்?
மகனையேனும் இறக்கிவிடு
அவனாவது 'வளரட்டும்'

- சைதன்யன் -

தாகம் பலதாய்
தவிக்கும் கரங்கள்
தாயின் கரத்தில்
தனையனின் தாகம்
தீரும் தாயே
திசைகள் வெளிக்கும்.!

- பூநகர்ப்பூ-

மரபுகளில் ஏறி,
மயக்கத்தில் சாய்ந்து,
கனவுகள் வளைக்க
கைகளை ஏந்தி,
இன்னும் எத்தனை நாள்தான்
அண்ணாந்திருப்பது?
அம்மா!
என்னை இறக்கிவிடு!!

- சௌஜன்யா -

தாயவளே!
தரணியெல்லாம் கையேந்தி
தார்மீகப் போர் நடத்தும்
தாயவளின் ஆட்சியிலே.....
நின்பசியும் உன்சேய் பசியும்
எந்நாளும் தீராது!

-த.புருசு-
மருதங்கேணி.

வானம் பார்த்தாலும்
வளமான பூமி
அடிமண் ஈரமுடன்
கடின உழைப்பும்
கலந்த போது.....
வாழ்வும் பசுமையானது
இடையில் நேர்ந்த
இடப்பெயர்வுடன்
இடரும் இழப்பும்
தொடர்ந்தாலும்.....
நீதி நிலைபெற
நிமிர்தல் அவசியம்!

- நாகராசா -
நுணாவில்.

பள்ளி சென்ற
மகனைக் காணவில்லை
தேடிச் சென்ற
கணவனைக் காணவில்லை
கோவில் சென்று வேண்டிட
பாதுகாப்பு எதுவுமில்லை
சின்னக் குழந்தையிவன்
ஒன்றும் புரியவில்லை
புரியும்போதிவன் வீறுகொண்டு
எழுவான் என்பதில் ஐயமில்லை!

-கு.விஜயகுமார்-
சாவகச்சேரி.

தொலைந்து போன
உறவுகளை
மீண்டும் தரும்படி
தவமிருக்கிறீர்களா.....?
தொடர்ந்து வரும்
துன்பங்களை
மீளப் பெறும்படி
வரம் கேட்கின்றீர்களா....?
எதை யாசிக்கிறீர்கள்.....?
இறைவனிடம்.....!

-சரோ.தம்பித்துரை-
யாழ்ப்பாணம்.

உதிலை கைக்குழந்தையோட
கையேந்தி இருக்கிறது
ஆர் தெரியுமே.....?
எனக்குத் தெரிஞ்ச பொடிச்சிதான்.
படிப்புப் படிப்பெண்டு திரிஞ்சு
பிடிச்சாளாம் ஒரு கா(த)லனை!
முடிஞ்சுதாம் மூண்டு மாசம்
எடுத்தாளாம் இவள் 'சத்தி'
எடுத்தானாம் அவன் 'ஏறோப்பிளேன்'
பிறகென்ன..... இப்ப
படிக்கிற புத்தகம் இருக்கிற மடியிலே
பால் குடிக்கிற குழந்தை.....!
ம்..... படிச்சுப் படிச்சுப் அவள் பெட்டைக்கு
அப்பவும் சொன்னனான்.....
ஏன்... இடிச்சு இடிச்சு இப்பவும் சொல்லுறன்
எடி பிள்ளையள்,
படிக்கிற பருவத்திலை வேறை 'எதையும்'
பரிசோதனையாகக் கூட
'படிக்க - முடிக்க' நினைக்காதையுங்கோ.....
ஏன்னென்டால்..... அது
முடிக்கப் போறது படிப்பை மட்டுமில்லை
உங்கட வாழ்கையையும்தான்.....!

- கலைநேசன்சிவம் -

அடிமைப் பெண் என்றால் அல்லல்தான் எந்நாளும்
விடிவெங்கே இம்மண்ணில் இவளுக்கு ~ துடிதுடித்து
கண்ணான குழந்தையும் கடும்பசியால் ஓலமிட
எந் நாளும் இவள் வாழ்வில் இடி!

- சேரலாதன் -

எண்ணற்ற பிள்ளைகளை
எங்கெங்கோ புதையவிட்டு
ஏங்கித் தவிக்கும்
என்னருமைத் தாயே!
உன்கை பத்திரமாய் பொத்தி
வைத்திருக்கும்
உன்னத மகளையாவது
உலகினில் தன்மானத்துடன்
உலா வர விடுவாயா?
தானைத் தலைவனின் வழியில்
சேனைப் படையணியில்
சேர்த்துவிடு - பூகம்பமொன்றை
பெற்றெடுத்த மங்கையென்று
பெருமிதம் கொள்வாய்!

- சீ.ஏ.சிறீகரன் -
ஆழியவளை.

கையேந்தினால்
சலுகை கிடைக்கும்
கையில் ஏந்தினால்
உரிமை கிடைக்கும்!

-கதா -

வயிற்றுக்கு சோறிட வழி சமைத்தனர்
வாழ்விடம் திரும்ப வழி கூறினர்- ஆனால்
வாழ்வில் இழந்தவை திரும்பவில்லையே!
இடிமேல் இடிவிழுந்தும்
இடிதாங்கியாக இருந்த தமிழ் அன்னை
பொறுமையிழந்து பசசை மண்ணுடன்
இருகரம் ஏந்தி
பூமா தேவியிடம் சமாதான வரம்
கேட்டு நிற்கும் அவல நிலை காண்பீர்..!

- சற்குணராஜா ஜெயசலா -

அதோ பார்
குழந்தாய்...
உன் தந்தையும் அவர்
தோழர்களும்
வீண்மீன்களாக,
'வீதைக்கப்பட்டிருக்கிறார்கள்'
தேசத்தின் விடியலுக்காய்!

- எழில் -

தமிழ்த்தாயே!
தவித்தது போதும், எழு!
உன் மடியிலிருக்கும் - அந்த
வித்திற்கு- வீரமும் விவேகமும் சேர்
தாய்ப் பாலென்னும் நீருற்று!
அது தழைத்தெழும்போது - உன்
துயரங்கள் தூளாகும்!

- அனலையூர்ச் சேந்தன் -

ஆட்டுவிப்போர் அரசியல் வாதிகள்
அதில் ஆடுவோர் சிங்களச் சிப்பாய்கள்...
இதில் ஆட்டமிழப்போர் தமிழ் மக்கள்
யாரறிவார் இக் கொடுமையை?

-வி.நிசாந்தன்-
புருத்தித்துறை.

வானத்தைச் சாட்சி வைத்து
பூமியைச் சாட்சி வைத்து
கைப்பிடித்த கண்ணாளன்
கடைத் தெரு சென்றார்
மீளவேயில்லை மீண்டும்.....
பட்டியலில் பேர் மட்டும்.....
எஞ்சியிருப்பது - இந்த
கைக்குழந்தைதான்
விசாரணைக் கமிஷன் முன்
இந்தச் சாட்சியம்
எம் மாத்திரம்.....?

- அ.பௌநந்தி -
துன்னையூர்.

மௌனமொழி - 36

உங்கள் கவிதைக்கான ராகங்கள் ஓவியம் இது.
இதனை வரைந்தவர் மெமோரியல் ரட்டி.

இறைவா!
மலைபோல் விளங்கும் - என்
தலைவனை இழந்தேன் - இன்று
சிலைபோல் விளங்கும் - என்
நிலைதனைப் பாராய்
குறையாத எம் குடும்ப வாழ்வில்
முளையாக இவன் கருக் கொண்ட போது
வலை போட்ட செம்மணிக் காலனிடம்
தொலைந்து போன அப்பாவைக்
கேட்கும் இப்பாப்பாவுக்கு
ஆறுதல் சொல்ல என்ன வழி?

-மு.வே.அன்பழகன்
மட்டுவில் தெற்கு.

தொலைவுகளைத் தேடும்
முயற்சியில்
மகஜர்களும் மனுக்களும்தான்
கருத்தரிக்கின்றன!
அப்பாவும் அண்ணனும்
அன்பான மாமனும்
அணுகாந்து பார்த்தாலும் - இனி
அகப்படமாட்டார்கள்

- மெமோரியல் ரட்டி -

சத்தியமாய்ச் சொல்கிறேன்
சமாதானப் போர் இங்கே
சமீபத்தில் முடிந்திடுமாம்
சாப்பிடலாம் பொறுத்திருங்கள்

-வே.மயூரன்-
மருதங்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடுப்பாட்டம் அன்றும் இன்றும்

-கோபி-

18

ஆறறிவு ஜீவன்களே அடிக்கடி காணாமற் போகும் இந்த நாட்டிலே ஆறேழு சொற்கள் காணாமற்போவதால் அப்படி என்னதான் ஆகிவிடப் போகிறது? என்ன புரியவில்லையா? கடந்த வாரம் சஞ்சீவியில் துடுப்பாட்டத் தொடரின் கடைசி வசனங்கள் காணாமற் போனதைத்தான் குறிப்பிட்டேன். இதோ அந்தக் காணாமற்போன வரிகள்:-

"ஒரு நாள் போட்டிகளிலே இதுவரை மொத்தம்12ஹாட்ரிக்குகள மாத்திரமே பெறப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியா(2), இந்தியா(2), நியூசிலாந்து(1), சிம்பாப்வே (1), பாகிஸ்தான் (6) ஆகிய நாட்டவர்களே ஒரு நாள் போட்டிகளில் ஹாட்ரிக் பெற்றவர்கள். பாகிஸ்தானிய அணித் தலைவர் வசீம் அக்ரம் ரெஸ்ற்களிலும் ஒரு நாள் போட்டிகளிலும் தலா இரண்டு ஹாட்ரிக்களைப் பெற்றுள்ளார்.

இவ்வாரம் சில உலகக் கிண்ணச் சாதனைகளைப் பற்றிப் பார்த்தோம். அடுத்த வாரம் சில நினைவலைகளை மீட்டிப் பார்ப்போமே"

அவ்வகையில் இவ்வாரம் உலகக் கிண்ண நினைவுகளில் சிலவற்றை அசைபோடுவோம்.

உலகக் கிண்ண நினைவலைகள்

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஏழாவது உலகக் கிண்ணத் தொடரின் A பிரிவுப் போட்டி ஒன்றில் இந்திய அணி சிம்பாப்வே அணியிடம் வெறும் மூன்று ஓட்டங்களால் தோல்வி அடைந்தமை தெரிந்ததே. வெற்றிக்கு மிகச் சொற்ப ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் இந்தியா அடுத்தடுத்து மூன்று இலக்குகளை இழந்ததால் தோல்வி அடைய நேரிட்டது.

இதற்கு நேர்மாறானதொரு சம்பவம் முதலாவது உலகக் கிண்ணத் தொடரில் நடைபெற்றுள்ளது. மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிராக பேர்மிங்ஹாமில் நடைபெற்ற அந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் மாஜிட் கான் (60), வசீம் ராஜா (58), முஷ்ராக் மொகமட் (55) ஆகியோரின் சிறந்த ஆட்டத்தால் 60 பந்துப் பரிமாற்றங்களில் 266 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நவாஸின் பந்து வீச்சின் முன் திணறியது. 203 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் ஒன்பதாவது இலக்கும் வீழ்த்தப்பட்டது. களத்தில் ஆடிக்கொண்டிருந்த முரே (Murray) உடன் இறுதி ஆட்டக்காரரான றொபேட்ஸ் இணைந்து கொண்டார்.

அதன் பின் நடந்தது ஒரு பெரும் அதிசயம். முரேயும் (61), றொபேட்ஸும் (24) நிதானமாக ஆடி இரண்டு பந்து வீச்சுக்கள் எஞ்சியிருக்கையில் வெற்றிக்கனியைப் பறித்தனர். ஓர் இறுதித் துடுப்பாளர் இத்தனை சாதுரியமாக ஆடி அணியின் வெற்றிக்கு உதவுவது என்பது அபூர்வமானதே.

முன்வரிசை துடுப்பாளர்கள் சிறப்பாக ஆடும் போது பின்வரிசைத் துடுப்பாளர்கள் காற்கவசம் அணிய வேண்டிய தேவை கூட ஏற்படுவதில்லை. அண்மையில் சச்சின் டெண்டுல்கர் - ராகுல்திராவிட் இணை கென்யாவுக்கு எதிராக அற்புதமாக ஆடியமை இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

தன் தந்தையின் மரணச்சடங்குகளில் கலந்து கொண்டு விட்டு உடனடியாக இங்கிலாந்து திரும்பிய டெண்டுல்கர் 101 பந்து வீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 140 ஓட்டங்களை விளாசித் தள்ளியது அருமையிலும் அருமை. ஆனால் இதைவிட அருமையான ஆட்டங்களையும் துடுப்பாட்ட உலகம் கண்டிருக்கிறது. அவற்றிலொன்று நான்காவது உலகக்கிண்ணத் தொடரில் ரிச்சட்ஸ ஆடிய பேயாட்டம்.

ரிச்சட்ஸின் அதிவேகம்

நான்காவது உலகக்கிண்ணத் தொடரிலே கராச்சியில் இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே நடந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாவது இலக்கினை இழந்தது. உள்ளே நுழைந்தார் விவியன் அலெக்ஸாண்டர் ரிச்சட்ஸ்.

ரிச்சட்ஸ் முதலில் அமைதியாகத் துடுப்பெடுத்தாடத் தொடங்கினார். பின்னர் வேகம் அதிகரிக்கத் தொடங்கியது. 62பந்து வீச்சுக்களில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்த ரிச்சட்ஸ் 99 பந்து வீச்சுக்களில் சதத்தையும் எட்டினார். எட்டியதுதான் தாமதம் விளாசவும் தொடங்கினார். அடுத்த 50 ஓட்டங்களைப் பூர்த்தி செய்ய ரிச்சட்ஸுக்கு13 பந்துவீச்சுக்களே போதுமாயிருந்தன. அந்த நேரத்தில் ரிச்சட்ஸிடம் வகையாக மாட்டிக் கொண்டார் ரவி ரட்ணாயக்க. ரட்ணாயக்காவின் இரு பந்துப் பரிமாற்றங்களில் ஐந்து ஆறுகள், மூன்று நான்குகள் உட்பட 47 ஓட்டங்கள் குவிந்தன.

ரிச்சட்ஸ் தொடர்ந்தும் வேகமாகவே ஆடினார். 125 பந்துகளில் 181 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரது ஓட்ட எண்ணிக்கையுள் 16 நான்குகளும், 7ஆறுகளும் அடங்கியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த ஆட்டத்தில் டெஸ்மண்ட் ஹெயின்ஸும் சதம் அடித்தார். மேற்கிந்தியத்தீவுகள் அணி நான்கு இலக்குகளை இழந்து 360 ஓட்டங்களைக் குவித்தது. இலங்கை அணி 119ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. விவியன் ரிச்சட்ஸ் இலங்கைக் கெதிராகச் சாதித்த இந்த உலகக் கிண்ணச் சாதனையைத் தென்னாபிரிக்காவின் கொ கேர்ஸ்ரன் கடந்த உலகக் கிண்ணத் தொடரிலே UAE அணிக்கெதிரான ஆட்டத்தில் ஆட்டமிழக்காமற் பெற்ற 188 ஓட்டங்கள் முறியடித்து விட்டன. (இதுவரை பெறப்பட்ட உலகக் கிண்ணச் சதங்களைப் பற்றிய விவரம் அட்டவணையில்)

ரிச்சட்ஸ் ஓர் அற்புதமான துடுப்பாளர். அவர் 181 ஓட்டங்களைக் குவிப்பதென்பது அத்தனை பெரிய அதிசயமல்ல. ஆனால் மூன்றாவது உலகக் கிண்ணத் தொடரிலே கபிலும் இம்ரானும் பெற்ற சதங்கள் அதிசயமானவை; அற்புதமானவை.

கபிலும் இம்ரானும்

கபிலும் இம்ரானும் சகல துறை வல்லுநர்கள். அவர்களிருவரும் ஒரு நாள் போட்டிகளிலே தலா ஒவ்வொரு சதங்களை மட்டுமே பெற்றுள்ளனர். அந்த இரு சதங்களும் அணிக்கு மிகத் தேவையான பொழுதில் பெறப்பட்டவை.

கவாஸ்கர் (00), ஸ்ரீகாந்த் (00), அமர்நாத்(05), பட்டில் (01), சர்மா(09) ஆகிய ஐந்து துடுப்பாளர்களை இந்திய அணி இழந்திருந்த நிலையில் களமிறங்கிய கபில் ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்களைக் குவித்தது [illegible] தொன்று. சிம்பாப்வேக்கு எதிரான அந்த ஆட்டத்தில் 100 பந்து வீச்சுக்களில் சதத்தைப் பூர்த்தி செய்த கபில் அடுத்த 38 பந்து வீச்சுக்களில் மேலும் 75 ஓட்டங்களைக் குவித்தார். அந்த 175 இனுள் 6ஆறுகளும், 17 நான்குகளும் அடங்கியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்கு ஏற்பட்டதை ஒத்தவொரு இக்கட்டான சூழ்நிலையில் பாகிஸ்தான் தடுமாறிய போதுதான் இம்ரான் அற்புதமானதொரு சதத்

இன்ஸமாம்

தைப் பெற்றார். 1983 இல் இலங்கைக்கெதிரான ஆட்டத்தில் மொஸின் கான் (03), அக்ரர் (16), அப்பாஸ்(15), மியன்டாட்(07), பாஹி(00) ஆகியோரைப் பாகிஸ்தான் அணி 43 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இழந்திருந்தது.

இம்ரான் களத்தில் ஷாஹிட்டுடன் இணைந்து கொண்டார். இருவரும் ஆறாவது இலக்குக்கான இணைப்பாட்டமாக 144 ஓட்டங்களைப் பெற்றனர். இது ஓர் உலகக் கிண்ணச் சாதனை என்பது குறிப்பிடத்தக்கது. இம்ரான்கான் 102 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். பாகிஸ்தானுக்கு வெற்றி!

கபிலின் தலைமையில் இந்திய அணி 1983 இலேயே உலகக் கிண்ணத்தைப் பெற்றது. ஆனால் இம்ரானின் தலைமையில் பாகிஸ்தானுக்கு 1992இல்தான் உலகக் கிண்ணம் கிடைத்தது. 1992 இல் உலகக் கிண்ணத்தை வென்ற பாகிஸ்தானிய அணிக்கும் இப்போது உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் பாகிஸ்தானிய அணிக்குமிடையில் பல ஒற்றுமைகளைக் காணமுடிகிறது.

பாகிஸ்தானிய அணி

அன்றைய வெற்றிகளுக்கு உறுதுணையாக இருந்த இன்ஸமாம் உல் ஹக், வசீம் அக்கிரம், மொயின் கான், இஜாஸ் அஹமட் ஆகியோர் இன்றைய அணியிலும் காணப்படுகின்றனர். இம்ரானிடமிருந்த சிறந்த தலைமைத்துவத்தை வசீமிடமும் காணமுடிகிறது. மேலும் கடைசி நேரத்தில் வெளுத்துவாங்கும் உத்தியையும் காணமுடிகிறது.

B பிரிவு ஆட்டங்களிலே ஆரம்பத்தில் மெதுவாக முன்னேறிப் பின்னர் இறுதிக்கட்டத்தில் அதிவேகமாக ஆடி ஓட்டங்களைக் குவித்துப் பாகிஸ்தான் வெற்றி மேல் வெற்றி பெறுகின்றது. மொயின் கானும் வசீம் அக்கிரமும் எதிரணிகளைக் கடைசிக் கட்டங்களில் கதற வைக்கின்றனர். இது 1992 இலும் நடந்ததொன்றுதான்.

அது ஐந்தாவது உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டம். பாகிஸ்தானுக்கெதிராக முதலிற் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் ஏழு இலக்குகளை இழந்து 262 ஓட்டங்களைக் குவித்தது. மார்ட்டின் குறோ இலாவகமாக ஆடி 91 ஓட்டங்களைக் குவித்தார். ருதப்போட் அற்புதமான அரைச்சதம் பெற்றார்.

பதிலளித்து ஆடிய பாகிஸ்தானுக்கு ரமீஸ் ராஜாவும் இம்ரான்கானும் தலா 44 ஓட்டங்களைப் பெற்றமை நல்ல அத்திவாரமாக அமைந்தது. ஆனால் இம்ரான் பெற்ற ஓட்டங்களைப் போல் இரு மடங்கிலும் அதிகமான பந்து வீச்சுக்களை எதிர்கொண்டு மந்தகதியில் ஆடியதால் 35 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் பாகிஸ்தான் நான்கு இலக்கு இழப்புக்கு 140 ஓட்டங்களையே பெற்றிருந்தது.

ஒரு பந்துப் பரிமாற்றத்துக்கு எட்டு ஓட்டங்கள் என்பதனை விட அதிகமான ஓட்டச் சராசரியில் ஓட்டங்களைப் பெற்றால்தான் வெற்றிஎன்றமிகச் சிரமமான நிலை பாகிஸ்தானுக்கு ஏற்பட்டது. நியூசிலாந்து அணியினர் வெற்றி நிச்சயம் என்ற உறுதியுடன் ஆடிக்கொண்டிருந்தனர்.

அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. இளம் புயல் இன்ஸமாம் உல் ஹக்கும் கிழச் சிங்கம் மியான்டாட்டும் இணைந்து கொண்டனர். மியான்டாட் ஒரிரு ஓட்டங்களாக எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டிருக்க மறுமுனையில் இன்ஸமாம் விளாசித் தள்ளினார். மியான்டாட் - இன்ஸமாம் இணை பத்துப் பந்துப் பரிமாற்றங்களில் 87 ஓட்டங்களைக் குவித்தது.

இறுதியில் உல் ஹக் 37 பந்து வீச்சுக்களில் பெற்ற 60 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார். அதனைத் தொடர்ந்து வசீம் அக்ரமும் ஆட்டமிழக்க..... மீண்டும் பரபரப்பு. ஆனால் 49ஆவது பந்துப்பரிமாற்றத்தில் மொயின் கானின் மட்டையில் இருந்த ஓர் ஆறும் ஒரு நான்கும் பறந்தன. பாகிஸ்தான் வெற்றி பெற்றது. ஜாவெட் மியன்டாட் 57ஓட்டங்களுடன் இறுதி வரை ஆட்டமிழக்கா மல் இருந்தார்.

இது போன்றதொரு வெற்றியைப் பாகிஸ்தான் நான்காவது உலகக்கிண்ணத் தொடரிலும் பெற்றிருக்கிறது. மேற்கிந்தியத் தீவுகள் அணி 49.3 பந்துப் பரிமாற்றங்களில் பெற்ற 216 ஓட்டங்களை பாகிஸ்தான் சரியாக 50 பந்துப் பரிமாற்றங்களில் ஒரேயொரு இலக்கு எஞ்சியிருக்கையில் தாண்டி வெற்றி பெற்றது. அந்த ஆட்டத்தின் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் பாகிஸ்தான் 14 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. பந்து வீசியதோ வோல்ஷ்! ஆனால் வென்றது பாகிஸ்தான்தான்.

அதே நான்காவது உலகக் கிண்ணத் தொடரில் சிம்பாப்வே அணி இத்தகைய தொருவெற்றியை நெருங்கிய போதும் தோல்வியையே தழுவியது. அந்த ஆட்டத்தில் மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியவர் சிம்பாப்வேயின் இன்றைய பயிற்றுநரான டேவிட் ஹோட்டன்.

ஹோட்டனின் ஆட்டம்

1987இலே சிம்பாப்பே - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற உலகக்கிண்ண ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்து ஆடிய நியூசிலாந்து அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் ஏழு துடுப்பாளர்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. மாட்டின் குறோ விறுவிறுப்பான 72 ஓட்டங்களையும் ஸ்னெட்டன் 64 ஓட்டங்களையும குவித்தனர். பதிலளித்து ஆடிய சிம்பாப்வேயின் ஆட்டம் ஆரம்பத்தில் பெரிதாகச் சோபிக்கவில்லை. ஒரு கட்டத்தில் சிம்பாப்வே 104 ஓட்டங்களுக்கு ஏழு துடுப்பாளர்கள் ஆட்டமிழந்த நிலையில் தடுமாறிக் கொண்டிருந்தது. அப்போது ஹோட்டனுடன் புச்சார்ட் (Butchart) இணைந்து கொண்டார். அவர்களிருவரும் எட்டாவது இலக்குக்கான இணைப்பாட்டமாக 117 ஓட்டங்களைக் குவித்தனர். அது ஓர் உலகக் கிண்ணச் சாதனை என்பது தெரிந்ததே.

சிம்பாப்வே வெற்றியிலக்கை மிக அண்மித்த போதும் புச்சாட் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தமை ஒரு பெரும் பின்னடைவாகியது. எனினும் ஹோட்டன் தொடர்ந்து முன்னேறினார். 136 பந்து வீச்சுக்களில் 141 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பந்தினைத் தூக்கி அடித்தார். மாட்டின் குறோ Midon இலிருந்து Long off ற்கு ஓடி ஓர் அற்புதமான 'கட்ச்'சைப் பிடிக்க அந்த அற்புதமான இனிங்ஸ் ஒரு முடிவுக்கு வந்தது. சிம்பாப்வே 3 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

இதுதான் கிரிக்கெட்! நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகக்கிண்ணத் தொடரைப் பாருங்கள். ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் எதிர்பாராத தோல்விகள்; நியூசிலாந்தும் சிம்பாப்வேயும் அற்புதமாக வெற்றிகளைப் பெறுகின்றன. உலகக் கிண்ணத்தை வெல்லப்போவது யார்?

அதன் முன் மேலும் மேலும் சில உலகக் கிண்ண நினைவலைகளை அடுத்த வாரம் எதிர்பாருங்கள். "பழங்கதையைக் கூறி சலிக்க வைக்கின்றானே" என்று நீங்கள் அலுத்துக் கொள்ளவும் தேவையில்லை. பெரும்பாலும் 'வில்ஸ்' உலகக் கிண்ணத் தொடர் பற்றி தகவல்கள் வெளிவரும்.



உலகக் கிண்ணச் சதங்கள்

ஓட்டங்கள்	வீரர்	எதிராக	தொடர்
188*	G. கேர்ஸ்ரன்	UAE	96
181	V. ரிச்சட்ஸ்	இலங்கை	87
175*	கபில் தேவ்	சிம்பாப்வே	83
171*	G. ரேனர்	கி.ஆபிரிக்கா	75
161	A. ஹட்சன்	ஹொலண்ட்	96
145	A. டி சில்வா	கென்யா	96
141	D. ஹோட்டன்	நியூசிலாந்து	87
138*	V. ரிச்சட்ஸ்	இங்கிலாந்து	79
137	D.அமிஸ்	இந்தியா	75
137	S. டெண்டுல்கர்	இலங்கை	96
131	K. பிளெச்சர்	நியூசிலாந்து	75
130	D. கோவர்	இலங்கை	83
130	M. வோ	கென்யா	96
130	C. ஹரிஸ்	ஆஸ்திரேலியா	96
127*	S. டெண்டுல்கர்	கென்யா	96
126*	G. மார்ஷ்	நியூசிலாந்து	87
126	M. வோ	இந்தியா	96
119*	ரமீஸ் ராஜா	நியூசிலாந்து	92
119	V. ரிச்சட்ஸ்	இந்தியா	83
115*	A. பிளவர்	இலங்கை	92
115	G. கூச்	இந்தியா	87
114*	G. ரேனர்	இந்தியா	75
114	அமீர் சொஹைல்	சிம்பாப்வே	92
113	ரமீஸ் ராஜா	இங்கிலாந்து	87
111	அமீர் சொஹைல்	தெ.ஆபிரிக்கா	96
111	B. லாறா	தெ. ஆபிரிக்கா	96
110	I. சேப்பல்	இந்தியா	83
110	G. மார்ஷ்	இந்தியா	87
110	R. ரிச்சட்சன்	பாகிஸ்தான்	87
110	P.சிமொன்ஸ்	இலங்கை	92
110	M. வோ	நியூசிலாந்து	96
107*	A. டி சில்வா	ஆஸ்திரேலியா	96
106*	C. கிறீனிட்ஜ்	இந்தியா	79
106	V. காம்ளி	சிம்பாப்வே	96
105*	C. கிறீனிட்ஜ்	சிம்பாப்வே	83
105	D. ஹெயின்ஸ்	இலங்கை	87
104*	G. ஹிக்	ஹொலண்ட்	96
103*	ஷாஹீர் அப்பாஸ்	நியூசிலாந்து	83
103*	S. கவாஸ்கர்	நியூசிலாந்து	87
103	மியன்டாட்	இலங்கை	87
102*	இம்ரான் கான்	இலங்கை	83
102*	ரமீஸ் ராஜா	மே.இ.தீவுகள்	92
102	C. லொயிட்	ஆஸ்திரேலியா	75
102	A.லாம்ப்	நியூசிலாந்து	83
102	R. பொன்ரிங்	மே.இ.தீவுகள்	96
101	A. ரேனர்	இலங்கை	75
101	N. அஸ்ற்லே	இங்கிலாந்து	96
100*	M. குறோ	ஆஸ்திரேலியா	92
100	சலீம் மலிக்	இலங்கை	87
100	D. பூன்	நியூசிலாந்து	92
100	D. பூன்	மே.இ. தீவுகள்	92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளித்துத் திருமணப்பதிவு செய்வதை திருகுதாள நடவடிக்கை எனலாமா?

கடந்த 15-05-1999 சஞ்சீவியின் அதிரடி அரங்கில் பெற்றவர்களுக்குத் தெரியாமல் திருமணப் பதிவை மேற்கொள்ளுதல் ஒரு திருகுதாளச் செயல் என்றும், சமூகச் சீர்கேடு என்றும் சாரப்பட தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எந்த ஒரு நாணயத்துக்கும் இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒரு பக்கத்தை மட்டுமே நீங்கள் பெரிதுபடுத்தியிருக்கின்றீர்கள். மறுபக்கத்தில் உள்ள நியாயத்தை மறந்து விட்டீர்கள்.

பெற்றவர்கள் சம்மதத்துடன் - பெரியவர்கள், சுற்றத்தவர்கள் சூழ்ந்துநிற்க - எல்லோரதும் மனப்பூர்வமான ஆசிகளுடன் - ஒரு திருமணம் நிறைவேறுதல் என்பதுதான் நிறைவான - எல்லோராலும் பெருவிருப்புடன் எதிர்பார்க்கப்படுகின்ற - ஒரு விடயம். ஆனால் அந்தப்பேறு எல்லோருக்கும் கிட்டுவதில்லை.

தேவையற்ற ரீதியில் - எந்தவித எதிர்ப்பும் இல்லாத நிலையில் - அவசரப்பட்டு தமது வாழ்வையும், கல்வியையும் சீரழிக்கும் விதத்தில் - இயற்கையான மனவெழுச்சிக்கு இடம் கொடுத்து - ஒளித்து மறைத்து திருமணப் பதிவைச் செய்தால் அது கண்டிக்கத்தக்கதே.

ஆனால் உண்மையில் நடப்பது என்ன?

காதல் ஒரு புனிதமான விடயம். உண்மைக் காதல் கடும்போராட்டத்துக்கு மத்தியிலும் வெற்றி பெறும். காதலிக்கும் பிள்ளைகள் அனைவரும் கெட்டவர்கள் அல்லர். ஆனால் காதலித்தவுடன் ஏதோ குற்றம் செய்தவர்கள் மாதிரி பெற்றவர்களும் சமுதாயப் பெரியோர்களும் அவர்கள் மீது சீறிப்பாய்கின்றார்கள்.

பெற்றவர்கள், சுற்றத்தவர்கள், உறவினர்கள் பிள்ளைகளின் காதலை எதிர்ப்பதற்கு பல காரணங்கள் இருக்கலாம். சீதனம், சாதி, மதம், தங்கள் வரட்டுக்கௌரவம், வீண்பகைகள் என நியாயமற்ற பல காரணங்களைக் காட்டி இளசுகளின் வாழ்க்கையை அவர்கள் குழிதோண்டிப் புதைக்க முனைவதுதான் பெரும் தவறு.

வாழப்போவது பெற்றோரல்ல; பிள்ளைகள் தான். பெற்றோரின் குளறுபடியான மனிதநேயமற்ற - அநாகரிகமான - போக்கினால் அவர்கள் தமது காதலை மட்டுமல்லாது - அதன் காரணமாக - வாழ்க்கையையே முடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

வேறு மாற்றுவழி இல்லாத அவர்களுக்கு இத்தகைய நெருக்கடி நிலையில் சட்டம் வழங்கியுள்ள - சட்டரீதியான - பாதுகாப்புத்தான திருமணப்பதிவு. பொய் சொல்லாமல் - சட்டரீதியான தேவைகளை நிறைவு செய்து - பதிவு செய்யப்படும் திருமணத்தை எவ்வாறு நீங்கள் திருகுதாளம் என்று குறிப்பிடமுடியும்.

உளம் இணைந்த காதலோ, உடல் கவர்ச்சியால் வந்த காதலோ எப்படியாயினும் சரி,சட்டரீதியான பாதுகாப்பையும் கடப்பாட்டையும் கட்டுப்பாட்டையும் இந்தத் திருமணப்பதிவு தரவில்லையா? சீதனம் இல்லாத காரணம் போன்ற சமூகக் குறைபாடுகளினால் "குமர் வத்தி குரங்காகும் நிலை" வரை நமது யுவதிகள் காத்திருக்கும் அவலம் ஏற்படாமல் இருக்கவும் இத்தகைய திருமணப் பதிவுகள் வழி செய்கின்றன என்பது கவனிக்கத்தக்கது.

நான் அனைத்துப் பெற்றோரையும் ஒட்டு மொத்தமாகக் குற்றம் சொல்லவில்லை. அதே நேரம் திருமணப்பதிவு மேற்கொள்ளும் அனைவருக்காகவும் பரிந்து பேசவுமில்லை. வாழ்க்கை பிள்ளைகளுடையது. இந்த விடயத்தில் பெற்றவர்கள் தம் வறட்டுக் கௌரவங்களையும் முரட்டுத் தனங்களையும் விட்டு பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்கும் வழியில் செயல்படுவார்கள் என்றால் இப்படியான பிரச்சினைகள் சிலவற்றை யாவது தவிர்க்கலாம். இதற்குப் பிள்ளைகளும் ஒத்துழைக்க வேண்டும்.

பெரியவிளான். த.நிலாமதி.

அதிரடி 'சுப்பர்'!

சென்ற வாரம் 'அதிரடி அரங்கு' உண்மையிலேயே அதிரடிதான் போங்கள். அண்மைக்காலமாக ஆசிரிய சமூகத்தையும் கல்வி உயர்அதிகாரிகளையும் திணைக்களச் சீர்கேடுகளையும் மட்டும் தாங்கி வந்த அதிரடி அரங்கில் இம்முறை ஆயுதம் ஏந்திய ஜனநாயகக் கட்சி ஒன்றின் நம்பகத் தன்மையை சந்தேகிக்கும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. மின்னலின் 'சுப்பர்' அதிரடி, உதயனுக்குக் கிடைத்த துணிச்சலான பத்திரிகை என்ற விருதை உறுதிப்படுத்திவிட்டது. ஹலோ மின்னல்! Keep it up. பணிந்து எழுதுபவன் நிச்சயமாகப் பத்திரிகையாளனாக இருக்க மாட்டான். துணிந்து எழுதுங்கள். என்றும் வாசகர்கள் உங்கள் பக்கம் என்பதை மறந்து விடாதீர்கள்.

பண்ணாக நாரதன்.

உங்கள் உள்ளத்திலிருந்து

வாசகரே!

உங்கள் பாராட்டுக்களை மின்னலுக்குத் தெரிவிக்கின்றோம். என்றாலும் இத்தகைய விமர்சனங்களை 'மின்னல்' போன்றோர் வெளியிடுவதற்கான சுதந்திர நிலைமையையும் சகிப்புத் தன்மையையும் பேணி வரும் - ஆயுதம் ஏந்திய - தமிழ்க் கட்சிகளையும் நாம் பாராட்டத்தான் வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள். (ஆ-ர்)

காலம் மறப்பதில்லையே!

கடந்த 14 ஆண்டுகளின் முன்பு குமுதினிப் படகில் நிகழ்ந்த கோரப்படுகொலைகள் பற்றிய தகவல்களை எமது இளம் சமூகத்தவருக்குத் தெரிவித்த கட்டுரையாளர் ஆதவனுக்கு எமது நன்றிகள்.

ஏன் என்றால் இந்தப் படுகொலைகளை மூடி மறைத்து விட்டு 'வீர மகனே!' என்று எம்மை படையில் சேர அழைக்கின்றார்கள்.

எமது இளம் சமூகத்தவர்களுக்கு இத்தகைய கொலைகளோ அல்லது இதற்கு முன் பின் நடந்த கொலைகளோ எதுவும் தெரியாது.

'நாங்க நல்லம்' என்றுதான் சொல்லுவார்கள். ஆனால் என்ன செய்தோம் என்று சொல்லமாட்டார்கள். இவை எதுவுமே தெரியாததால்தான் எமது இளம் சமூகம் 'டிக்க டிக்க தன்னுவ'எனக் கூறுகின்றது. இந்தச் சமுதாயத்தை மாற்ற கடந்த கால உண்மைச் சம்பவங்களை எடுத்துக் காட்டுவது அவசியம்.

கைதடி. ரூபன்.

துணிச்சலான பத்திரிகையா?

விடுதலைப் புலிகளை விமர்சித்து உங்கள் பத்திரிகைக்குக் கடிதம் எழுதினால் நீங்கள் அவற்றைப் பிரசுரிப்பதில்லை என்று ஒரு கருத்து நிலவுகின்றது. ஏன் ஐயா?

உங்கள் பத்திரிகைக்கு தேசிய விருது கிடைத்ததையிட்டு எங்களுக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் இருக்கும். இந்நேரத்தில் நீங்கள புலிகளுக்குப் பயந்து - துணிச்சல் இல்லாமல -மனச்சாட்சிக்கு விரோதமாக -அவர்கள் ஓர் "விடுதலை வீரர்கள்" என்ற தொனியில் எழுதுவது வியப்பாகவும், விநோதமாகவும், வேதனையாகவும் உள்ளது. இவர்கள் செய்த - செய்கின்ற - செய்யப் போகின்ற - கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள், அச்சுறுத்தல்கள், அர்த்தமற்ற போராட்டங்கள் போன்றவற்றை எவராவது விமர்சித்தால் அவற்றைத் துணிச்சலாகப் பிரசுரியுங்கள்.இல்லாவிடில் உங்கள் பத்திரிகைக்குக் கிடைத்த விருது 'ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை' என்ற நிலையை மக்கள் மத்தியில் உண்டாக்கும்.

யாழ்ப்பாணம். சி.ஜெய்குமார்.

வெறுப்பை ஏற்படுத்தும் பத்திரிகை

யாழ். மண்ணில் தனிகாட்டு ராஜாபோல மார் தட்டி உலாவரும் உதயன் - சஞ்சீவியின் பணி என்போன்ற வாசகர்களுக்கு வெறுப்பையே உண்டு பண்ணுகிறது.

கவிதை முற்றம் பகுதியின் சிறப்புத் தன்மை வரவர குறைந்து கொண்டே செல்கிறது. தவிர வளர்ச்சி அடைவதாகவும் இல்லை. மற்றும் கவிதை முற்றத்தில் புதுக்கவிதைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை கூடுமானவரை தவிர்த்து மரபுக் கவிதைகளுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்தால் எமது மண்ணின் மரபுக் கவிதை வடிக்கும் இளம் கவிகளை மேலும் அப்பணியில் முன்னேற்றமடையச் செய்யலாம் அல்லவா? மேலும் இன்றைய சூழ்நிலையில் சமகால நிகழ்வுகளை கவிதைகளாப் புனையும் கவிஞர்களுக்கு அதிக இடம் கொடுத்தால் அது கவிதை முற்றத்தை மேலும் மெருகூட்டும். வித்துவான் பதில் பகுதிக்கு அனுப்பப்படும் பல தரமான கேள்விகளை வித்துவான் குப்பைக்குள் போட்டு விட்டு இரட்டை அர்த்தக் கேள்விகளுக்கே அதிகம் விடையளிப்பது கவலைக்குரியது. அது சஞ்சீவிக்குள்ள சற்று மதிப்பையும் குறைத்து விடும் என்பதில் சந்தேகமில்லை.

யாழ். மக்கள் கைகளுக்குக் கிடைக்கும் பத்திரிகைகளில் அரசியல் மாமாங்க அறிவித்தல்களையும், கண்ணீர் அஞ்சலிகளையும் விளம்பரங்களையும் கொண்டு கிட்டத்தட்ட அரை வாசிப் பகுதியை நிரப்பி வெளிவரும் பத்திரிகை உதயன் என்றால் அது மிகையில்லை. எனவே பணத்துக்காக உள்ள தரத்தையும் குறைக்க முயலாதீர்கள்.

எனினும் உலக அரங்கில் நடைபெறுகின்ற பல விடயங்களையும் வெளியிடுவதில் உதயன் சளைத்தவன் அல்லன் என்பதும் என் கருத்து.

நாவலம்பதி. வ.ராஜநர்த்தனன்.

மரபுக் கவிதைவரையும் கவிஞர்களை வளர்ப்போமா?

உதயன்-சஞ்சீவியின் தரம் மேன்மேலும் ஓங்குவதற்கு அதன் கவிதைத்துறைக்கு ஒரு கருத்தினைச் சமர்ப்பிக்கின்றேன; ஆராய்வீர்களாக! 'கவிதை முற்றம்' பல நல்ல கவிஞர்களை ஊக்குவித்து ஆக்கபூர்வமாக செயற்படுகிறது. அது பாராட்டவேண்டியது.

ஆனால் -

புதுக் கவிதை புனைவோர் பெருக, மரபுக் கவிதை புனைவோர் மனம் நோக வைப்பது கவலை தருவதாக உள்ளது.

எனவே -

இப்பகுதியில் சிற்சில மாற்றங்களை இடையிடையே ஏற்படுத்துவது புதுமை பூக்க உதவுமன்றோ?

உதாரணமாக வெண்பாவில் கடைசி வரியைத் தந்து முன் மூன்று வரிகளையும் புனைய வைப்பது நல்லது. அப்படி வரும் கவிதைகளில் தரமான மூன்று கவிதைகளை பெட்டி கட்டி முதன்மைப் படுத்தலாம்.

இது இளையதலைமுறையையும் கவிதைகளை முறையாகப் புனைய ஊக்குவிக்கும். உதாரணத்துக்கு:-

* *விடுதலை வேண்டும் எமக்கு.*
* *தொல்லைகள் நம் காலில் தூசு.*
* *பொய்யாய்ப் போன பொதி*
* *விடிவு கிட்டும் விரைந்து*
* *ஏன் பிறந்தோம் தமிழராய் இன்று.*

இப்படியான ஈற்றடிகளை தந்து விடுதலை உணர்வும் தமிழ் மொழிப்பற்றும், தாயகப் பற்றும் மிக்க கவிதைகளை எழுதத் தூண்டலாம்.

ஔவை முதலாக அருந்தமிழ் புலவர் பலர் ஆக்கிய மரபுக் கவிதைகள் சாகாவரம் பெற்றன. அவைபோல் நம் தம்பி தங்கையரையும் எழுதத் தூண்ட உதயன் - சஞ்சீவி உதவுமா?

வாசகநேயர்.

வாசகரே!

கருத்தாழம் மிக்க நல்ல ஆலோசனை. அடுத்து வரும் வாரங்களில் இந்த ஆலோசனையைச் செயற்படுத்த முனைவோம்.

நமது தம்பி, தங்கையர் மட்டுமன்றி மரபுக் கவிதையில் துறைபோனவர்களும் இப்பகுதியில் ஆர்வத்துடன் பங்குபற்றி, ஏனையோரையும் கலந்துகொள்ள உற்சாகப்படுத்தினால் கவிதைத்துறையில் புலமைமிக்க ஒரு தலைமுறையை நாம் மீண்டும் உயிர் பெறச் செய்யலாம் என எண்ணுகின்றோம். வாருங்கள் வடம் பிடிப்போம்! (ஆ-ர்)

நல்ல தொடர்கதை

அரசாங்கம் தற்போது தரவந்துள்ள அற்ப, சொற்ப சலுகைகளைக் கண்டு - அரச படைகளால் நாம் முன்னர் பட்ட துன்பங்களை மறந்து - வாழுகின்ற நம் மக்கள் மத்தியில் 'போரே நீ போ!' என்னும் தொடர்கதை பிரசுரமாவது போற்றுதற்குரியது. இத்தொடரை சிறந்த முறையில் கோவையாக்கி வரையும் செங்கை ஆழியானுக்கு எமது பாராட்டுக்கள்.

தொண்டமனாறு. பி.லவனி.

தேசிய விருதுக்குப் பாராட்டு

மிகக் கஷ்டமான சூழ்நிலையிலும் தன்னலமற்ற தியாக சிந்தையுடனும், துணிச்சலுடனும் பத்திரிகைச் சுதந்திரத்தை பேணிக் காத்துவரும் "உதயன்" தேசிய விருது பெற்றமைக்கு ஆசிரிபீடத்துக்கு நன்றியும், வாழ்த்துங்கூற நாம் கடமைப்பட்டுள்ளோம். "தேசியவிருது" என்ற தலைப்பில் "உதயனுக்கு" பாமாலை புனைந்த "அங்குசன்" அவர்களும் பாராட்டுக்குரியவர்.

இனுவை. தமிழன்பன்.

சர்வதேச ரீதியிலும் விருது கிடைக்கும்

இலங்கையில் துணிச்சலான பத்திரிகைக் குரிய விருது உதயனுக்குக் கிடைத்திருப்பது யாழ்ப்பாணத் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கும் வெற்றியாகவே கருதுகின்றோம். இவ்வீர நிலையில் [illegible] உதயன் செயற்படுவானானால் அவனுக்கு சர்வதேச ரீதியிலும் விருது கிடைத்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தனக்கென ஓர் அசையாத நம்பிக்கையுடனும் இலட்சியத்துடனும் உலாவரும் "உதயன் - சஞ்சீவி"யின் தரம் என்றும் நிரந்தரமாகவே இருக்கும் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு.

நல்ல நல்ல அறிவியல் செய்திகளை எல்லாம் களைந்தெடுத்து பிரசுரித்து வரும் உதயன் சஞ்சீவியில் சிறுகதைகள் நல்ல தரமானவையாகவும் சமூகத்துடன் ஒத்துப்போகும் வகையிலும் அமைத்திருப்பது அதன் தரத்தை மேலும் ஒரு படி உயர்த்தியுள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

மேலும் வித்துவானின் இரட்டை அர்த்தப் பதில்களால் சஞ்சீயின் நற்பெயரைக் கெடுத்து விடாது காக்க வேண்டிய கடப்பாடும் ஆசிரிய பீடத்தின் கைகளில்தான் உள்ளது.

நாவலம்பதி. சு.ப.கஜேந்திரன்.

தகுந்த தீர்ப்பு இது!

உதயன் - சஞ்சீவிக்கு துணிச்சலான பத்திரிகைக்குரிய விருது கிடைத்தது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி. Accept our heartist congratulations on your proud achievement Uthayan - Sanjeavy richly deserve this high commendation.

எத்தனையோ தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்தும் கூட இந்த விருது உதயன் சஞ்சீவியைத் தேடிவந்தது ஒரு தனித்துவமான சாதனையாகும். - Unique Achievement. It's no wonder that Uthayan, Sanjeavy is the proud receipient of this coveted award.

உதயன் - சஞ்சீவி, விடயங்களையும செய்திகளையும் - பத்திரிகாதர்மத்தைக் கடைப்பிடிக்கும் வகையில் - பாரபட்சமற்ற முறையிலும் - பக்கச் சார்பற்ற நிலையில் - 'பந்தம் பிடிக்காத' போக்கில் - ஆணித்தரமாகவும், துணிச்சலுடனும் உண்மையை உண்மையாகவே வெளியிடுகிறது. தாக்க வேண்டியவர்களை தாக்க வேண்டிய இடத்தில் தாக்கியும் பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டியும் பழிக்க வேண்டிய இடத்தில் கிண்டலாகவும் குத்தலாகவும் பழித்தும் தூற்றியும் வைக்கிறது. யார் பிழை விட்டாலும் சரி - பெரியவர்களாயினும் சரி - சிறியவர்களாயினும் சரி - சரி என்று பட்டதை துணிச்சலுடனும் ஆணித்தரமாகவும் நேர்மையுடனும் விடயங்களை வெளியிடுகிறது. இத்தகைய அம்சங்களை நோக்குமிடத்து இப்பத்திரிகை சுதந்திர உணர்வுடன் செயல்படுகின்ற ஒரு நிலை தொனிக்கின்றது. இத்தகைய பிரத்தியேக அம்சங்களை நாம் அதிரடிஅரங்கில் அதிரடித் தாக்குதல் மூலமும் மின்னல் வேகத்தில் மின்னல் தாக்குதல் மூலமும் உணரலாம். அதிரடி ஒரு 'சுப்பரான' பகுதி. இதற்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்! பத்திரிகாதர்மத்தை உண்மையிலேயே "உதயன்" உயர்வாகவும் உன்னதமாகவும் பேணிவருகின்றான் என்பதை நாம் சிறப்பாக அறிவோம்.

மற்றைய மாவட்டங்களில் ஒரு செய்தித்தாளை நடத்துவது அவ்வளவு சிரமமல்ல. ஆனால் யாழ். மாவட்டத்தில் - இக்கட்டான ஒரு நிலையில் - போர்க்கால சூழலில் - செய்தித்தாள் அச்சிடுவதற்கான உபகரணங்கள் தட்டுப்பாடான நிலையில் செய்தித்தாளை நடத்துவது ஒரு இலகுவான காரியமல்ல. இந்த இக்கட்டான நிலையில் செய்தித்தாளை நடத்திக்கொண்டிருக்கும் நிர்வாகத்தினருக்கு எமது பாராட்டுக்கள்.

பல பல விடயங்களையும், பல பல அறிவியல் அம்சங்களையும் உதயன் சஞ்சீவி வாரி வழங்குகின்றது. பல வர்க்கத்தினர் - பெரியோர், சிறியோர், கற்றோர், மற்றோர் என - பலரகத்தினரும் தரத்தினரும் பயன்பெறும் வகையில் அவர்களின் தேவைகளை ஓரளவில், பூர்த்தி செய்கிறது. இறுதியாக இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால் - ஏனைய பத்திரிகைகள் கடைப்பிடிக்காத சிறப்பு அது.; சினிமா நடிகைகளின் ஆபாசத் தோற்றத்தை நம்பி வாழாத பத்திரிகை உதயன் - சஞ்சீவி ஒன்றுதான்.

இத்தகைய சிறப்பம்சங்களைப் பொதித்து வைத்திருக்கின்ற உதயன் சஞ்சீவிக்கு இத்தகைய விருது கிடைத்தது ஒரு தனிச்சிறப்பாகும். Editor's Guild வழங்கிய தீர்ப்பு சரியான - முறையான - தகுந்த - சிறந்த - தீர்ப்பாகும்.

Keep it Up!

கொக்குவில். சபா.சுப்பிரமணியம்.

அநாகரிகமான பத்திரிகைக்குரிய விருது

வாசகர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் - வியாபார தந்திர நோக்கத்துடன் - வித்துவான் பதில்களைத் தொடர்ந்து பிரசுரித்து வருகின்றீர்கள். அது ஓர் அசட்டுத் துணிவாகும்.

இந்தத் துணிச்சலுக்காகவா உதயனுக்கு 'துணிச்சல் மிக்க பத்திரிகைக்கான தேசியவிருது' வழங்கப்பட்டது? இந்தவகையில் பார்த்தால் உதயன் - சஞ்சீவிக்கு இந்த விருது வழங்கப்பட்டது முற்றிலும் சரிதான்!

ஒரு பத்திரிகைக்கு துணிச்சலோடு சமூகப் பார்வையும், நன்னோக்கும் கூடத் தேவையே.

'துணிச்சலான பத்திரிகைக்குரிய விருது'டன் அசிங்கமான - அநாகரிகமான - பத்திரிகைக்குரிய விருதையும் கூடச் சேர்த்து சஞ்சீவிக்கு வழங்கியிருக்கலாம் என்பதே எமது கருத்து.

உடுப்பிட்டி. ப.நீ.வண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையா? காதலா? எதற்கு முக்கியத்துவம்?

கைதடி. கந்தஞானம்.
கடமையா? காதலா? - எதற்கு முக்கியத்துவம் கொடுக்க?
☺கடமையின் மீது காதல் கொள்வதன் மூலம் இரண்டுக்குமே முக்கியத்துவம் கொடுங்களேன்!

❁ ❁ ❁

மல்லாகம். திருமதி. மனோ.
கத்திச் சண்டை போடலாமா?



☺போடலாமே! (வாயால்) கத்திச சண்டை போடலாம்.

❁ ❁ ❁

வலி.வடக்கு. ஜெகதீஸ்.
கணக்கு வாத்தியாரிடம் தமிழ் பாடம் படிக்க எனது மகள் விரும்புகிறாள். என்ன செய்யலாம்?
☺கணக்கு விடப் போகிறாள். கவனம்!

❁ ❁ ❁

நீர்வேலி. ப.சசி.
காட்டெருமைகள் தண்ணீர்க் குளத்தைக் கண்டால் வெளியே வராதாமே! உண்மையா?

☺சில வீட்டெருமைகளும் கூட 'கோப்பிறேஷன்' குளத்தைக் கண்டால் வெளியே வராமல் மூழ்கி விடுகின்றனவே!

ஊரெழு. கு.வேலு.
எல்லாவற்றுக்கும் கோபப்படுகின்ற பெண்களைப்பற்றி என்ன கூறுகின்றீர்கள்?
☺அதுதான் "அதிகமாகக் கோபப்படுகின்ற பெண்ணும் அதிகமாக ஆசைப்படுகின்ற ஆணும் வாழ்ந்ததாகச் சரித்திரமே இல்லை" என்று நம் 'படையப்பா' சொல்லி விட்டாரே! அவர் ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்ன மாதிரி.

❁ ❁ ❁

கோப்பாய். என்.எம்.லிங்கம்.
மகன் தந்தைக்காற்றும் உதவி என்ன?
☺இப்போதைய நிலையில் களவாகத் திருமணப்பதிவு செய்யாமல் இருப்பது என்று கூறலாமா?

❁ ❁ ❁

மாதகல். ந.சத்தியா.
தூரப் பார்க்கும் போது கவர்ச்சியாகத் தோன்றுவது கிட்ட வரும்போது அசிங்கமாகி விடுகிறதே ஏன்?
☺அதுதான் உலக தத்துவம். அடையும் வரை ஆசை அலைக்கழிக்கும். அசரவைக்கும் அழகு, அடைந்ததும் அயரவைத்துவிடும். 'பூ! இவ்வளவுதானா?' என்று எண்ண வைக்கும்.

❁ ❁ ❁

நெல்லியடி. த.தீப்.
இன்னொருவரைக் காதலித்துக் கைவிட்ட பெண்ணை நான் காதலிக்கலாமா?
☺'செத்தவன் பெண்டாட்டியைக் கட்டினாலும் விட்டவன் பெண்டாட்டியைக் கட்டக்கூடாது' என்று ஊரில் ஒரு பழமொழி உண்டு. விட்டு விட்டுப் பிடிப்பதற்கு - நினைத்த நேரம் ஏறி இறங்குவதற்கு - காதல் என்ன வழியில் ஓடும் பேருந்தா?

❁ ❁ ❁

உடுவில். ப. ரமேஸ்.
'தலைமுறை இடைவெளி' - விளக்குங்களேன்!

☺அப்பனைக்கண்டு மகன் அஞ்சியது அந்தத் தலைமுறை. மகனை நினைத்து அப்பன் அஞ்சுவது இந்தத் தலைமுறை.

கணக்கு வாத்தியாரிடம் தமிழ்ப்பாடம் படிக்கலாமா?

❁ ❁ ❁

தட்டாதெரு. கு.குமார்.
பழைய கால நடிகைகளுக்கும் தற்கால நடிகைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
☺அவர்கள் நடிப்பைக் காட்டினார்கள்; இவர்கள் குடிப்பைக் காட்டுகின்றார்கள். அவ்வளவுதான்.

❁ ❁ ❁

நல்லூர். எஸ்.மணியம்.
மூக்கும் முழியுமாக உள்ள பெண்ணைக் காதலிக்கின்றேன். பலர் எதிர்ப்பதால் இரகசியமாகச் சந்திக்க வேண்டியுள்ளதே! என்ன செய்யலாம்?
☺வாயும் வயிறுமாக முன்னர் மணந்து கொள்ளுவதுதான் நல்லது.

❁ ❁ ❁

அரியாலை. பி.சிவம்.
திருமணத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் மணமக்களுக்கு என்ன அறிவுரை கூறலாம்?
☺Handle With Care!

❁ ❁ ❁

மல்லாகம். திருமதி ஜே.ஹரி.
பேயைக் கண்டதுண்டா?
☺ கட்டியும் விட்டேனே!

❁ ❁ ❁

சங்கானை. அ.சந்திரன்.
வித்துவான் ஐயா! உங்களுக்குப் பிடித்த மொழி எதுவோ?
☺ மழலை மொழி.

❁ ❁ ❁

சுன்னாகம். திருமதி ஈஸ்வரன்.
பிரபுவுடன் நடிக்கத் தயார் என்கின்றாரே குஷ்பு?
☺பழையதை மீட்பதில் சுகம் உண்டு என்பதைப் புரிந்திருக்கின்றார்.

❁ ❁ ❁

மாதகல். என்.சுகிந்தா.
பரீட்சை நெருங்கும் சமயத்தில் ஒரு ஜோடி ஓடி விட்டதாமே! இது பருவக்கோளாறா? பரீட்சைக் கோளாறா?
☺அறிவுப் பசியைவிட உடற்பசி வலிமை என்பதால் வந்த கோளாறு.

வித்துவான் பதில்கள்

❁ ❁ ❁

நல்லூர். ரதி.
எனது தாத்தாவும் பாட்டியும் எந்த நேரமும் சண்டை செய்கின்றார்களே!
☺அவர்களால் வேறு என்னதான் செய்ய முடியும்?

❁ ❁ ❁

பளை. வி.வரதர்.
பொறியியல் படித்த பெண்ணை மணந்தால் சமைத்துப் போடுவாளா?
☺அவள் படித்தது பொறியியல்தானே! கறியியல் அல்லவே! ஆகவே சமையல் உம்பாடுதான்!

❁ ❁ ❁

நாவற்குழி. ஆர். குலம்.
நண்பனின் தங்கையை காமநோக்கில் பார்ப்பவனுக்கு என்ன [illegible]
☺ஒரே வெட்டாக வெட்டி விடலாம். - நான் நட்புறவைச் சொன்னேன்.

❁ ❁ ❁

மட்டுவில். ஆ. சஞ்ஜீவன்.
இந்த வருடமும் இலங்கை அணி வீரர்கள் உலகக் கோப்பையுடன் நாடு திரும்புவார்களா?

☺அதுதான் இந்தியாக்காரன் அள்ளிக் கொடுத்து அனுப்பியிருக்கிறானே! அந்த வருடம் கோப்பையுடன் வந்தார்கள். இந்த வருடம் கோப்பை என்ன சிரட்டை கூடக் கிடைக்காது!

❁ ❁ ❁

நவாலி. க. பிரதீபன்.
'காதல்' ஏன் சாவில் முடிகின்றது?
☺காதல் எங்கே சானாவில் முடிகின்றது? - இல்லன்னாவில் ('ல்') அல்லவா முடிகின்றது?

❁ ❁ ❁

நீர்வேலி. திருமதி. ரி. சயன்.
வித்துவானப்பா! எனது கணவர் நித்திரையில் கனவுகண்டு என்னைக் குத்துகின்றாரே. என்ன செய்யலாம்?
☺கொடுத்து வைத்தவர். அவருக்கு கனவிலாவது சுகானுபவம் கிடைக்கின்றதே!

❁ ❁ ❁

பருத்தித்துறை. சா. சுஜாதா.
வாழ்க்கை மணம் வீசும் நந்தவனமா? அல்லது மாயக் கண்ணாடியா?
☺ (நீரூற்றிப்) பேணுபவனுக்கு அது நந்தவனம். போட்டடிப்பவனுக்கு அது மாயக் கண்ணாடி.

❁ ❁ ❁

மானிப்பாய். எஸ்.அனுராஜ்.
பாடசாலைகளில் இப்போது ஒன்று கூடல்கள் சூடு பிடிக்கின்றனவே!
☺அதைப் பயன்படுத்தி சூடாகப் பிடிப்பதற்குச் சிலர் முயல்வதுதான் தப்பு. ஒன்று கூடல் நடக்கட்டும். ஆனால் அவை'ஒன்று' கூடுவதற்கு வழி வகுக்காவிட்டால் சரி.

❁ ❁ ❁

மல்லாகம். எம்.தயாளன்.
அடிக்கடி வாயை மெல்லும் - வயிற்றை நிரப்பும் - பெண்களுக்கு நீர் கூறவிரும்புவது என்னவோ?
☺உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.

❁ ❁ ❁

அரியாலை. பி.மஞ்சுளா.
ஆசிரியர் மாணவியைத் திருமணம் செய்தால் என்ன நடக்கும்?
☺இனி தடியால் அடிக்கமாட்டார்.

❁ ❁ ❁

கைதடி. ஞா.முத்து.
'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்கின்றார்கள். அப்படியானால் 'கணவன் அமைவதெல்லாம்.....?'
☺'பெண் வீட்டார் கொடுத்த சீதனம்.'

❁ ❁ ❁

நீர்வேலி. ராஜா.
பெண்களுக்கு ஆடை தைக்கும் ஆண்கள் குறித்து.....!
☺அளவிடைகள் (அளவு இடைகள்) தெரிந்தவர்கள்.

❁ ❁ ❁

மாதகல். சுகிர்தா.
குடாநாட்டில் அவ்வப்போது புலிகளின் உறுமல் கேட்கின்றதே.....!

☺இப்போதெல்லாம் உறுமல் கேட்கத் தேவையில்லை. தபால்காரனின் மணி ஓசை கேட்டாலே குலப்பன் அடிக்கின்றதாமே!

❁ ❁ ❁

நீர்வேலி. ப.சங்கர்.
'நாய் படாப்பாடு' என்று எதைக் கூறலாம்?
☺ஒரு தடவை என் வீட்டுக்கு வந்து நான் படும் பாட்டைப் பாருங்களேன்!

❁ ❁ ❁

மாதகல். என்.சத்தியா.
காமத்துப் பால் இல்லாத திருக்குறள் எப்படி இருக்கும்?
☺உப்பில்லாப் பண்டம்.

❁ ❁ ❁

யாழ். க.கந்தையா.
வித்தூ! நீர் ஆம்பி(ள்)ளையா?



☺ஆம் ஐயா. வீட்டில் 'ஆமாம்' போடும் பிள்ளைதானே ஆம்பிள்ளை!

காமத்துப் பால் இல்லாத திருக்குறள் எப்படியிருக்கும்?

❁ ❁ ❁

மாதகல். செந்து.
வாழ்க்கை ஒரு விளையாட்டு என்கின்றார்களே! திருமண வாழ்வும் விளையாட்டா?
☺ஆம் அதிலென்ன சந்தேகம்? விளையாடும் இரு தரப்பும் வெற்றி பெறும் ஆட்டம் அங்குதானே உண்டு!

❁ ❁ ❁

கல்வயல். ப.நீலா.
என் மகனுக்கு சீதனமாக ஒரு கோடி கேட்க விரும்புகின்றேன். கேட்கலாமா?
☺ஒதுங்குவதற்குக் கோடி ஒன்று கேளுங்கள். தப்பில்லை. ஒரு கோடி ரூபாவுக்கு சீதனம் கேட்காதீர்கள். அது கேவலம்.

❁ ❁ ❁

பருத்தித்துறை. அ.பிரசாத்.
மாமியாரை மருமகள் மதிப்பது எப்போது?
☺கணவனையும் தன்னையும் தனிக் குடித்தனத்துக்கு அனுப்பும் போது.

❁ ❁ ❁

கரவெட்டி. வே.சிவா.
எங்கள் ஊர் சித்திர ஆசிரியரை அடிக்கடி இடமாற்றம் செய்கின்றார்களே?
☺அவர் வரையும் சித்திரங்கள் விசித்திர மானவையோ என்னவோ?

இவ்வார ஜோக்!

கடந்த வாரம் 'வித்துவான் கேள்வி - பதில்' பகுதியில் வித்துவான் அண்மையில் வாசித்த ஜோக் ஒன்றைக் கூறும்படி ஒரு வாசகர் கேட்க, அதற்கு வித்துவான் பதிலாகக் கூறிய ஜோக் பலருக்கும் பிடித்துக் கொண்டுள்ளது. வரவேற்றுப் பல கடிதங்கள். இதனால் வாசகர்களின் விருப்பை நிறைவு செய்வதற்காக தாம் வாசித்த ஜோக்குகளை வாரம் ஒவ்வொன்றாகத் தருகின்றார் வித்துவான். அந்த வரிசையில் இவ்வாரத்துக்குரிய ஜோக் இது:-

கடத்தல்காரன் ஒருவனிடமிருந்து ஒரு கோடீஸ்வரனுக்கு கடிதம் வந்தது.
"நான் உங்கள் மனைவியை கடத்திச் சென்று ஒளித்து வைத்துள்ளேன். உடனடியாக இரண்டு லட்சம் ரூபாவை அனுப்பி அவளை மீட்டுக் கொள்ளவும்" - என்று கடிதத்தில் எழுதியிருந்தது.
கோடீஸ்வரர் அவசர அவசரமாக கடத்தல்காரனுக்குப் பதில் அனுப்பினார்.
"ஆயுள் முழுவதும் அவளை வைத்திருக்க எவ்வளவு லட்சம் கேட்கிறாய்?" - என்று அதில் இருந்தது.

காதலித்துக் கைவிட்ட பெண்ணைக் காதலிக்கலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்விக்கோர் புதிய நூல்

ஆரம்பக்கல்வியே இடை நிலை, உயர் கல்விக்கும், உவப்பான வாழ்க்கைக்கும் மாணவர்களை உயர்த்தும் ஏணியாகும். இன்றைய கல்வி உலகும், சமுதாயமும் இத்துறையில் அதி கூடிய அக்கறை காட்டிவருகிறது. இந்த நிலையில் யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளையினால் எழுதப்பட்ட "ஆரம்பக்கல்வி" என்ற நூல் இன்று வெளிவருகிறது. ஆரம்பக் கல்வியின் அவசியம் உணர்ந்த அனைவருக்கும் ஊக்கம் தரும் ஒரு வழிகாட்டியாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக்கல்வியின்பால் நெருங்கிய ஈடுபாடும், அதன் வளர்ச்சியில் நிறைந்த அனுபவமும், ஆற்றலும் கொண்ட கல்விச் சேவையாளராகிய இந்நூலாசிரியரின் பணி போற்றுதற்குரியது. ஆரம்பக் கல்வியின் தேவைகளை இனம் கண்டு, மாணவர்களைக் கற்பிக்கத் தூண்டும் ஆசிரியர்களுக்கு சிறந்த துணையாகவும் இந்நூல் உள்ளது. இதை கல்வி மேற்பார்வை உத்தியோகத்தர்கள், சமூக சேவையாளர்கள், பொதுமக்கள் அனைவரும் அவசியம் கற்றுப் பயன்அடைய வேண்டும்.

குழந்தைகளின் சூழல் நிலைமைகள், உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி, மனப்பாங்கு வளர்ச்சி என்பன ஆரம்பக்கல்வியில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவையாகும். இந்தவகையில் குழந்தைகளின் பெற்றோர்களால் ஆரம்பக்கல்வி முக்கியப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் இப்பிரிவு மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கை என்பது ஓர் இணைந்த செயலாகவே அமைந்துள்ளது. பாடசாலையும் சமூகமும் இணைந்தே இந்தக் கற்றல் கற்பித்தலை விருத்தியாக்க முடியும்.

வகுப்பில் கற்கும் மாணவன், கற்கை முடிந்ததும், சமூகத்தில் வீட்டை நோக்கிச் செல்கிறான். அங்கு அவனது கற்கை சமூக, வீட்டுக் காரணிகளின் தாக்கத்திற்கு உட்பட்டு பின்பு பாடசாலைக்கு மீளளிக்கப் படுகின்றது. பாடசாலை அதனை வளப்படுத்தி, மீள உருவாக்கி சமூகத்திற்குக் கையளிக்கின்றது. ஆதலால் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், சமூகத்தில் உள்ளோர் மாணவரது கற்றலுக்கும், ஆசிரியரது கற்பித்தலுக்கும் பின்னூட்டல் தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இது கூட்டு நடவடிக்கையாகத் தொடரும் போது ஆரோக்கியமான கற்றல் கலாசார சூழலை ஏற்படுத்தலாம்.

சமூகத்தவர்களுடன் பாடசாலைச் சமூகம் கூடிய தொடர்பாடலை வைத்துக்கொள்ள வேண்டும். இத்தகைய தொடர்பாடல ஊடாகப் பாடசாலைக்கு வேண்டிய தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனாலும் ஆரம்ப பாடசாலைகள் -

முகாமைத்துவ விருத்தி இன்மை-

ஆசிரியர் பற்றாக்குறை --

பெற்றோர் ஆதரவின்மை -

ஆசிரியர் பயிற்சி, கல்வித்தகைமை, ஆரம்பக்கல்வி தொடர்பான நிபுணத்துவ அறிவின்மை -

போன்ற பல காரணங்களினால் பின்னடைவுகளை எதிர் நோக்கி உள்ளன. இவற்றைத் தீர்க்கும் பல உபாயங்கள், நுட்ப முறைகள் இந்நூலில் அழகாக - எளிமையாக - தெளிவாக - விளக்கப்படுகிறது.

பா.தனபாலன்

ஆரம்பக்கல்வி, பிரச்சினைகள், பாடத்திட்டம், வளப்பிரயோகம், வகுப்பறைத் தொடர்பாடல், ஆசிரியர்கல்வி, பரிகாரக் கற்பித்தல், கல்விச் சிந்தனையாளர் கருத்துக்கள், பள்ளிமுன்கல்வி, கல்வி அபிவிருத்தி, புதிய சீர்திருத்த நோக்கங்கள் என்ற வகையில நூலின் அத்தியாயங்கள் வகுக்கப்பட்டு விரிவாக இத்துறைகள் ஆராயப்பட்டுள்ளன.

ஆரம்ப கல்வித்துறையில போதிய ஆக்கங்கள் இல்லாத இன்றைய நிலையில் எமது கல்விப் பணிப்பாளரின் நூலாக்க முயற்சி எமது பிரதேசத்தில் இத்துறையில் ஒரு மைல் கல் நிகழ்வென்றே கூற வேண்டும்.

ஆரம்பக்கல்வி மாணவர்களை வகுப்பறைக்கு வெளியில் கொண்டு வந்து பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், பாடசாலைப் பூங்காக்களை ஏற்படுத்தி, "பார்ப்போம் - தேடுவோம் - கதைப்போம்" என்பவற்றினூடாகக் கற்றலை விருத்தி செய்தல் போன்ற விடயங்கள் நூலில் ஆராயப்பட்டுள்ளன.

இந்த நோக்கில் ஆசிரியர் தோட்டக்காரரைப் போன்று மாணவத் தாவரங்களைப் பராமரித்து, நீர் ஊற்றி, அழகுற வளர்த்து முதன்மையடையச் செய்ய வேண்டும். ஒரு தாவரம் விதையிலிருந்து வளர்வதைப் போல பிள்ளையையும் தனக்குள் இருந்தே வளர்வதற்கு ஆசிரியர் வழி காட்டலாம். இவற்றுக்கு அமைவான எடுத்துக் காட்டுக்களுடன் "ஆரம்பக்கல்வி" என்ற நூலை கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை வெளியிடுகிறார். அவரது முன்னெடுப்புக்களுக்கு கல்விச் சமூகம் என்றும் நன்றியுள்ளதாக இருக்கும்.

*

காங்கிரஸை.....

(XVI ஆம் பக்கத் தொடர்ச்சி)

தகவலை வெளியிடுவது மூலம் சோனியாவுக்கு அனுதாபத்தை பெற்றுக்கொடுக்க முயற்சிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இவை எல்லாம் இந்திய அரசியலில் சர்வசாதாரணம்.

சோனியாக்கு எதிராக சரத்பவார், பி.ஏ.சங்மா, தாரிக் அன்வர் ஆகியோர் எழுப்பிய பிரச்சினைக்கும் இந்திரா, ராஜீவ் காலங்களில் அவர்களுக்கு எதிராக கிளப்பப்பட்ட பிரச்சினைகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன. முன்பு எழுப்பப்பட்ட பிரச்சினைகள் முற்றிலும் உட்கட்சிப் பிரச்சினைகள். ஆனால் தற்பொழுது இவர்கள் மூவரினாலும் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் நாட்டின் கௌரவம் சம்பந்தப்பட்டவை. பிரச்சினைகளை இந்திரா, ராஜீவ் கையாண்டது போலவே தாமும் கையாள முயற்சிக்கிறார் சோனியா. பிரச்சினைகளின் தன்மையை அவர் எடைபோடத் தவறிவிட்டார். இதனால்தான் தேர்தலுக்கு இன்னும் நான்கு மாதங்கள் மட்டும் உள்ள சமயம் காங்கிரஸ் பிளவுபட வேண்டியதாயிற்று.

அதிகாரப்பகிர்வுக்கு சோனியா ஆதரவு இல்லை

இந்திராவுக்கு இருந்த அரசியல் அனுபவமும் தெளிவும் நாட்டு மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு செயற்படும் திறனும் சோனியாவுக்கு கிடையாது. ஒரு பிரதமரின் மருமகள், ஒரு பிரதமரின் மனைவி என்ற உறவினாலே அரசியல் அனுபவமும் நாட்டை வழிநடத்திச் செல்லும் திறனும் வந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்திரா, ராஜீவ் போன்று மத்தியில் அதிகாரத்தைப் பகிர்ந்த கொள்ள சோனியாவும் தயார் இல்லை. கட்சிக்குள்ளும் அதே நிலைமைதான்.கடந்த மாதம் வாஜ்பாய் அரசு கவுழ்ந்தவுடன் காங்கிரஸ் தலைமையில் கூட்டணி அரசு அமைக்குமாறு சரத்பவார் யோசனை கூறினார். அதனை சோனியா நிராகரித்தார். தன்னையோ அல்லது பிரணாப் முகர்ஜியையோ பிரதமர் பதவிக்கு சோனியா நியமிப்பார் என்றே சரத் பவார் எதிர்பார்த்தார். ஆனால் தானே பிரதமர் ஆவதற்கு சோனியாவே விரும்புகிறார் என்பது உறுதியான போது சரத்பவார்அதிர்ச்சி அடைந்தார். கூட்டணி ஆட்சிக்கு சோனியாவும் அவரது விசுவாசிகளும் சம்மதித்திருந்தால் காங்கிரஸ் தலைமையில் மாற்று அரசு அமைத்திருக்கலாம்.

வெளிநாட்டவர் பிரதமராக வர முடியாது என்பது குறித்து காங்கிரஸ் செயற்குழுக் கூட்டங்களில் விவாதிக்க முயன்ற சமயங்களில் எல்லாம் ஆரம்ப கட்டத்திலேயே அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது என்று சோனியாவுக்கு எழுதிய கடிதத்தில் சரத் பவாரும், பி.ஏ.சங்மாவும், தாரிக் அன்வரும் தெரிவித்தள்ளனர்.இதனை சோனியா இதுவரை மறுக்கவில்லை.

இந்தப் பிரச்சினையை துவக்கத்திலேயே காங்கிரஸ் செயற்குழு சுமுகமாகத் தீர்த்திருந்தால் கட்சி பிளவுபடும் நிலையைத் தவிர்த்திருக்க முடியும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

கர்மயோகி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- பணம், புகழ் மற்றும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் - நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன்தான் சிறப்பாக பணியாற்றுகிறான். இத்தகைய மன நிலையில் ஒருவன் பணியாற்ற வல்லவனாகும் போது, அவன் ஒரு புத்தபகவான் ஆகிவிடுவான். உலகத்தையே மாற்றி அமைக்கக் கூடிய வகையில் வேலை செய்யும் சக்தி அத்தகையவனிடமிருந்து வெளிப்படுகிறது.

நீ சிறந்த மகான் ஒருவரைப் போன்ற மனநிலையைக்கொள், அவராகவே நீ ஆகிவிடுவாய். புத்தரைப் போன்ற மனநிலையைக்கொள். புத்த பெருமானாகவே நீ ஆகிவிடுவாய். உயர்ந்த மனநிலைதான் வாழ்க்கையாக அமைகிறது; வலிமையைத் தருகிறது; உயிர்நாடியாக விளங்குகிறது.

புத்தர், இயேசுகிறிஸ்து போன்ற பெரியோர்களின் வரலாறுதான் இந்த உலகத்தின் வரலாறாகத் திகழ்கிறது. உணர்ச்சி வசப்படாதவர்களும் [illegible] இந்த உலகிற்கு மிகுந்த நன்மையைச் செய்திருக்கிறார்கள்.

-சுவாமி விவேகனானந்தா-

எல்லைகள் கடந்த இன்பம்!

முடிவிலி நோக்கிய முகமும் ~ ஒரு
முறைப்புமே இல்லா அகமும்
அடிபிடி அற்றதோர் மனமும் ~ ஒரு
அகந்தையும் இல்லா இனமும்.

வெடியொலி இல்லா நகரும் ~ ஊத்தை
வெடுக்கது இல்லா உறவும்
மடிதரத் தயங்கா அவளும் ~ தமிழ்
மறையினில் சொன்ன புகழும்

தோல்வியே காணா வாழ்வும் ~ நம்
தோளிலே ஏறா ஆளும்
தாழ்வினை ஏற்கிற பாங்கும் ~ பெரும்
தாக்கமுந் தாங்குநற் போங்கும்

தாவென இறைவனைக் கேட்டேன் ~ அவன்
தந்ததைச் சொல்லவே மாட்டேன்
ஆமெனச் சொல்லுவேன் ஐயா ~ மன
ஆறுதல் பெற்றனே மெய்யாய்!

-கி.குருபரன்.

விடைகள்

IX ஆம் பக்கத்தில் 'சிறுவர்சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

வண்ணத்துப் பூச்சி

8 - 17

விடைதெரியுமா?

1. 72 தேனீக்கள்
2. பல விடைகள் உண்டு:-

48X159=7632
18X297 =5346 ,
12X483=5796,
42X138=5796
28X157=4396
27X198 =5346
39X186=7254

3. பத்துப்பேர்
4. 4மணி 40நிமிடத்துக்கு
5. பத்துலட்சம்.

பூக்கள் புதிர்

றை	தா	அ	ல்	லி	செ	ங்	க	ர்	நி
ன்	ம	ரை	டா	வா	ம்	ல	ம	நீ	த்
கொ	தி	ந்	ம	கை	றோ	சா	த	ழு	தி
தை	சா	ம	ல்	லி	ஜா	ரி	ம்	க	ய
த்	வ்	செ	ளி	ர	பி	பா	செ	ங்	க
ர	வ	ந்	தி	அ	ச்	ல்	ப	யா	ல்
செ	வ்	கா	ய	ரி	சி	ஆ	ம்	ணி	ந
லை	வ	ந்	தி	சூ	ட்	வ	யா	தி	ந்
ல்	மு	கை	மா	தே	டை	ப	ர	றி	ஞ்
ம	ல்	லி	க	ன	கா	ம்	ம்	கு	சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்சிலம்பம்

புதிர்ப் போட்டி இல.104



சொற்சிலம்பம் இல. 104

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: .....

விலாசம்: .....

.....

.....இங்கே வெட்டுக.....

முடிவு திகதி: 04-06-1999

இடமிருந்து வலம்

1. நிகழக்கூடாத நிகழ்வு. 6. சதுரத்தின் பக்கங்கள். 7. கிரகணம். 9. இரப்பு. 11. காலாள் எனப் பொருள் தரும். 13. வணக்கம் கூறுவதை இப்படிச் சொல்வர். 14. நுண்ணிய புத்தி. 15. உலா. 17.உப உணவுப் பொருள். 18. உலோகத்தின் நீண்ட மெல்லிய வடிவம். 20. நூறு. 21. கீழ் அல்ல. 22. பதுமை. 23. மாமரத்தில் ஒட்டுண்ணியாய் வளர்வது.

மேலிருந்து கீழ்

1. இலகுவாக என்பதைக் குறிக்கும். 2. புடைவைத் தினுசுகள் விற்கும் அரச நிறுவனம். 3. நான்கு முழம். 4. தலையெழுத்து. 5. அரசசபை. 8. விருந்தினன். 10. நிலத்தில் விரிப்பது. 12. காலம் போதல். 14. இராமாயண வில்லி. 16. பிரி. 17. தெப்பம். 18. படிப்பு 19. இரத்தல். 20. சபை. 21.மாலை.

சொற்சிலம்பம் 102 இன் விடைகள்

இடமிருந்து வலம்

1. பாதுகாப்பு. 5. சபா. 7. தட்டை. 8. தகவல். 10. வட. 11. சின்னம். 12. தர்மம். 15.கமம். 16. பண். 17. பாரம். 18. தட்டி. 19.சுகம். 20. வீர. 21. மைல். 22 புண்ணியன்.

மேலிருந்து கீழ்

1. பாகவதர். 2. துட்டர். 3. காடை. 4. புதன். 5. சவம். 6. பால். 9. கனதி. 11. சிம்மம் 13. மகரம். 14. பண்டிதன். 16. பட். 17. பாகல். 18. தரணி. 19. சுமை. 20. வீண்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

முதலாம் பரிசு: பொ.சிவானந்தன் சிவன்,
'இல்லம்', மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

இரண்டாம் பரிசு: பொ.நமசிவாயம்,
தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

மூன்றாம் பரிசு: எஸ்.கோகுலன்,
பாரதி லேன்,
சங்கானை.

இவர்கள் மூவருக்கும், சரியான விடை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

முதற் பரிசு: ரூபா 150.00
இரண்டாம் பரிசு: ரூபா 100.00
மூன்றாம் பரிசு: ரூபா 50.00

புதிர்ப்போட்டி இலக்கம் 103 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில் வெளிவரும்.

காங்கிரஸைப் பிளவுபடுத்தி மீண்டும் தலைமைப் பதவியை ஏற்றார் சோனியா!

காங்கிரஸ் தலைவராக மீண்டும் சோனியா காந்தி பதவி ஏற்றுள்ளார். இது சம்பந்தமான அறிவிப்பு கடந்த திங்கட்கிழமை இரவு வெளியானது. செவ்வாய்க்கிழமை காங்கிரஸ் செயற்குழு புதுடில்லியில் கூடி இதனை ஊர்ஜிதம் செய்தது. சோனியா காந்திக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய மூன்று தலைவர்களையும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் வன்மையாகக் கண்டித்துப் பேசினர். கட்சியின் தலைமைப் பதவியை மீண்டும் ஏற்றுக் கொண்ட சோனியாவுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

காங்கிரஸுக்குள் ஏற்பட்ட இந்த உள்கட்சிப் போராட்டம் ஆரம்பத்தில் பெரும் புயலாக உருவெடுத்தது.

மூன்று மூத்த தலைவர்களான சரத் பவார், பி.ஏ.சங்மா, தாரிக்அன்வர் ஆகியோர் காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்டு சோனியா காந்தி காங்கிரஸ் தலைவராக மீண்டும் பதவி ஏற்றதும் இந்தப் புயல் தற்போது ஓய்ந்துவிட்டது.

காங்கிரஸ் செயற்குழு மூன்று தடவைகள் புதுடில்லியில் கூடி கட்சியின் தலைமைப்பிரச்சினைக்கு முடிவு கண்டிருக்கிறது.

முதலாவது தடவை செயற்குழு கூடிய போது தனது ராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்துவிட்டு கூட்டத்தில் இருந்து சோனியா வெளியேறி இருந்தார். இது எவருமே எதிர்பார்க்காத ஒன்று.

இரண்டாவது தடவையாக செயற்குழு கூடிய போது சரத்பவார், பி.ஏ. சங்மா, தாரிக்அன்வர் ஆகிய மூவரையும் காங்கிரஸின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து ஆறுவருடங்களுக்கு இடைநிறுத்தி தீர்மானம்

காங்கிரஸின் தலைமைப் பதவியை மீண்டும் ஏற்றுள்ள சோனியா.

நிறைவேற்றப்பட்டது. சோனியா அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

மூன்றாவது தடவையாக கடந்த செவ்வாய்க்கிழமை காங்கிரஸ் செயற்குழு விசேஷமாகக் கூடியது. சோனியாவே கூட்டத்திற்கு தலைமை வகித்தார். சோனியா மீண்டும் தலைவர் பதவி ஏற்றதுக்கு இந்தக் கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகாரம் தெரிவிக்கப்பட்டது.

சோனியா காந்தி காங்கிரஸ் பதவியை துறந்த சமயம் அவர் எப்படியும் அதனை வாபஸ் பெற்றுக்கொள்வார் என்றே ஊகங்கள் தெரிவித்தன. அதன்படியே காரியங்கள் நடைபெற்றுள்ளன. இது வெறும் நாடகம் போன்றே அரங்கேறி முடிந்துள்ளது.

சோனியா காந்தியின் மிக நெருங்கிய சகாக்களான பிரணாப் முகர்ஜி, அர்ஜுன்சிங் ஆகியோர் பெரியளவில் சோனியா ஆதரவுப் போராட்டங்களை நடத்தினர். சோனியா தனது முடிவை மாற்றிக்கொள்ள வசதியான சூழ்நிலை இதனால் உருவானது.

பரம்பரை அதிகாரத்தை ஏற்படுத்தும் முயற்சி

சோனியா மீண்டும் காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்றதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தற்பொழுது கட்சி பிளவுண்ட நிலையில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த விவகாரத்தை காங்கிரஸ் செயற்குழு கையாண்ட விதம் காங்கிரஸின் உள்கட்சி ஜனநாயகத்தை கேள்விக்குறி ஆக்கிவிட்டது.

ஜனநாயகத்திற்குப் பதிலாக பரம்பரை அதிகாரத்தை காங்கிரஸ் மீண்டும் ஏற்படுத்த முயற்சிக்கிறது என்று குற்றஞ்சாட்டுக்குள் சுமத்தப்பட்டு வருகின்றன. உண்மையில் காங்கிரஸின் மன உறுதி குலைந்து விட்டது. அது தனது கொள்கைகளை இழந்து விட்டது என்றே கூற வேண்டும்.

1969 இல் ஜனாதிபதி பதவிக்கு யாரை நிறுத்துவது என்பதில் போட்டி ஏற்பட்டு நிஜலிங்கப்பா, காமராஜர், சஞ்சீவரெட்டி ஆகியோருடன் இந்திரா காந்திக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. காங்கிரஸுக்குள் அது இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அன்றில் இருந்து உள்கட்சிப் போராட்டமே காங்கிரஸை சீரழித்து வருகிறது.

கடந்த கால நெருக்கடிகளின் போது காங்கிரஸின் அத்தியாயம் முடிந்து விட்டது என்று கூட சில சமயம் நம்பப்பட்டது. ஆனால் சாம்பல் மேட்டில் இருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவையைப் போன்று காங்கிரஸ் மீண்டும் உயிர் பெற்றதை எவரும் மறந்துவிட முடியாது. காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து சோனியா ராஜினாமாச் செய்ததும் மூத்த தலைவர்கள் மூவர் காங்கிரஸில் இருந்து வெளியேற்றப்பட்டதும் அத்தகைய நெருக்கடிகளில் ஒன்றே. சோனியா மீண்டும் காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்றதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு முடிவு கண்டாலும் செப்ரெம்பர் இறுதியில் நடைபெறும் தேர்தல்களில் இந்தப் பிரச்சினை காங்கிரஸுக்கு நிச்சயமாகப் பின்னடைவுகளை ஏற்படுத்தத்தான் போகிறது.

வெளிநாட்டவர் பிரச்சினையை முதலில் பாரதீய ஜனாதாக்கட்சி கிளப்பியபோது மக்கள் மத்தியில் அதற்கு பெரிதாக வரவேற்பு இருக்கவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டிருப்பதுதான் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது. இதனைக் கருத்திற்கொண்டுதான் தேர்தலின் பின்னர் காங்கிரஸ் நாடாளுமன்றக்குழு கூடி புதிய தலைவரைத் தெரிவு செய்யும் என்று சோனியா தற்போது அறிவித்துள்ளார். இத்தகைய அறிவிப்பை விடுப்பதன் மூலம் கட்சிக்குள் இன்னும் இருந்துவரும் அதிருப்தியாளர்களை சமாளிக்கலாம். என்று சோனியா கருதுகிறார்.

வெளிநாட்டவரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சி

வெளிநாட்டவரான அலன் ஒக்டேவியன் ஹியூம் என்பவரால் தொடக்கப்பட்டதுதான காங்கிரஸ்கட்சி. அன்னி பெசன்ட் என்ற பெண் காங்கிரஸின் முதலாவது தலைவராக இருந்தார். அவரும் வெளிநாட்டவரே. ஆனால் இவர்களுக்கும் சோனியாவுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை வெளிநாட்டவர் என்பதுடன் முடிந்து விடுகிறது. கட்சித்தலைவரை வெளியேற்றிவிட்டு தலைவர் பதவியை சுவீகரித்தவர் அல்லர் அன்னி பெசன்ட். நெருக்குதல் காரணமாகவே கட்சித் தலைவர் பதவியை சரத்பவார் சோனியாவுக்கு விட்டுக் கொடுத்திருந்தார்.

உள்கட்சி ஜனநாயகம் வெறும் கேலிக்கூத்து!!

பவாரை ஓரங்கட்ட நீண்ட காலமாக முயற்சி

இந்திராவை எதிர்த்து முதலில் காங்கிரஸில் இருந்து வெளியேறியவர்கள் ஜெகஜீவன்ராம், பஹுகுனா.

1977 தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியடைந்த பின்னர் மேலும் பலர் காங்கிரஸை விட்டு வெளியேறினர். அவர்களில் சரத்பவாரும் ஒருவர். "காங்கிரஸ் - ஐ" என்ற பெயருடன் இந்திரா அமைத்த கட்சிக்குப் போட்டியாக "காங்கிரஸ் - எஸ்" என்ற பெயரில் சரத்பவார் புதிய கட்சி ஒன்றை அப்பொழுது அமைத்தார். மகாராஷ்டிர சட்டப் பேரவைத் தேர்தலில் கூட அந்தக் கட்சி ஆட்சியைப் பிடித்திருந்தது. எனினும் 1981 ஆம் ஆண்டில் சரத் பவார் மீண்டும் காங்கிரஸில் சேர்ந்து விட்டார். இந்திரா இவரைப் பெரிதாக நம்புவதில்லை.

1984 ஆம் ஆண்டு இந்திரா படுகொலை செய்யப்பட்ட பின்னர் ராஜீவ் காந்தி பதவிக்கு வந்தார். ராஜீவின் ஆட்சிக்காலத்தில் ஓரங்கட்டப்பட்ட தலைவர்களில் சரத்பவாரும் ஒருவர். மற்றும் ஒரு தலைவர் நரசிம்மராவ்.

ஒரு ஹெலிக்கொப்டர் விபத்தில் சஞ்சேகாந்தி கொல்லப்பட்டது, இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டது ஆகிய சம்பவங்களால் அரசியலுக்கு இழுக்கப்பட்டவர் ராஜீவ் காந்தி. ஆட்சிப் பொறுப்பை ராஜீவ் ஏற்றவுடனேயே அவருக்கென்று விசுவாசிகள் கூட்டம் ஒன்று உருவானது. இதனாலேயே மூத்த தலைவர்களான சரத்பவார், நரசிம்மராவ் போன்றோர் அப்பொழுது ஒதுக்கப்பட்டனர். தமது கருத்தை சுதந்திரமாக வெளியிட

சோனியா காந்திக்கு ஆதரவாக புதுடில்லியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம். சரத்பவார், பி.ஏ.சங்மா, தாரிக் அன்வர் ஆகியோரைப் பிசாசுகளாக வர்ணிக்கும் முகமூடிகளை அணிந்த கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் காணப்படுகின்றனர்.

இவர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டது.

நரசிம்மராவின் ஆட்சிக்காலத்தில் சரத்பவார் பாதுகாப்பு அமைச்சரானார்.

உலகம் உலவ
என்.பி.சீலன்

ஆனால் அந்தப் பதவியும் குறுகிய காலமே நீடித்தது. மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் பதவியை ஏற்பதற்காக அவர் பலவந்தமாக அனுப்பி வைக்கப்பட்டார். இதனால் அவரது தேசிய அரசியல் தொடர்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

காங்கிரஸ் தலைவர் பதவியை கடந்த வருடம் சோனியா ஏற்ற போது, ராஜீவ்காந்திக்கு எப்படி ஒரு விசுவாசிகள் கூட்டம் உருவானதோ அதே போன்று சோனியாவுக்கும் உருவானது. சரத்பவாரை ஓரம் கட்டும் நடவடிக்கைகள் தொடர்ந்தன. மகாராஷ்டிர காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து சரத்பவாரின் ஆதரவாளர் நீக்கப்பட்டு அவரது இடத்திற்கு பிரதாப்போஸ்லே நியமிக்கப்பட்டார்.

1998 தேர்தலுக்குப் பின்னர் சரத்பவாருக்கு நாடாளுமன்ற காங்கிரஸ் தலைவர் பதவி கிடைத்தது. ஆனால் நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைமைக் கொறடா பி.ஜே.குரியநுக்கு முழு அதிகாரங்களும் வழங்கப்பட்டன. இது சரத்பவாருக்கு அவமரியாதையை ஏற்படுத்தியது. சரத்பவாருக்கும் சோனியாவுக்கும் இடையிலான உறவுகள் விரிசல் அடைய இவையும் காரணமாக இருந்தன.

கடந்த ஆண்டு சோனியாவுக்கு காங்கிரஸ் தலைவர் பதவியை சரத்பவார் விட்டுக் கொடுத்ததும் காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டதும் உண்மைதான். ஆனால் அதற்காக பிரதமர் பதவியை [illegible] என்பது அர்த்தம் இல்லை.

கட்சித்தலைவர் பதவி வேறு; பிரதமர் பதவிவேறு. கட்சித் தலைவர் பதவியை வகித்துவிட்டால் பிரதமர் பதவியை வகிப்பதற்கு தகுதி வந்து விட்டதாக நினைப்பது மகா தவறு" என்று காங்கிரஸில் இருந்து விலக்கப்பட்ட அதிருப்தியாளர்களில் ஒருவரான தாரிக் அன்வர் தெரிவித்துள்ளார். காங்கிரஸுக்குள் உள்கட்சி ஜனநாயகம் அறவே இல்லை என்பது இவரது குற்றச்சாட்டு.

உள்கட்சி ஜனநாயகம்

ஒரு காலத்தில் உள்கட்சி ஜனநாயகம் என்பது காங்கிரஸில்தான் முழுமையாக இருந்தது. ஆனால் இந்திராகாந்தி பிரதமரான பின்பு அது இல்லாமல் போய்விட்டது. கட்சியையும் ஆட்சியையும் தனது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்காக இந்திராகாந்தி முதலில் பலி கொடுத்தது இந்த ஜனநாயக நெறிமுறைகளைத்தான். அன்றிலிருந்து உள்கட்சி ஜனநாயகம் பெயரளவிலேயே காங்கிரஸில் இருந்து வருகிறது.

காங்கிரஸை தமது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்னர் கட்சியின் செயற்பாடுகள் அவரை முன்நிறுத்துவதாகவே அமைந்தன. தமக்கு நெருக்கமானோருக்கு உயர் பதவிகளை வழங்கிவிட்டு அவர்களின் ஆலோசனைகளை மட்டுமே கேட்டு வந்தார் இந்திரா. இதனையே ராஜீவ் காந்தியும் செய்தார். சோனியா காந்தியும் செய்யப்போகிறார்.

எனினும் கட்சியில் நெருக்கடிகள் ஏற்பட்ட சமயம் அரசியல் ரீதியாக மிகவும் முதிர்ந்த தேர்ச்சியும் எதனையும் சமாளிக்கக்கூடிய வல்லமையும் பெற்றிருந்தார் இந்திரா. மக்கள் மத்தியில் அவருக்கத் தனிச் செல்வாக்கு இருந்தது.

பிரணாப் முகர்ஜி

சோனியா காந்தியின் நம்பிக்கைக்குரிய தலைவராக தற்பொழுது இருப்பவர் பிரணாப் முகர்ஜி.

இந்திரா காந்தியின் மறைவுக்குப் பின்னர் பிரதமர் பதவி ஏற்க பொருத்தமான ஆள் என்று அப்பொழுது கருதப்பட்டவர். ஆனால் இந்திராவுக்கும் அவரது குடும்பத்துக்கும் விசுவாசியாக இருந்தவர்கள் பிரணாப் முகர்ஜி பிரதமர் ஆவதைத் தடுத்துவிட்டு ராஜீவ் காந்தியைப் பிரதமர் நாற்காலியில் அமர்த்தினர்.

இதனைச் சகிக்கமுடியாத பிரணாப் முகர்ஜி காங்கிரஸில் இருந்து விலகி தனிக் கட்சி அமைத்தார். எனினும் நரசிம்மராவின் ஆட்சிக் காலத்தில் மீண்டும் காங்கிரஸ் கட்சியில் அவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். மேற்கு வங்காளத்தில் காங்கிரஸ் கட்சி பிளவுபடுவதற்கு பிரணாப் முகர்ஜியே காரணமாக இருந்தார். மேற்கு வங்காள காங்கிரஸ் கட்சித் தலைவர்களான போமன்மித்திரா, பிரணாப் முகர்ஜி ஆகியோர் மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக செயற்படுவதாகவும் அகில இந்திய காங்கிரஸ் தலைமை அதனை ஊக்கிவிப்பதாகவும் குற்றம் சாட்டியே 1988இல் மமதா பனர்ஜி மேற்கு வங்காளத்தில் திரிணாமுல் காங்கிரஸ் என்ற பெயரில் புதிய கட்சி அமைத்தார்.

தமிழ் நாட்டில் 1996இல் காங்கிரஸிலிருந்த பிரிந்து மூப்பனார் தமிழ் மாநில காங்கிரஸ் என்ற பெயரில் புதிய கட்சி அமைத்ததும் மேற்கு வங்காளத்தில் மமதாபனர்ஜி புதிய கட்சி அமைத்ததும் அந்த இரு மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்பொழுது மகாராஷ்டிரத்திலும் இதே நிலைமை ஏற்படப்போகிறது.

சீதாராம் கேசரி பவாருடன் கூட்டு

சரத்பவார் மகாராஷ்டிரத்தில் மிகவும் செல்வாக்கு மிக்க தலைவர். அண்மையில் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட சரத்பவாரும் பி.ஏ. சங்மாவும் தாரிக் அன்வரும் எதிர்வரும் பத்தாம் திகதி புதிய கட்சியொன்றை உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளனர். முன்னாள் காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரியும் இவர்களின் புதிய கட்சியில் சேரப் போகிறார்.

மேற்கு வங்காளம், தமிழ் நாட்டைவிட மகாராஷ்டிரத்தில் காங்கிரஸுக்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது. எதிர்வரும் தேர்தலில் காங்

சரத்பவார் அணியில் சேரும் முன்னாள் காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி.

கிரஸ் தோல்வியடைந்தால் அதற்கான பொறுப்பை சோனியா காந்தி ஏற்கவேண்டி வரும்.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்.

கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பது மட்டுமல்ல சோனியாவின் பாதுகாப்புக்கும் இந்த நெருக்கடி அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

மகாத்மா காந்தியைக் கொலை செய்த பாசிஸ சக்திகள் இன்று சோனியாகாந்தியைக் கொலை செய்யச் சதித்திட்டம் வகுத்துள்ளதாக காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான அர்ஜுன்சிங் தெரிவித்துள்ளார்.

அர்ஜுன்சிங்கும் பிரணாப் முகர்ஜியும் இதனை ஜனாதிபதி கே.ஆர் நாராயணனுக்கும் பிரதமர் வாஜ்பாய்க்கும் தெரியப்படுத்தி சோனியாவுக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் காங்கிரஸ் எதிர்பாளர்கள் இதனை ஓர் அரசியல் 'ஸ்ரண்ட்' என்றே கூறியுள்ளனர். இப்படியான ஒரு

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org